ஸஞ்சிகை 5.

# ஸ்ரீ வாணீ விலாஸினீ.

விச்வாவஸு௵

ஆவணி௴

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1905.

*Copyright Registered.*



Your photograph or that of any friend or relative whose memory you wish to cherish can be beautifully enlarged and mounted in cut out cards measuring about 12″×10″.

**For only Rs. 6.**

The original photograph will be returned uninjured with a copy of the same in gloss arristotype or Platinotype **free of charge.**

Orders should be accompanied by an advance payment of Re. 1 in postage stamp of any country.

**S. K. LAWTON & CO.,**

Photographers, Photo-Engravers & Enlargers

**MANIPPAY, JAFFNA, CEYLON.**

# விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள்சரித்திரம். (படத்துடன் கூடியது). | 409 |
| 2. | பெண்மணி. தில்லையம்பூர் வெங்கடராமய்யங்கார். | 417 |
| 3. | நம்பூரிமடந்தையர். மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ. | 424 |
| 4. | மல்லிகாமாருதம். மோ. க. சடகோபாசாரியார். | 429 |
| 5. | மனிதர்க்குரிய உணவு. அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியர். | 438 |
| 6. | பழிக்குப்பழி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ. | 447 |
| 7. | இந்தியா ராஜஸ்தானங்கள். | 453 |
| 8. | வஸந்தஸேனை. ப. கி. கல்யாணராம சாஸ்திரிகள் பி. ஏ. | 458 |
| 9. | கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறை நூல். ஆத்மநாதன். | 468 |
| 10. | செவ்வாய் தோஷம். கோனெட்டி ஐயர் பி. ஏ. | 475 |
| 11. | உமையவள்பதிகம். லா. அ. வெங்குஸாமி ஐயர். | 492 |
| 12. | துடித்தனச்செட்டு. ச. சுப்ரமண்யசாஸ்திரிகள். பி. ஏ. | 495 |
| 13. | விப்ரம விலாஸம். | 500 |
| 14. | புத்தக வரவு. | 510 |

# 'ஸ்ரீவாணீ விலாஸினீ' பத்திராதிபரவர்களுக்கு

ஐயா,

தங்கள் பத்திரிகையில் கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறை நூல் என்று வெளிவருகின்ற நீதி மொழிகளைச் சிலகாலம் படியாமலே உபேக்ஷை செய்து விட்டேன். உபேக்ஷை செய்ததோடு நில்லாமல் பெரும்பாலும் ஆரியமக்களாகிய நம்மவர்க்கே பயன் தரக்கூடிய இப்பத்திரிகையில் கிருஸ்துவின் ஒழுக்கத்தை ஏன் எழுதுகின்றார் களென்று தங்களையும், விஷயதானஞ்செய்த புண்ணிய புருஷரை யும் சிறிது குறைவாக நினைக்கவும் நினைத்தேன். இந்த என் பிழையைப் பொறுப்பீர்களாக. நீள ஒரு முறை படித்திருப்பே னேல் இங்ஙனம் குறைகூற என்நா எழுந்திராது. கிருஸ்து என்ற நாமத்தைக்காணவே உண்டான அழுக்காறும், அதுபற்றியெழுந்த அறியாமையுமே இதற்குக் காரணமாயின.

இப்பால், இந்நீதிமொழிகளை ஒரு முறைக்கு இருமுறையாகப் படித்த எனக்கு இதை யெப்படியோ நினைத்து ஏதேதோ சொல்லி விட்டோமே யென்ற கழிவிரக்கமும், பெரியோர் நீதிமொழிகளை நிந்தித்தோமே யென்ற பயமும், இப்படியும் ஆங்கிலத்தில் ஓர் அழ கிய நூலுளதோ என்ற வியப்பும், இதனை மொழி பெயர்த்துபகரிப் போர்க்கு (யான் அவரை இன்னாரென்று அறியேனாயினும்) மெய் யறிவும், சாந்தமும், ஜீவகாருணியமும், பிறநற்குணங்களும் அமைந் திருக்கவேண்டுமென்ற எண்ணமும் உண்டாகின்றன.

பரதாழ்வானைத் தூஷித்த குகனையும் இலக்ஷ்மணனையும் போலப் பிறரது குணகுணங்களை யாராயாமல் தோற்றத்தளவு கொண்டு வேறு விதமாகக் கிரகித்த இப்பிழை அம்ம! பெரிதென்று என் மனமே இப்போது என்னை இடித்து வருத்துகின்றது.

ஐயா, பத்திராதிபர் அவர்களே, பேதையாகிய என்னைப் போலவே கிருஸ்து என்ற பெயரைக்கண்டு படியாதொழிந்தார்களு மிருக்கக்கூடுமோ என்ற ஐயப்பாட்டினால் இதனை எழுதலானேன். அன்னோர்க்கு இது பயன்படும்படியாக, முற்பட யாரும் படிக்கும் படியான இடத்தில் இதனைப்பதிப்பிக்க வேண்டுகின்றேன்.

பி. ர. கிர்ஷ்ணமாசாரியன்.



ஸ்ரீமத் சங்கரபகவத்பாத
ஆசார்ய ஸ்வாமிகள்.

OFFICE OF THE ... REGISTERED 16 OCT 1905 MADRAS.




வா. I. விச்வாவஸு௵ ஆவணி௴ ந. 5.

# ஸ்ரீசங்கராசாரியார் சரித்திரம்.

நர்மதை யென்று சொல்லப்படும் நதத்தின் கரையில் மாஹிஷ்மதியென்னும் ஊரில் ஹிமமித்திரனென்கிற ஓர் பிராமணன் இருந்தான். அவ்வந்தணனுக்கு நற்குணங்களுக்கெல்லாமோரிடமாய் ஒரு குமாரன் பிறந்தான். அக்குழந்தைக்கு விசுவரூபரெனப் பெயரிட்டு இளமையிலேயே வேதநெறி வழுவாது அந்தணர்களுக்குரிய ஸகல ஸம்ஸ்காரங்களையும் தகப்பன் செய்வித்தார். அந்த விசுவரூபரும் அதிசீக்கிரத்திலேயே சுருதி, ஸ்மிருதி, இதிஹா

ஸம் முதலிய ஸமஸ்த வித்யைகளிலும் நல்ல பயிற்சியடைந்து பல திக்குக்களிலும் தமது புகழ் பரவிவர வஸித்து வந்தனர். அவருக்கு யௌவனம் வந்ததும் அவருக்குத் தக்க ஓர் பெண்மணியை விவாகம் செய்யக்கருதும் அவருடைய பெற்றோர்கள் பல விடங்களில் விசாரிக்குங்கால் சோணபத்திரை யென்னும் நதியின் கரையில் விஷ்ணுமித்திரன் என்னும் பிராமணனுக்கு ஓர் பெண்குழந்தை யிருப்பதாயும் அவளது நற்குணங்களையும், நற்செய்கைகளையும், ரூபம், லாவண்யம் முதலியவற்றையும், ஸரஸவாணீ என்னும் அக்கோதையினது பெயருக்கிணங்க அவளது கல்வித்திறமையையும், அநேகர்கள் சொல்லக்கேட்டு, அந்நங்கையைத் தங்களது அருமைப்புதல்வனுக்கு விவாஹம் செய்விக்க வேண்டுமென்ற ஆவலுடன், அந்த விஷ்ணுமித்திரன் என்பவருடன் கலந்ததில், அவரும் இந்த யோஜனைக்கிணங்க உடனே கல்யாணத்தை நிச்சயம் செய்து முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்த அவரவரது பந்துக்களையும், சிநேகிதர்களையும் கூட்டி, எல்லோரும் ஆநந்திக்கத் தக்க சுபலக்னத்தில் தமது குழந்தைகளுக்கு விவாஹத்தை நடத்தினர். அவ்விதம் பெரியோர்களாசி கூறத் தம்முள்ளம் களித்துத்தழைக்க அத்தம்பதிகள் மாஹிஷ்மதி நகரம் சென்று உலகத்தார் எல்லோரும் புகழத்தக்க இல்லறவாழ்க்கையை யடைந்து இருவரும் ஒரே மனதாய் இரண்டாவது ஆசிரமமாகிய க்ரஹஸ்தாசிரமத்தின் தர்மங்களை நடத்தி வந்தனர். இவ்வாறு இவர் இப்புவிக்கு ஓர் மண்டனமாயிருந்ததுபற்றி இவருக்கு மண்டனமிச்ரரென்று பெயர் வந்ததுபோலும். பிறகு அவர்கள் பெரியோர்காலஞ் செல்ல ஸ்ரீமண்டனமிச்ரரும் ஒரு ஸமயம் பிதிருதினத்தில் பூர்வ மீமாம்ஸையின் கர்த்தாவாகிய ஜைமினிமஹரிஷியையும், உத்தர மீமாம்ஸையின் கர்த்தாவாகிய வேதவியா

ஸபகவானையும் முறையே விச்வேதேவர்ஸ்தானத்திலும் பிதிருஸ்தானத்திலும் நிமந்திரணத்திற்குவரித்து, வீட்டுவாயிற் கதவைத் தாளிட்டு மஹா சிரத்தையுடன் விதிப்படி சிராத்தத்தை நடத்திவந்தனர்.

இச்சமயத்தில் தான் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகளும் பட்டபாதர் முகமாய் ஸ்ரீமண்டனமிச்ரரின் கல்வியையும், ஒழுக்கத்தையும் கேட்டு வியந்து அவரை ஜயிக்கக்கருதி மாஹிஷ்மதி நகரம் வந்து சேர்ந்தார்கள். அந்நகரம் வந்ததும் மண்டனாசாரியரின் கிருஹத்திணிருப்பிடம் தெரியாமல் அங்கு நர்மதையில் தீர்த்தம் எடுக்கவந்த இரண்டு மாதர்களை நமது ஸ்வாமிகள் விசாரித்தார்கள். இதைக்கேட்டதும் ஸ்ரீமண்டனரின் கிருஹம் தெரியாதவர்களும் இவ்வுலகில் உண்டோவென அவர்கள் வியந்து மொழிந்ததாவது "எந்த வீட்டின் வாயிலில் கட்டியிருக்கும் கூடுகளினுள்ளிருந்தபடியே கிளிகள்கூட வேத விசாரணைகள் செய்துகொண்டிருக்கின்றனவோ அதுவே தான் மண்டன பண்டிதரின் வீடு என்று தெரிந்து கொள்ளுங்கள்'' என்றார்கள். இதைச் செவியுற்றதும் அவ்வடையாளத்தால் ஸ்ரீமண்டனரின் கிருஹத்தையடைந்து அதனது வாயிற் கதவு தாளிட்டிருந்ததைக் கண்டு சற்றும் தயங்காமல் தமது யோகவித்யையினால் ஆகாசமார்க்கமாக உட்சென்றார்.

மண்டனமிச்ரரும் விச்வேதேவரையும் பிதிருக்களையும் பாத்யாதிகளால் நல்வரத்தழைத்தபிரகு பிரத்யக்ஷ மஹாவிஷ்ணு ஸ்தானத்தில் கூர்ச்சத்தை வைத்து அதில் பாத்யத்தை ஸமர்ப்பிக்கப்போகும் தருணத்தில் அங்கு இரண்டு பாதங்கள் இருந்ததைக் கண்டு நிமிர்ந்துபார்த்ததும் ஸ்ரீசங்கரர் எதிரில் நின்றார். இவரைக்கண்டதும் ஸ்ரீமண்டனமிச்ரருக்கு வந்த கோபத்திற்கோரளவில்லை. அவர் மிகவும் கர்மடரானபடியால் சிராத்த காலத்தில் சன்னி

யாவிகளை காணக்கூடாதென்று கர்மகாண்டத்தில் சொல்லியிருப்பதால் தாம் செய்யும் சிராத்தம் இவர் வந்த காரணம்பற்றி வியர்த்தமாகப் போய்விட்டதாக வெண்ணி தமது வாயில் வந்தபடியெல்லாம் இவரை கோபித்துக் கொள்ளவாரம்பித்தார். அவரவ்வளவு கோபத்துடனுரைத்த மொழிகளுக்கெல்லாம் நமது ஸ்வாமிகள் மிகவும் சமத்காரமாய் வெகு ஸாவதானமாய் விடை பகறவே அவருக்குக்கோபமின்னுமதிகரித்தது. இவ்வாறு இவ்விருவர்களுக்கும் நடக்கும் விவாதத்தைக் கண்டு ஜைமினி மஹரிஷி புன்னகை செய்தார். வியாஸபகவானும் ஸ்ரீசங்கரருடைய அபாரமான மஹிமையின் ஸ்வல்ப பாகத்தை ஏகதேசம் ஸ்ரீமண்டனருக்குச் சொல்லி அவர் அவ்வாறு பருஷமான வார்த்தைகளைப் பிதற்றினதற்காக அவர்மேல் கோபித்து, ஸ்ரீசங்கரரை ஸாக்ஷாத் ஸ்ரீமஹாவிஷ்ணுவே பிரத்யக்ஷமாக வந்ததாக வெண்ணி சிராத்தத்தில் பிரத்யக்ஷமஹாவிஷ்ணுஸ்தானத்தில் அவரை நிமந்திரணத்திற்கு வரிக்கும்படி கட்டளையிட்டார்.

உடனே மண்டன பண்டிதரும் சாந்தராகி அவ்வாறே ஸ்ரீபகவத்பாதரை நிமந்திரணத்திற்கழைக்க, அவர் தமக்கு வாத பிக்ஷைதான் வேண்டுமெனவே, அதற்கிசைந்து அன்று சிராத்தம் முடிந்தபிறகு மறுநாள் முதல் வாதிக்கலாமென்று தீர்மானித்து, அவ்வாதத்திற்கு மத்தியஸ்தராக இருக்கும்படி அங்கு வந்திருந்த இரண்டு மஹரிஷிகளையும் ஸ்ரீமண்டனாசாரியார் பிரார்த்தித்தார். அதற்கவர்கள் "உங்களுடைய ஸஹதர்மசாரிணியாகிய ஸர்வகாலாவல்லி ஸரஸவாணியை மத்யஸ்தையாக வைத்து விவாதத்தை நடத்துங்கள்" என்று மொழிந்துவிட்டு சிராத்தம் முடிந்தவுடன் மண்டனமிச்ரரால் வழிகொண்டு விடப்பட்டு அந்தர்த்தானமாயினர்கள்.

மறுநாள் ஸூர்யோதயமானதும் ஸ்நானம் முதலிய வற்றைச்செய்துகொண்டு ஸ்ரீமண்டனமிச்ரரும் ஸ்ரீசங்கர பகவத்பாதரும் வாதத்திற்கு ஆயத்தமானூர்கள். ஸரஸ வாணியை மத்யஸ்தத்திற்குக் கூப்பிடவே அவள் வந்து இரண்டு மாலைகளை யெடுத்து இருவர் கழுத்திலும் போட்டுக்கொள்ளும்படி செய்து இதில் யார் கழுத்திலுள்ள மாலை வாடுகிறதோ அவர்களுக்கு ஜயமில்லை என்று கூறி தமக்குரிய வீட்டுக்காரியங்களைக் கவனித்து வந்தாள். இவ்விருவர்களும் வாதமாரம்பிக்குமுன் யார் தோல்விபடைந்தாலும் அவர் மற்றொருவருடைய ஆசிரமத்தை தழுவுகிறதென்று சபதம் செய்துகொண்டார்கள். அதாவது ஸ்ரீ சங்கரர் தோல்வியடைந்தால் தமது ஆசிரமமாகிய ஸந்யாஸத்தை விட்டு விட்டு ஸ்ரீமண்டனருடையதான கிரஹஸ்தாசிரமத்தை யடைகிறதென்றும் அவ்வாறே ஸ்ரீமண்டனர் தோல்வியடைந்தால் தமதாகிய கிரஹஸ்தாசிரமத்தை விட்டுவிட்டு ஸ்ரீசங்கரரதாகிய ஸந்யாஸத்தை கிரஹிக்கிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். உடனே இவ்விருவருக்கும் மஹத்தான விவாதம் தொடங்கிற்று. மண்டன மிச்ரர் எடுத்த ஒவ்வொரு கக்ஷியையும் நமதாசார்யஸ்வாமிகள் பிரமாணங்களுடன் கண்டித்து வந்தார்கள். இவ்வற்புத காட்சியைக் காணுதற்காகவே தேவதைகளெல்லோரும் அவ்விடத்திலாகாசத்தில் வந்து நின்ருர்கள். இவ்வாறு ஐந்தாறு நாள், நித்யகர்மானுஷ்டான ஸமயங்கள் தவிர மற்றய காலங்கள் முழுவதும் இடைவிடாது மிகவும் ஆச்சரியகரமான தர்க்கம் நடந்தது. ஜைமினீய பூர்வமீமாம்ஸா ஸூத்ரங்களுக்கு ஜைமினியே கண்டு வியக்கத்தக்க அபூர்வமான அர்த்தங்களையெல்லாம் ஸ்ரீ சங்கரர் எடுத்துபந்யஸிக்கவாரம்பித்தார். இச்சமயத்திலோர் நாள் காலையில் மண்டனமிச்ரர் கழுத்திலிருந்த மா

லே வாடுதலேயடைந்தது. ஆகாயத்திலிருந்த தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அன்று பகலில் ஸரஸவாணீ யும் இவ்விருவர்களேயும் ஸாப்பாட்டுக்கழைக்கும்பொழு து, ஸ்ரீமண்டனரை வைச்வதேவத்திற்கும் ஸ்ரீசங்கரரை பிக்ஷைக்குமழைப்பதற்குப் பதிலாக இருவரையும் பிக்ஷை க்கென்றே அழைத்தாள். இதைக்கேட்டதும் மண்டன மிச்ரர் தாம் தோல்வியடைந்ததை யறிந்து தாம் துவக் கத்தில் செய்துகொண்ட பிரதிஞ்ஞைக்கேற்பதாம் ஸந்யா ஸம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றெண்ணி ஸ்ரீசங்கரா சார்யஸ்வாமிகளேயே வெகுவாக நமஸ்கரித்துத் தமக்கு ஸதுபதேசம் செய்து கிரம ஸந்யாஸம் ஈந்தருளும்படி யாசித்தார்.

இதற்குள்ளாக ஸரஸவாணீயும், தான் பூர்வ ஜன்ம த்தில் ஸரஸ்வதீ தேவியென்றும், முன்னொருகாலத்தில் பிரம்ஹலோகத்தில் வேதகோஷம் நடந்த ஸமயத்தில் துர் வாஸமஹரிஷியானவர் வேத மந்திரத்தை ஸ்வரம் தப்பிச் சொன்னதால் தான் சிரித்துவிட்டதாகவும், அதற்காக அம்மஹரிஷி மிகக்கோபித்து தன்னே பூலோகத்தில் ஜனி க்கும்படி சபித்ததாகவும், பிறகு துர்வாஸரை மிருதியாகப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதில் பூலோகத்தில் பிரம் மாவின் அம்சாவதாரமாகிய ஸ்ரீமண்டன மிச்ரருக்குதான் பத்தினியாகி ஸாக்ஷாத் மஹாதேவனினவதாரமாகிய ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் வந்து மண்டனரை ஜயித்து தம து புகழைபரவச்செய்ததும் தனக்கு சாபவிமோசனமாகு மென்று அம்மஹரிஷி வரக்களித்ததாயும், அக்காலம் இப் பொழுது நேர்ந்துவிட்டதால் தனது பதி ஸந்யாஸம் வா ங்கிக்கொள்வதற்கு முந்தியே தான் இப்பூமியை விட்டு பிரம்மலோகம் செல்வதாயும் இவ்விருவர்களுக்கும் சொல் லி, தான் ஆகாசத்தில் கிளம்பினுள்.

உடனே நமதாசார்யஸ்வாமிகள் வன துர்க்காமந்திரத்தால் அச்சரஸவாணியைக் கட்டி நிறுத்தி மொழிந்ததாவது 'மண்டனமிச்ரருக்குப்பத்தினியானது பற்றி தாங்கள் அவருடைய அர்த்தசரீரமாகிறீர்கள். ஆதலால் தங்களுடனும் வாதுபுரிந்து தங்களையும் வென்றால்தான் மண்டனரை பூருவாக ஜயித்ததாகவாகிறது' என்று சொல்லி அந்த ஸரஸ்வதீதேவியையும் தம்முடன் வாது புரியவழைத்தார். வாகீசுவரியும் அதற்கிணங்க, அது முதல் ஒருவரையொருவர் ஜயிக்கவேண்டுமென்கிற ஆவலுடன் இவ்விருவர்களுக்கும் கணப்பொழுதேனு மிடைவெளியின்றி பதினேழு நாள் வரையில் யாவரும் கேட்டு வியக்கத்தக்க அத்யத்புதமான விவாதம் நடந்தது. ஒவ்வொருவருடையவும் புத்தி சாதுர்யத்தையும், வாக்கின் காம்பீர்யத்தையும், அவர்கள் எடுத்துரைக்கும் சாஸ்திரத்தின் நூதன விசேஷார்த்தங்களையும் கேட்டு ஆதிசேஷனென்ன, பிருஹஸ்பதிதேவரென்ன இவர்களே ஆச்சரியப்பட்டார்களென்றால் மற்றயவர்களைப் பற்றிச்சொல்லவும்வேண்டுமோ. இரவில்கூட ஓய்வின்றி இராப்பகலாக இவ்வாக்குவாதம் நடந்தது. ஸரஸ்வதீ தேவியும் ஒவ்வொன்றாக எல்லா சாஸ்திரங்களிலும் நமது ஸ்வாமிகளை பரிக்ஷித்தாள். இவ்வாறு பதினேழுநாளில் ஸமஸ்த சாஸ்திரங்களும் முடிந்து, எல்லாவற்றிலும் ஆசார்யஸ்வாமிகள் வெற்றியடையவே, ஸரஸ்வதி எண்ணியதாவது. "இவரோ மிகவும் பாலஸந்யாஸியாயிருக்கிறார். இவர் கிருஹஸ்தாசிரமத்தில் எக்காலத்திலும் இருந்தவராகத் தோற்றவில்லை. ஆதலால் இவருக்கு ஸ்திரீ விஷய ஞானம் இருக்கக் காரணமில்லை. ஆகவே இவரைக்காம சாஸ்திரத்தில் பரிக்ஷித்தால் இவர் தோல்விபடைந்து விடுவரென்பதில் தடையில்லை" என்று எண்ணி அவ்வாறே செய்ய நிச்சயித்து, ஆசார்யஸ்வாமிக

ளை க்காமசாஸ்திரத்தில் கேள்விகள் கேட்கவாரம்பித்தாள். அதற்கு ஸ்ரீசங்கரர் பதிலுரைக்கக் கூடாமல் தயங்கினர். ஏனெனில், பதிலுரைத்தால் தமதாசிரமத்திற்கு விரோதமாயிருக்கிறது. பதிலுரைக்காமலிருந்தாலோ இவருக்கு அந்த சாஸ்திரத்தில் பரிசயமில்லையென்று ஸர்வஞ்ஞர் (எல்லாம் தெரிந்தவர்) என்னும் பெயருக்கு குறைவுண்டாகிறதுமன்றி தாம் தோல்வியடைந்ததாகவும் ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறது. இவ்விருவிதச் சங்கடத்தையுமுத்தேசித்து இக்காம சாஸ்திரத்தில் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகர தமக்கு ஒரு மாதமவகாசம் கொடுக்கவேண்டுமென்று ஸரஸ்வதியைக் கேட்டுக்கொண்டு, தாம் திரும்பிவருமளவும் அவளை அவ்விடத்தில் தானே இருக்கச்செய்து நமதாசார்யஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுடன் வெளியில் ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டார்கள்.

இவ்வாறு ஸஞ்சரிக்குங் காலத்தில் ஓர் ஊரில் திவ்யமங்களமான சரீரத்தையுடையவோரரசன் இறந்து கிடப்பதையும் அவனது சரீரத்தைச் சுற்றிலும் அவனது அந்தப்புரத்தினர்களான நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் புரண்டழுவதையும் கண்ணுற்று ஸ்வாமிகள் தமது முக்கிய சிஷ்யரான பத்மபாதாசார்யரை நோக்கி பின்வருமாறு கூறினர்கள். "இவ்வரசனோ திவ்யமான ஜோதிஸ்ஸையுடைய சரீரத்தோடிருந்திருக்கிறன். இவனுக்கோ அந்தப்புரத்தில் நூற்றுக்கணக்கான பத்னிகள் மிகவும் ரூபலாவண்ய ஸௌந்தர்யத்துடன் கூடினவர்களாகவிருக்கிறர்கள். ஆகையால் இவ்வரசனுடைய சரீரத்தில் பிரவேசித்து, சிறிது காலம் இவனது ராஜ்யபாரத்தை வகித்து, இவனது பத்னிகளிடமிருந்து காமசாஸ்திரத்தில் அனுபவ ஞானத்தையடைந்து, பிறகு இவனுடைய புத்திரனுக்கு ராஜபட்டத்தைச்சூட்டி, மீளவும் முன்போல ஸ்வசரீரத்தையடைந்து, மாஹிஷ்மதிக்குச்சென்று, ஸரஸ்வதியை இச்சாஸ்திரத்திலும் வெல்லவேண்டுமென்று தோன்றுகிறது" என்றர்கள்.



# பெண்மணி.

## 3-ம் அத்தியாயம்.

### பெண்மணியின் பெற்றோர்கள் காலநிலையும் ஜீவனம் செய்துவந்த விதமும்

தஞ்சை மகாநகரில் சரபோஜி மகாராஜன் அரசாண்ட 33௵ காலத்தில் பின்பாதியிலும் சிவாஜி மகாராஜன் அரசாண்ட 24 ௵ காலத்திலும் பெண் மணியின் பெற்றோர்கள் வீற்றிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் இல்லற நடாத்தும் தசையிலிருந்தார்கள். அக்காலவழக்கப்படி பெண்மணியின் தந்தைக்கு அவரது முப்பதாவது வயதில் விவாகம் நடந்தது. இத்தாய் தந்தையர்களுக்குள் தாய் 13 வயது தகப்பனிலும் குறைந்தவளாயிருந்தாள்.

3. தந்தையாரின் நாமதேயம் அழுதையங்கார் என்பது. தாயின் பெயரோ அலர்மேல்மங்கை. இப்பெயரைக் கிராமவழக்கத்தின்படிகொச்சையாய் அலமேலு என்று சொல்வதுமுண்டு. தந்தையின் கூடப்பிறந்த சகோதரர்கள் இருவர். சகோதரிகள் மூவர். இவர்கள் வாசம் செய்து வந்தது குடமுருட்டி ஆற்றின் வடகரையிலுள்ள ஓர் சிற்றூர். அது குடமூக்கெனும் கும்பகோண நகரத்திற்கு தெற்கிலுள்ளது. தூரம் ஒரு காதவழிக்கு உட்பட்டதேயாம். அழுதாரம் தந்தையாரை புத்திரப்பேறில்லாத வெங்கடராயரென்பவர்

தத்துபுத்திரராக்கிக்கொண்டார். அக்காலத்தில் அரசனிடம் கிராமத்தின் தலைமையதிகாரம் நேரே பெற்றவர்கள் ஐயங்காராக இருந்தாலும் அவர்களை ராயரென்று அழைப்பது வழக்கம். அரசனிடம் போய் ஒரு நாரத்தங்காயளவுள்ள அரக்குண்டையையே கிராமத்தலைவர்கள் தங்கள் அதிகாரத்திற்கு ஒரு குறியாகப் பெற்றிருப்பது வழக்கம். இவ்வரக்குண்டையில் அரசனது முத்திரை யிடப்பட்டிருக்கும். இக்கிராமாதிகாரிகள் வைத்ததே ஊரில் சட்டமாய் நடைபெறும். பெரும்பாகமான பூமிகள் கிராமங்களில் சாகுபடியின்றிக்கிடக்கும். கிராமாதிகாரி அவனுக்கு இஷ்டமானபடி வரி வசூல் செய்து வருஷத்திற்கு ஒருமுறை தஞ்சைபுரிக்குப் போய்த் தீர்வைப்பணம் கட்டி வருவான். அவன் கணக்கைச் சரிபார்ப்பவரில்லை. அவன் வாய்மொழியே வேதவாக்கியம். அக்காலத்தில் இந்நாளிற்போலக் கிராமாதிகாரிகளும் கிராமத்தாரும் பொய்பேசமாட்டார்கள். பொய் என்றால் நடுங்குவார்கள். வஞ்சனையும்,சூதும் கொஞ்சமும் அவர்களிடம் மருந்துக்கு மகப்படா.

3. பெண்மணியின் தந்தை சுவீகாரவழியாய் வேறு கோத்திரத்திற்கு வந்தவர். அவர் ஜநந கோத்திரத்துப்பிதாவும் சகோதரர்களும் தங்கள் தங்கள் சரீரப்பிரயாசையால் சாகுபடிசெய்து காலக்ஷேபம் செய்து வந்தார்கள். ஆனதினால் அந்தக்குடும்பம் ஏழைக்குடும்பமேயாம். பிள்ளை புகுந்தகுலம் செல்வாக்கும் அதிகார தோரணையுமுள்ளகுடும்பமேயாம். ஆனால் நன்செய் புன்செய் நிலங்களும் வீடு வாசல் மனைக்கட்டு நிலங்களும் தோப்புகளும் அக்குலத்தவர்க்கிருந்தன. அக்காலத்தில் பிராமணர்களுக்குள் விவாகம் நடத்த வேண்டுமானால் அதற்குப் பிடிக்கும் செலவு உயர்ந்த பக்ஷம் 10 அல்லது 15 ரூபாய்களேயாம். அக்காலத்தில் அந்த அந்த ஊர்களில் விளையும் நெல் புன்செய் தானியங்களிவைகளெல்லாம் அந்த அந்த ஊர்களிலேயே வாங்குவாரின்றி மடிந்துகிடக்கும். ஆறுகளில் பாலங்களும் வண்டிபோகும் பெரும்பாதைகளும் அவ்வளவா யிருந்ததில்லை. கால்வழிதான் முக்கியம். காய் கறிகளும் நெய் பால் மோர்களும் வேண்டியமட்டும் அகப்படும். பசுக்களுக்கும் எருமைகளுக்கும் இறையிலி நிலங்கள் மேய்ச்சலுக்குத் தாராளமாயிருந்தன. அக்காலத்தில் விலைகொடுத்து இவைகளை வாங்குவோரில்லை. துவரம்பருப்பு ஒரு ரூபாய்க்கு பட்டணம் படியால் 30படி கிடைக்கும். உழுந்து பயறு கடலை முதலியவைகளும் ஏராளமாயும் மலிவாயும் கிடைக்கும். நெல் ஒரு கலம் அதாவது 12 மரக்கால் 2 அணா அல்

லது 4 அணுவுக்குத் தாராளமாய்க் கிடைக்கும். நெய் ஒருசின்னப் படி ஒன்று அல்லது ஒன்றரை அணுவுக்குத் தாராளமாய்க்கிடைக் கும். பலபேர் என்னிடமிருக்கிறது என்னிடமிருக்கிறதென்று வலு வில் கொண்டுவந்து கொடுப்பார்கள். ஒருவரிடம் கேட்டுவிட்டு மற் ருெருவரிடம் வாங்கிவிட்டால் பெரியமனஸ்தாபம் நேர்ந்துவிடும். இவ்வாருக ஜீவனேபாயம் அக்காலத்தில் நடைபெற்றது. புருஷர்க ளெல்லாம் சரீரப்பிரயாசப்பட்டு சாகுபடி செய்தும் அடிமையாட்க ளிடம் வேலைவாங்கியும் வருவார்கள். சாகுபடி செய்ய முடியாமல் பிரதிகிராமங்களிலும் நிலங்கள் பாழாய்க் கிடப்பதுண்டு. கிராமா திகாரிகள்ஒரு ஓலையில் நிலத்தின் பெயரை எழுதி இறப்பில்கொண் டுபோய்ச் சொருகிவிடுவார்கள். அந்தவீட்டுக்காரர் அந்தச்சீட்டில் கண்டபூமியைத்தான்சாகுபடிசெய்யவேணும். கூரைவீடுகள்அதிகம். நிலங்களுக்குப்பட்டா அப்பொழுது ஏற்படவில்லை. கிராமபூமிகளிற் பெரும்பாகம் ராஜாவின் பூமியாகவேயிருக்கும். அதைச் சாகுபடி செய்வார்கள் குடிவாரம் எடுத்துக்கொண்டு ராஜவாரத்தைக் கிரா மாதிகாரியிடம் அளந்து விடுவார்கள். அவைகளையெல்லாம் சேர் த்துக்கிராமாதிகாரி மிக வருத்தப்பட்டு நாணயமாக்கிஅரண்மனைக் கனுப்புவார்.

4. ஸ்வீகாரத் தகப்பனர் பெண்மணியின் தகப்பனருக்குப் பாலியத்தில் கொஞ்சம் வேதாத்தியயநம் மட்டும் செய்துவைத்தார். கிராமங்களில் பள்ளிக்கூடங்களில்லாமையால் படிப்பிக்கவில்லை. ஸ்நாநம் சந்தியாவந்தனம் முதலிய நித்திய கருமங்களில் வழுவாதி ருப்பதும் சோம்பேறிகளாயிராமல் பூமிகளின் சாகுபடியில் உழைப் பதுமேமுக்கியமாயிருந்தது. நூற்றில் இரண்டொருவர்தாம் ஓலை எழுதவும் படிக்கவும்தெரிந்தவராயிருப்பார். கடிதத்தை அக்காலத் தில் கண்ணுற் கண்டவனும் கிடையாது. இப்படியாயினும் சொல் நம்பிக்கையும் நன்னடத்தையும் வேறு வீட்டுப்பெண்களை கண்ணெ டுத்துப்பாராமையும் பெண்மணியின் தந்தையிடம் குடிகொண்டிரு ந்தது. அவருக்கு ஓலையில் தன் கையெழுத்துமட்டும் போடத்தெ ரியும். ஆனல் வாய்க்கணக்கு நன்ருய்த் தெரியும். அக்காலத்தில் ஆண்பிள்ளை பெண்பிள்ளைகளின் உடைகள் வெகு கேவலமாயிருந் தன. வலங்கைமான் உதிராகப்புடவை, ஒன்று அல்லது ஒன்றரை ரூபாய்க்குக்கிடைக்கும். புருஷர்களுக்குக் கம்பிவேஷ்டி அரைரூபா ய்க்கு அகப்படும். கவுபேனமும் இடுப்பு வேஷ்டியுந்தான் முக்கியம். மேல்வேஷ்டி விசேஷகாலங்களில்தான் தரிப்பார்கள். சணப்பு,

கணப்புச்சட்டி, கோரைப்பாய் [பெண்கள்கோரைபிடுங்கிவந்து கையால் முடைவது] இவைகளுண்டு. துப்பட்டி அவ்வளவாயில்லை. அதற்குப்பதிலாக கோரைப்பாயை உபயோகிப்பதுண்டு. பெண்மணியின் தந்தை சாகுபடி வேலைகளில் வெகு சமர்த்தர். அடிமைகளை வைத்துக்கொண்டு நன்ருய் உழைப்பார். கைராசியு முண்டு. இவர் கையால் விதை விதைத்தால் அமோகமாய் நெல் விளைவதைக் கண்டு இவரை முதலில் ஒரு பிடி விரையை விரைத்துவிட்டுப்போம்படி எல்லாரும் வேண்டுவார்கள்.

5. பெண்மணியின் தாய் கும்பகோணத்தில் பிறந்தவள். பாலியத்தில் தாயும் பிறகு தந்தையும் பரகதியடைந்தமையால் தானும் தன்னுடைய தமக்கை யொருத்தியுமே மிகுந்தவர்கள். தமக்கை பிறந்த வூராம் கும்பகோணத்தில் ஐயங்கார் தெருவில் வாழ்க்கைப்பட்டு ஒருஆண்பிள்ளையைப்பெற்று அவன் கல்வியிற்றேர்ந்து மிகுந்த செல்வாக் குள்ளவனுயிருந்தான். பெண்மணியின்தாயை எடுத்து வளர்த்தகிழவி ஒருநாள் கோயிலுக்கு உற்சவக் காட்சி காணவந்திருந்த பெண்மணியின் தந்தை [பிரமசாரி)யை நேரிற்பார்த்துக் களிப்புற்றுநான் வளர்க்கும் அருமைப்பெண்ணை உனக்குக்கொடுக்க நினைத்தேன்; கருடன் மேலே வட்டமிடுகிருர்பார். நீயும் அவளும் சுகமாயிருப்பீர்களென்று சொன்னுள். இதைக் கேட்டுவிட்டுத் தந்தையாம் பிரமசாரிதன்னூருக்கு மறுநாட்காலையிற்போய்விட்டார். ஒருவாரம் சென்றபிறகு பெண்மணியின்தாயைவளர்த்ததாய் அவ்வூருக்குப்போய் வெங்கட்டராயராம் கிராமாதிகாரியைக்கண்டுபிடித்து 'உங்கள் ஸ்வீகாரபுத்திரன் அமுதனுக்கு நான்வளர்க்கும் அலமேலுவைத்துளசிதீர்த்தத்துடன் தாரைவார்க்கிறேன். கலியாணம் செய்துகொள்ள வேணும் நான் ஏழைபணமில்லை கலியாணச்செலவு உங்களுடையது' என்று சொன்னுள். ராயர் 'அப்படியே ஆகட்டும் சகுனம் பார்த்துக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லி அக்கிழவிக்குத் தமது வீட்டில் உபசாரத்துடன் அன்னமளித்து மறுநாட்காலையில் கும்பகோணத்திற் கனுப்பிவிட்டார். 15நாளைக்குள் விவாகசங்கதியைப்பற்றி நிச்சயிப்பதாகவும் சொல்லியனுப்பினுர். கலியாணவார்த்தை பேசிக்கொண்டு கிழவியை ஊருக்கு வெளியே வழியனுப்பிக் கொண்டிருக்கையில் இவர்களுக்கு இடமாய் க்ஷேமகாரி வந்து தலைமேல் வட்டமிட்டார். இதைக்கண்டு இதுவே நல்ல சகுனம் நல்ல சகுனம் என்று ராயர் ஸந்தோஷத்துடன் சொன்னுர். கிழவியும் வடதிக்கை நோக்கிக் குடமூக்கிற்கு (கும்பகோணத்திற்கு)ச் சென்ருள். பிறகு

ராயர் விவாகத்தைச் சீக்கிரம் நிறைவேற்றச் சங்கற்பங்கொண்டார். தெய்வானுகூலமும் அவர் சங்கற்பத்திற்கு ஒத்ததாயிருந்தது. ராயர் ஒரு சுபதினத்தில் குடந்தைக்கேகி அமுதராலயத்தில் அமுதனை வலம்வந்து சேவை செய்து கொண்டிருக்கையில் சாதுக்கள் கோஷ்டியில் பெண்மணியின் தாய் அலமேலுவின் விவாக விஷயத்தைப்பற்றி ஓர் வயோதிகர் பேசினர். ராயர் 'அடியேனுக்குச் சம்மதம். தேவரீர் எழுந்தருளிப் பேசியதின் வழியாது' என்று கேட்டனர். கிழவி அதோ மண்டபத்திலிருக்கிறாள் 'தேவரீரைக் கண்டவுடனே' அடியேனை விவாக நிச்சயத்திற்கு அனுப்பினாள், என்று அந்தவயோதிகர் பதில் சொன்னார். இராயர் உடனே அங்கிருந்துகொண்டே ஒரு நல்லநாளைப் பெரியோரைக் கொண்டு நிச்சயித்து வதூவரர்களின் பொருத்தமும் பார்க்கவே எல்லாம் சரியாகவேயிருந்தன. அடுத்த ஏழாநாள் விவாகம் என்று நிச்சயிக்கப்பட்டது. கிழவியும் அலமேலுவுடன் ராயர்ஊருக்கு வந்துதாரைவார்ப்பிப்பதாய்ஒத்துக் கொண்டாள். அக்காலத்தில் நகைப்பேச்சும் வெள்ளிப்பாத்திரப்பேச்சும் ஜவுளி தினிசுப்பேச்சும், இக்காலத்திற்போல் நடைபெற்றதில்லை. குறித்தசுபமுகூர்த்தத்தில் விவாகம்நிறைவேறியது. கலியாணக் குதூகலம் போஜனத்திலும் ஆசீர்வாதத்திலும் உதகசாந்தியிலுமேமுக்கியமாயிருந்தது. வாணவேடிக்கை மத்தாப்பு பாண்டுவாத்தியம் இவைகள் அக்காலத்தில் இருந்ததில்லை. மேளவாத்தியமட்டுமுண்டு. மேல்மூட்டமில்லாதமூங்கில்வளை கொம்புள்ள பட்டுக்குஞ்சம் கட்டியபல்லாக்கில் ஊர்கோலம் வருவதுண்டு. தென்கலை வடகலை யென்கிறபேதம் அப்பொழுது எள்ளளவுமில்லை. ஒருகிராமத்தில் ஒரு வீட்டில் விசேஷமென்றால் எல்லோருமொருமித்து ஒரே குடும்பக்காரியம்போல் அவ்விசேஷத்தை யாதொரு குறைவுமின்றி நிறைவேற்றுவார்கள். நகைதினுசுகளும் ஆடை தினுசுகளும் அக்காலத்தில் இருந்ததில்லை. திருமங்கிலியமும் மஞ்சள் சரடுமே முக்கிய ஆபரணங்கள். வீடுகளில் மண்பாண்டங்களும் கற்சட்டியுமே முக்கியம். பெண்மணியின் தாய் பிறகு 3-4 வரு சென்றமேல் தெருண்டாள். திரட்சி முகூர்த்தமும் சுப முகூர்த்தத்தில் நிறைவேறியது. இம்மாது பெண்மணியின் பெற்றோர்கள் அக்கால நிலைக்குத் தக்கபடி இல்லறம் நடாத்தும் நிலையிலிருந்தார்கள். பெண்மணியின் தந்தையின் வீட்டில் நிலங்களை உழுது நன்செயில் நட்டுப்பயிர் செய்யவும் புன்செயில் தானியம் விளைவிக்கவும் ஒருபறையரின் குடும்பத்தார் அடிமைச் சாசனப்படி வேலைபார்த்து வந்தார்கள். அப்பறையர் குடும்பத்திற்கு ராயர் படி கொடுத்துவந்தார்.

6. பூமியில் விளையும் தானியத்தைக்கொண்டே பெண்மணியின் பெற்றோர் காலக்ஷேபம் செய்துவந்தார்கள். தந்தையும் தாயும் இவ்வாறு நாணயமாயும் சீராயும் காலக்ஷேபம் செய்துவந்தார்கள். அந்தநாள்களில் குடும்பவழக்கு,நிலத்தகரார்,அடிதடிச்சண்டை,முதலியவைகள் நேரிடுவதேயில்லை. கிராமாதிகாரியின் வார்த்தைதான் ஊரிலுள்ளார்க்கு அரசன் கட்டளைபோல் நடந்துவந்தது. எந்த வழக்கும் ஒரேநாளில் கிராம எல்லைக்குள் பைசலாகிவிடும். குரோதம், பிடிவாதம், அகங்காரம், இவைகள் அக்காலத்தில் ஜனங்களிடத்தில் தோன்றும் முன் அழிந்துவிடும். இக்காலத்திற்போல் நிலையாயிருந்து தீங்குவிளைப்பதில்லை. கொலை, கொள்ளை, கன்னக்களவு முதலிய குற்றங்களும் அக்காலத்திலில்லை. பெண்களினிடத்தில் சரீரசுத்தமும் மனத்தூய்மையும் காரியங்களின் சீரும் நிலைபெற்றிருந்தன. மழைமாரியும் சரீரசுகமும் ஆயுள்பெருக்கமும் நன்றாய் வேரூன்றியிருந்தன. பொருள் ஆசையும், காமஇச்சையும் அதிகமாயிருக்கவில்லை. "மூத்தோர்சோல் வார்த்தையமிர்தம்" என்கிறபடியே வீட்டிலுள்ளபெரியோர் வார்த்தையையே சிரமேற்றூங்கி ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும், பருவகாலம், அஷ்டமி, ஏகாதசி, சதுர்த்தசி இவைகள் ஒழிந்தகாலங்களில்தான் தங்கள் காம இச்சையை இருவரும் நிறைவேற்றுவார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் திடமாயும் அழகாயும் தீர்க்கமான வயதுள்ளவைகளாயுமிருப்பதுண்டு.

7. பெண்மணியின் தகப்பனார் நல்ல ஆஜானுபாகு, ஜாதியடியால் 7அடி உயரமுள்ளவர். அகன்ற மார்பும் நீண்டநாசியும் விசாலமான நெற்றியும் உள்ளவர். தாயும் இவர்வடிவுக்கேற்ற உயரமொன்றுமட்டுமில்லாமல் அழகிலும் வடிவிலும் நிறத்திலும் திருமகள்தான் என்னலாம்படி விளங்கிக்கொண்டிருந்தாள். அவள் தன் புருஷன் தோளினுயரமுள்ளவளாயிருந்தாள். இவள் அழகையும் குணத்தையும் கிராமத்தில் புகழாத பிராமணர்களும் வேறு ஜாதியாருமில்லை. சோளம், கம்பு, கேழ்வரகு. தானியங்கள் அக்காலத்தில் புன்செய்நிலங்களில் அதிகம் பயிரிடுவதுண்டு அக்கொல்லைகளில் காக்கை கிளி முதலிய பறவைகளை ஒட்டிக்கொண்டு புருஷன்மார் மூங்கில் நட்டு அதின்மேல் உயரத்தில் கட்டப்பட்டுள்ள குச்சில் பகலிலும் இரவிலும் தங்குவதுண்டு. வீட்டிற்கு வந்துபோவதும் உண்டு. பெண்கள் தங்கள் புருஷன்மார்க்குஅன்போடுஆகாரத்தைத்துவையல்முதலியவைகளோடு கொல்லைகளுக்கு கொண்டுபோய்க் கொடுப்ப

துமுண்டு. கொண்டுபோகும் பாத்திரங்கள் சுவர்ணபாத்திரங்களேயாம். (சுவர்ணபாத்திரம்=மட்கலயம்) புருஷர்களின் நிலை சாகுபடிகாரியத்திலிருப்பினும் பெண்களுக்கு அவர்களிடத்திலிருந்த அன்பு அதிகமாயும் சிறந்ததாயும் கபடமில்லாததாயுமிருந்தது. புருஷன்மாரும் அப்படியே அன்பிற்குறையாமல் கூடிக்குலாவிவந்தார்கள். இவ்விதமாய்ப்பெண் புருஷர்களின் மனம் ஒருவழிப்பட்டுக்களிப்படைந்தபடியால் அவர்களுக்குச்சனிக்கும் சந்ததிகளும் ஒன்ருல் ஒன்றும் குறைவின்றி அரோகதிடகாத்திரர்களாய் வாழ்ந்துவந்தார்கள். கெட்டவழிகளிற் பொருள் தேடிவாழ்ந்தவர்கள் அக்காலத்தில் இல்லை. பெண்மணியின் தாய்தந்தையர்கள் ஊரார்அறிய நடுத்தெருவில் நின்று பேசியதையாவது கோபங்கொண்டதையாவது யாரும் பார்த்ததில்லை. அதிகாலையில் நதியில் நீராடும்வழக்கம் இவர்களிடத்திலிருந்தபடியால் பித்தநோயும் சுரநோயும் இவர்களை எட்டிப்பார்க்க அஞ்சித் தூரவே நின்றுவிட்டன. இவ்வாறு பெண்மணியின் தாய் தந்தையர் சுகவாழ்விலிருந்தார்கள்.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"

தி. வேங்கடராமஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

இன்னும் வரும்.

# நம்பூரி மடந்தையர்.

மலைநாட்டில் [மலையாளம்] வசிக்கும் வேதியர்களாகிய நம்பூரிகளைப் பற்றி அயல்நாட்டில் வாழ்வோர்க்கு விசேடமாக ஒன்றும் தெரிந்திராது. ஆதலின் இப்போது நாம் அந்நம்பூரி மடந்தையர்களைப் பற்றி ஒரு சிறிது உரைப்பான் துணிகின்றோம். மலைநாடானது மலைகளால் இந்தியாவின் மற்றைப் பிரதேசங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பது போலவே ஆசாராதிகளிலும் வேறுபட்டிருக்கிறது. அவர்கள் தேசத்திற்கென்று ஆதியில் ஏற்பட்ட ஆசாரங்களையே கைக்கொண்டொழுகுவதில் அவ்வேதியர்க்கு ஆவலேயன்றி நவீனச்சீர்திருத்தங்கள் எவ்வளவு நலத்தைத் தரத்தக்கனவா யிருந்தாலும் அவற்றைக்கைக் கொண்டொழுகச்சிறிதும் ஆவல்கொள்ளார்கள். ஆயினும் அவர்கள் மற்றை நாட்டவர்களைவிட, யோக்கியம், ராஜபக்தி, ராஜ ஆக்ஞைக் கடங்கியிருத்தல் முதலியவைகளிற் சிறந்தவர்கள். அநேகமாக அவர்களில் யாரும் ராஜாங்க உத்யோகத்தை நாடிச்செல்வதில்லை. மற்றவர்கட்கு ஊழியம் செய்யவும் இசையார்கள். நகர்க்கு நெடுந் தூரத்தேயிருக்கும் குக்கிராமங்களில் உள்ள தங்கள் நிலபுலங்களைப்பார்த்துக்கொண்டு ஒராடம்பரமுமின்றி உண்டு உடுத்து வாழ்வதிலேயே அவர்கட்குத் திருப்தி. நம்பூரி மடந்தையர்களின் நடையுடைபாவனைகளும் மற்ற நாட்டிலுள்ள பிராமணப் பெண்களுடைய நடையுடை பாவனைகளைப்போலிரா. அரையில் கட்டுவது

வெள்ளேமுண்டுதான். அவர்களுடைய ஆபரணங்களோ மிகவும் சொற்பம். மற்றநாட்டு பிராமண ஸ்திரீகள் அணிவதுபோல கம்மல் ஜிமிக்கி முதலிய வேலைப்பாடுள்ள ஆபரணங்களொன்றையும் அவர்கள் அணிவதில்லே. நம்பூரிகளுக்கு நல்ல சொத்துண்டு. ஆயினும் லக்ஷாதிபதியினுடைய மனேவியும் கையில் மண்வளையலேயன்றி வேறென்றையும் தரியாள். ஏனென்ருல் அது வழக்கமல்ல. மற்றநாட்டுப் பெண்களேக் காட்டிலும் நம்பூரிமடந்தையர்கள் அதிக தேககாந்தியுடையவர்கள். அழகிலும் அப்படியே. அம்மடந்தையர் எப்போதும் வீட்டின் உட்புறத்திலேயேயிருப்பர். பிறதேசத்துப் பெண்களேப்போல கோயில் குளம் முதலிய இடங்களில் இவர்களேக் காணமுடியாது. சமைத்தல் முதலியவீட்டுக் காரியங்களேயே செய்துகொண்டு அந்தப்புரமே கதியாக அடங்கியிருப்பர்.

ஆனல் மற்ற தேசத்துப்பெண்களேவிட அவர்களிடத்தில் ஒரு விசேட குணமிருக்கின்றது. அக்ஷராப்பியாசமும் கணக்குக்குரிய வாய்ப்பாடுகளும்(ஆண் குழந்தைகட்குப் போலவே) ஒவ்வொரு பெண்குழந்தைக்கும் இளமையிலேயே கற்பித்துத்தீரவேண்டும் என்று ஒரு ஏற்பாடு இருக்கிறது. வயது வந்தபின்னும் கற்கவேண்டுவது அவசியம் என்று ஏற்படாவிட்டாலும் கற்பதனல் பாதகமில்லேயென்ருவது ஏற்பட்டிருக்குமாயின் மிக நேர்த்தியாக இருந்திருக்கும். அப்படியிராமையால் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலே இலவசமாய்க்கற்பிக்கும்பள்ளிக்கூடங்கள் இருந்தபோதிலும்கூட அவர்கள் அங்கே போகத்துணிவதில்லே. இவ்வாறு அந்தப்புரத்திலேயே அடங்கியிருக்கும் வழக்கம் மற்ற நாட்டிற்போல மகமதியருடைய சம்பந்தத்தால் ஏற்பட்டதன்று. அவர்களின் பிரவேசத்திற்கு நெடுநாள்களுக்கு முன் முதற்கொண்டே அந்நாட்டில் வழங்கி வரும் சுபாவ வழக்கம்.

நம்பூரிகளின் விவாக வழக்கம் விநோதமானது. அவர்களுள் ஒரு குடும்பத்தில் ஜேஷ்டன் மட்டும்தான் விவாகம் பண்ணிக்கொள்வான். மற்றவர்களோ என்ருல் ஆயுள் முழுவதும் பிர்மசாரிகளாகவாவது நாயர் மாதர்களின் சம்பந்தம் உடையவர்களாகவாவது இருந்து காலத்தைக் கழிப்பார்கள். ஆதலின் விவாகத்திற்குரிய ஆண்களைவிடக் கன்னிகைகள் அதிகமாய் ஏற்பட்டுவிடவே அந்நம்பூரி வரன் தனக்குப்பெண்கொடுக்கும் மாமனரிடமிருந்து அவரால் நிர்வகிக்க முடியாதபெருந் தொகையை வரதக்ஷிணையாக எதிர்பார்க்கிருன். அவ்வாறு தக்ஷிணைகொடுக்க அநேகருக்குச் சாத்தியமாகாது. ஆதலின் இருபது, இருபத்தைந்து வயதாகியும் விவாகம் ஆகப்பெருத அநேக கன்னிகைகள் அவர்களுள் உண்டு. பால் குடிக்கும் போதே மணம்புரிந்து தவழ்வதற்கு முன்பே தாலியிழந்து தவிக்கும் மற்றை நாட்டுத்துராசாரத்தைவிட அந்நாட்டு ஆசாரம் சிறந்ததென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. கேட்டவரதக்ஷிணையைக்கொடுக்க மார்க்கமுள்ள நம்பூரியும் தன்பெண்ணிற்குப் பதினைந்து வயதாவதற்கு முன் விவாகம் செய்விப்பதில்லை. பால்யவிதவைகளை அங்கே காண்பதே அரிதாகலின் விதவாவிவாகம் இல்லாதிருப்பதை ஒரு குறைவாகக் கருதக்கூடாது. வைதவ்யம் மிகக் கண்டிப்பாய் அநுசரிக்கப்பட்டபோதிலும் மொட்டையடித்து விகாரப்படுத்தும் வழக்கம் கிடையாது.

விபசாரவிஷயமானது மகாதோஷமென்று அவர்களால் கருதப்பட்டிருக்கின்றது. அது விஷயமாக இக்காலத்திலும் கூட அவர்கள் செய்யும் தண்டனை மகா கொடூரமானது. ஒருத்தியைப் பற்றி சந்தேகம் உண்டானவுடனே அவளை வேருக ஒதுக்கிவைத்துவிடுவார்கள். பின்னர் அக்கம் பக்கங்களில் அவ்விஷயத்தைப் பற்றி விசாரித்து

உண்மையென்று ருசுவாகுமாயின், அதை அரசனுக்கும் குலகுருவுக்கும் கிரமப்படி அறிவிப்பார்கள். உடனே சில பிராமணர்களும் இராஜவம்சத்தைச்சார்ந்த ஒருவரும் அதை விசாரிப்பதற்குப் பஞ்சாயத்தாக ஏற்படுவார்கள். அந்தப் பஞ்சாயத்தார் அக்குற்றவாளியின் வீட்டிற்குப் போய் அவ்வீட்டு வேலைக்காரியையும், குற்றவாளியையும், தீர்க்கமாக விசாரிப்பார்கள். அநேகமாக விசாரணையில் உண்மை வெளிவந்துவிடும் என்கின்றார்கள். ஆனால் அவ்விசாரணை விரைவில் முடிந்துவிடாது. பலநாட்கள் செல்லும். சில தருணங்களில் மாதக்கணக்காவது முண்டு. அதுவரை பஞ்சாயத்தாருக்குப்படிச்செலவு கொடுக்கும்பாரம் அக்குற்றவாளியின் வீட்டுக்காரரையே சாரும். விசாரணை முடியும் வரையில் அவ்வீட்டுக்காரர்கள் மற்றவர்களுடன் சம்பந்தமின்றி ஒதுக்குண்டிருக்கவேண்டும். அக்குற்றத்தில் வீட்டாருக்கு எவ்விதமாகவாவது சம்பந்தம் உண்டென்று ஏற்பட்டால் குற்றவாளியோடு அவர்களையும் ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுவார்கள். இவ்வாறு ஒரு மடந்தையின் ஆராய்ச்சியில்லாச் செயலின் நிமித்தமாக கௌரவம் பொருந்திய அநேக குடும்பங்கள் கெட்டுச் சீரழிந்து போயிருக்கின்றன. கற்பழித்தவன் இன்னவன் என்பதை அவள் வாயிலிருந்தே வரவழைக்கப்பஞ்சாயத்தார் முயலுவார்கள். வெளியாய் விடுமாயின் அவனுக்கும் அதுவேகதி. இப்படி அவனையும் தண்டனைக்குள்ளாக்குவது ஒரு வித நன்மையென்றே சொல்லலாம். வேறுநாடுகளில் ஒருவன் ஒருத்தியைக் கற்பழித்துவிட்டால் கற்பழிந்த ஸ்திரீயைப்புறமாக்குவதே யன்றி அவளை அந்நிலைமைக்குக் கொண்டுவந்த அத்துஷ்டனை ஒன்றும் செய்கிறதில்லை. (மனு சாஸ்திரத்திலும் இருவரும் தண்டிக்கப்படவேண்டுமென்றே கூறப்பட்டிருக்கின்றது). ஆகவே இவ்விதத்திலும்

மலைநாட்டு வழக்கம் மாண்புடைத்தே. விசாரணை முடிவில் கற்பழிந்தவள் என்று எற்படுமாகில் அவள் கற்புக்கு அடையாளமாக அதுவரையில்தாங்கி இருந்த குடையைப் பிய்த்தெறிந்து,மாங்கல்யத்தை அறுத்துக்கைவளையல்களையுடைத்து விதவைபோலாக்கி ஓட்டிவிடுவார்கள். பட்டர் ஜாதியைச் சார்ந்த ஒரு பிராமணன் அவள் பிரஷ்டை என்பதைப்பகிரங்கப்படுத்துவான். பின்னர் இவள் இந்துக்களுக்கென்றேற்பட்டிருக்கும் குளம், கோயில், கூபங்களில் பிரவேசிக்கக்கூடாது. இப்பிரஷ்டைகளிற் சிலர், தங்களை ஆதரவுடன் எற்றுக்கொள்ளக்கருதும் சிலமகம்மதியர்களிடத்தும் கிறிஸ்தவர்களிடத்தும் அடைக்கலம் புகுகின்றார்கள். பின்னர் சன்மார்க்கநெறியில் நின்றொழுகக்கருதுகின்ற சில பிரஷ்டைகளைப் போஷித்தலுக்கு திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்தார்கள் பூர்வாசாரப்படி கட்டுப்பட்டிருக்கிறார்கள்.

மீனாக்ஷி சுந்திரம்.

# மல்லிகாமாருதம்.

அக்காலை காளிந்தி மல்லிகையை நோக்கி; "ஸகி, மல்லிகே, நீ ஊகித்தது உண்மையென்றேவைத்துக்கொள்வோம். ஆகிலும் இப்பட்டாடை தீவாந்தரத்திலிருந்தல்லவோ கொண்டுவரப்பட்டது. அங்ஙனம் தீவாந்தரத்திலிருக்குமொரு மாதரசி இவரது சித்திரத்தை வரையுமாறு அவளிவரையங்கு எங்ஙனம் பார்த்திருக்கக்கூடும்? அன்றியும், நீ புகல்வது பிரத்தியக்ஷவிருத்தமாயிருக்கின்றது. எங்ஙனமெனில், இன்றுகாலையில்தான் நீ அவரைக்கண்டாய். அக்காலை அவர் இத்தகைய அவஸ்தைகளை அடைந்திருக்கவில்லையே. அங்ஙனமிருக்க இப்பொழுது அவர் அந்நியமாதின்பால் ஆவலுற்றிருக்கின்றாரென்று மொழிவதும் மாண்போ?" என, மல்லிகையும், தன்னுள் சிறிது தேர்ச்சியடைந்து, மீண்டுமவளை நோக்கி, "ஸகி, காளிந்தி, நீ புகன்றவண்ணமே தீவாந்தரத்திலிருக்கும் சித்திர சிற்பியொருவனால் எழுதப்பட்ட இப்படம் ஏதோ புழுக்குறித்த எழுத்து நியாயம் போல் தற்செயலாய் மாருதனது வடிவத்தையொத்திருக்கின்றதென்றே வைத்துக் கொள்வோம். ஆகிலும் அவர் அணிந்திருக்கும் முத்துமாலையும் அம்மாலையினிடையில் துலங்கும் இந்திரநீலமணிப்பதக்கமும் எழுதப்பட்டிருக்கின்றனவே. அஃதெங்ஙனம் கூடும்?" என, காளிந்தி, "மிகத்தேர்ந்தவொருசித்திர சில்பியினது தூலிகையானது கலைகளில் தேர்ந்த கவிஞரது கவிதைபோல் புறக்கண்ணாலறியவொண்ணாத உலகிலுள்ள யாவையையும் அகக்கண்ணாலறிந்தெழுத வல்லதன்றோ?" என, மல்லிகை, "ஸகிகாள், நீங்கள் என்ன சொன்னபோதிலும் அவர் விஷயத்தில் எனக்கு நம்பிக்கையுண்டாகவில்லை.

என்றாலும் அவரைக்கண்ணுறக்காமுற்றவெனக்கு நல்லவேளையாய் அவரது சித்திரப்படம் கிடைத்தது. இதைப் பார்த்துக்கொண்டேனும் எனக்குற்ற விரகதாபத்தை யொருவாறு தணித்துக் கொள்ளுகிறேன்." என்றனள்.

அக்காலை அருகிலிருந்த நவமாலிகையும் அவளை நோக்கி, "ஸகி, அவர் விஷயத்தில் நீ கிஞ்சித்தேனும் மனந்தளரவேண்டாம். 'நீர் புகன்றது பொய்' என்று நீ அவர் பேரில் பழி கூறினதைப் பொறாது இப்பொழுது தான் மொழிந்தது முற்றும் மெய்யென்று வற்புறுத்துமாறு அவரே இச்சித்திர ரூபமாக உனக்குக் கட்புலனா யிருக்கின்றார். ஆதலின் அவரது ஆரத்தை அணிந்ததுபோல் இவ் வம்பரத்தையும் உன் மார்பின்மீது தரித்துக்கொள்." என்றுரைத்து அப்பட்டாடையை அவள் மீது போர்த்தினாள். போர்த்தவே மல் லிகைக்கு ஓர்வித சரீராநந்தமுண்டாகி அவள் தன்னுள் நினைத்துக் கொண்டதாவது: "ஆகா! இப்பட்டாடை எனது கொங்கை மேல் படவே இதற்கு முன் இதனை யான் தரித்திருந்ததுபோல் ஒருவித நினைவு உண்டாகின்றது. தவிர இச்சித்திர ரூபமான தயிதன் எனதங்கத்தில் படவே ஸாக்ஷாத் வல்லபனது சரீரஸங்கம் கிடைத்ததுபோலவே எனது சரீரமெங்கும் ஆநந்த புளகாங்கிதமா யிருக்கின்றது." என்றிங்ஙனம் இவள் ஏதோ சிந்தையுற்ற மனத் தினளாயிருந்ததைக் கண்ணுற்ற நவமாலிகையும் அவளை நோக்கி, "ஸகி, மல்லிகையே, யாது காரணம்பற்றிக் கண்களில் நீர்த்துளிகள் ததும்ப ஏதோ சிந்தையுற்ற சித்தமுடையாள் போல் காணப்படு கின்றாய்?" என்று வினவ, மல்லிகை, "ஸகி, யான் என் செய் வேன்? இத்துகூலத்தைக் கண்டவுடன் ஏதோ இழந்த பொருள் கிடைத்ததுபோல் ஓர்வித நினைவுண்டாகி இப்பொழுது என் மனது எண்ணாதெல்லாம் எண்ணுகின்றதே." எனவே, நவமாலிகை காளிந் தியை நோக்கி, "ஸகி காளிந்தி, இது என்ன ஆச்சரியமம்மா! தீவாந்தரத்தினின்று திவ்வியாம்பரம் வந்ததென்ன! அதனைத்தனது தனதடத்தில் போர்த்தவே இழந்த பொருள் கிடைத்ததுபோல் நந்தோழிக்கு நினைவுண்டாவதென்ன!" என, காளிந்தி, "இது ஓர் விந்தையா? எப்பொருள் எவருக்குரித்தோ; அப்பொருள் எத்துணை துலையிலிருப்பினும் எக்காலத்திலாவது அவரையே நாடிச்சேரும். ஆகிலும் இவ்வம்பரத்தைத் தரித்தவுடன் இதற்குமுன் இதனைத்

தரித்திருந்ததாக இவட்கு ஓர் நினைவு உண்டாகிறதென்பது வியக்கத்தக்கதே. அன்றியும் மல்லிகையின் சங்கதி ஒவ்வொன்றுமே வியக்கத்தக்கதா யிருக்கின்றது. எங்ஙனமெனில், அவள் மனிதருடலிலிருந்து உதிக்காது மல்லிகைச் செடியினடியினின்றன்றோ உதித்தனள். மார்பினில் தரித்த மாலை ஸஹஜ மாலையன்றோ?'' என்றிங்ஙனம் இவர்கள் மூவரும் ஏகாந்தமாக வுரையாடிக்கொண்டிருக்கையில் பிரதீஹாரி மல்லிகைபாலுற்று, "பெருமாட்டி, கங்கேளிகை வழிகாட்ட யாரோ பிரமரகன் என்பானொருவன் பொற்கயிறு கோத்து செந்தணல்போலொளிவீசும் ஓர் இரத்தினத்தைக் கையிலேந்தித் தமது கேளீகிருகத்தின் வாயிலில் காத்துக்கொண்டிருக்கின்றனன். அவன், தாம் இன்றுகாலையில் யோகீச்வரியினது ஆசிரமத்தில் தற்செயலாய்ச் சந்தித்த மகாபுருடனால் அவர் தங்கியிருக்குமிடத்திலிருந்து தம்மாட்டு அனுப்பப்பட்டிருப்பதாக கங்கேளிகை மொழிகின்றாள்.'' எனவே, மல்லிகை தனது தோழிகள் இருவருடைய முகத்தையும் நோக்கவே, நவமாலிகை "ஓகோ! சரிதான்,அந்தப்பிரமரகன் என்போன் ஜயன் மாருதனுக்கு அந்தரங்கச்சேவகன்; நமது கங்கேளிகைக்கு ஆசைநாயகன். ஆகையால் அவன் ஜயன் மாருதனிடமிருந்து ஏதோ சில முக்கியமான சமாசாரம் கொண்டுவந்திருக்கின்றானென்று நம்புகிறேன்.'' எனவே, மல்லிகை உடனே அவனை உள்ளேவரச் செய்யும்படி கனகலதையெனும் அவ்வாயில்காப்பவளுக்கு உத்திரவளிக்க, அங்ஙனமே அவளதாணைப்படி பிரமரகன் உள்ளேவருகையில் தன்னுள் நினைத்துக்கொண்டு வந்ததாவது :—

இதற்கு முன் பரிசயமில்லாத மந்திரித்தலைவரது மாளிகைக்குள் பிரவேசிக்க நமது ஆசைநாயகி கங்கேளிகை வாயிலாயினள். இஃதிருக்கட்டும். நமதய்யன் மாருதனது உதாரகுணத்தை என்னென்று சொல்வேன்! தீவாந்தரத்தினின்றும் நமது அரயனுக்குக் கிடைத்து அவர் இவருக்குப்பரிசாகவனுப்பிய பாலசூரியனைப்போல் பிரகாசிக்கின்ற இப்பதுமராகமணியையும் மல்லிகையம்மாளுக்குக் கொடுக்கின்றாரல்லவா? அல்லது, அவர் தனது உயிரைக் காட்டிலும் உயர்ந்த ஸஹஜஹாரத்தையே யளித்திருக்கையில் இச்சீமந்தமணியை யீவதும் ஆச்சரியமோ? ஐயோ! பாவியவ் வர்த்தகத் தலைவன் என் அநர்த்தத்துக்குக் காரணமான

அச்சித்திர கன்னிகையை அரசனுக்குப் பரிசாக வளித்தனன் ? அம்மகாராஜனும் என் அப்படத்தை நம்மையன் மாருதனுக்கு அனுப்பவேண்டும் ? ஏனெனின், சிங்களத்தீவினின்று வந்த அஜ்ஞாத குலகோத்திரையான அச்சித்திரக் கன்னிகையைக் கண்ணுற்ற மாத்திரத்தில் ஐயன் மாருதன் வெந்தழலால் வெந்த மனத்தினன் போல் வானத்தை நோக்கிக்கொண்டு வேதனைப் படுகின்றாரே." என்றிவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டு வந்த பிரமரகனை பிரதீஹாரி நோக்கி, "அப்பா! பிரமரகா, இதோ! எங்கள் சீமாட்டி." என்று மல்லிகையைச் சுட்டிக் காட்டவே, பிரமரகனும் (தன்னுள்) "ஓகோ! நமது யஜமானன் கையில் வைத்துக்கொண்டு கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும் சித்திர படத்தில் எழுதப்பட்டிருப்பவள் இந்தவம்மாள்தான். அதில் சந்தேகமில்லை. ஆகா! என்ன சௌந்தரியம்! என்ன லாவண்ணியம்! என்ன காம்பீர்யம்! ஐயன்மாருதன் இத்தையல்மீது மையலுற்றிருப்பதுபோல இம்மங்கையையும் அவர்பால் ஆவலுறச் செய்தாலன்றோ மன்மதனுக்கு அப்பெயர் சித்திக்கும்." என்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டு சற்று தூரத்திலிருந்துகொண்டே மல்லிகைக்குத் தண்டனிட்டனன். அக்காலை மல்லிகையும் (தன்னுள்) "இவன் மாருதனது பரிஜனன் என்பதினாலேயே இவனிடத்தில் எனக்கு விசேஷ கௌரவபுத்தியுண்டாகின்றது. அவரிடத்தில் இருப்பவர் எல்லோரும் மகா பாக்கியசாலிகள். ஏனென்றால் அவர்கள் காயா மலரின் காந்தியையுற்ற அவரது திருமேனியை இடைவிடாது தடையின்றித்தரிசித்துத் தாங்கள் கண் படைத்ததற்குத் தக்க பயனைப் பெறுகின்றார்களன்றோ?" என்று நினைத்துக்கொண்டு, தன்னை வணங்கிய அந்தப்பிரமரகனைத் தக்கபடி விசாரிக்குமாறு மல்லிகை காளிந்திக்குக்கட்டளையிடவே, காளிந்தியும் அவனைநோக்கி, "அடா! பிரமரக, ஏன் தூர விலகி நிற்கின்றாய் ? சற்று சமீபத்தில் வா." என, பிரமரகனும் தன்னுள், "ஓகோ! இவர்களுக்கு எனது பெயரும் ஏற்கனவே தெரிந்திருக்கிறது." என்று எண்ணிக்கொண்டு மல்லிகையினருகுற்று அவளது வடிவின் தோற்றத்தை நன்கு உய்த்து நோக்கி, "ஓகோ! தாமரைத்தண்டுபோல் வெளுத்திருக்கும் இவ்வம்மாளுடைய கபோலங்களைப் பார்க்கையிலேயே இவ்வம்மாளும் மதனவேதனையால் துன்புற்ற தநுவை யுடையவள் போலக்

காணப்படுகின்றாள். அன்றியும் மேரு வெற்பின் சிகரத்தில் துலங்கும் வெண்ணீர்க் கங்கைபோல் இப்பெருமாட்டியினது கொங்கைகளின்மீது ஐயன் மாருதனது முத்துமாலை துலங்குகின்றது. ஆகா! முத்து மாலை மட்டுமல்ல; நாதன் மாருதனும் சித்திர ரூபமாக இவளது உத்தரீயத்தின் ஓரத்தில் ஒளி வீசி நிற்கின்றாரோ!" என்று வியப்புடன் நோக்கிக் கொண்டிருக்கக் காளிந்தியும் அவனை நோக்கி, "பிரமரக, ஏது இப்பிற்பகல் நேரத்தில் இங்கு நீ யுற்றது? ஐயன் மாருதன் யாதுபுரிந்து கொண்டிருக்கின்றார்? அவர் நின்பால் ஏதேனும் சங்கதி சொல்லியனுப்பியிருக்கின்றாரோ?" என்று வினவவே, பிரமரகன் மொழிந்ததாவது:— "இரத்தினபதி யெனப்பெயரியவோர் வணிகர்கோமான் எம்மரயனுக்கு இரண்டு அரும்பொருள்களை யீந்தனன். அவைகளில் உத்தமநாரிகள் உச்சியில் உவப்புடனணிவதற்கு உசிதமான விலையற்ற ஸீமந்தமணியொன்று. மற்றொன்று மாந்தாது மனதைக்கவரும் வனப்புவாய்ந்த சித்திரரூபமானவநிதாமணியுமே தான்." எனவே, மல்லிகை தனது மார்பின்மீது தரித்திருக்கின்றபட்டாடையிலிருக்கும் மாருதனது சித்திரத்தைச் சடக்கென மறைத்துக்கொண்டு மீண்டும் பிரமரகன் புகல்வதைப் பேராவலுடன் கேட்டுக்கொண்டிருந்தனள். பிரமரகன் மீண்டும் மொழிந்ததாவது: "அவ்வணிகர் தலைவனும் எம்மண்ணல்மாட்டு இவ்விரண்டு அரும்பொருள்களையு மளித்துக் கூறியதாவது: 'அரயர் பெருமானே, இச்சிறந்த வஸ்துக்கள் இரண்டும் தந்தச் சிமிழில் அடக்கம்செய்த விலையற்ற பட்டாடையொன்றும் ஆகிய இம்மூன்று வஸ்துக்களும் இலங்கைக்கு வடகிழக்கு மூலையிலிருக்கும் சிங்களத்தீவில் மாந்தர் சஞ்சரிக்கவொண்ணாதவோர் ஜீர்ணாரணியத்தினிடையில் வானத்தையளாவி நிற்கும் ஓர் ஆலமரத்தினடியில் ஓர் பெரிய சிலையின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்தன. வியாபார விஷயமாய் யாங்கள் கப்பலேறிக் கடலில் யாத்திரை செய்தபொழுது கடும்புயலுண்டாகி எங்கள் கப்பலை அத்தீவின் ஓரத்தில் ஒதுக்கவே அங்குத் திரிந்த வெங்களால் இவ்வஸ்துக்கள் கண்டெடுக்கப்பட்டன.' என்று அரயனிடம் அவைகளையளித்துத் தக்க பரிசு பெற்று வர்த்தகன் தனதிருப்பிடம் செல்லவே அவனிபனும் அச்சீமந்த மணியையும் சித்திர கன்னிகையையும் ஐயன் மாருதனுக்கு அன்புடன் அளிக்குமாறு என்னிடம்

கொடுத்து அனுப்பினர். அவைகளை யான் அவரிடம் அளிக்கவே. ஐயனும் அதிகவாதரத்துடன் பெற்றுக்கொண்டதுமல்லாமல் அச் சித்திர கன்னிகையை மிக்கவன்புடனும் ஆச்சரியத்துடனும் இமையாக்கண்ணுடன் உய்த்து நோக்கிக் கொண்டிருந்தார்." என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே மல்லிகை மற்றொரு மாதின் மேல் மாருதன் மையல் கொண்டதாக வுன்னி மனம் விண்டு பெருமூச்செறிந்து காளிந்தியை நோக்கி, (தனிமையில்) "ஸகி, காளிந்தி, நீ புகன்ற மொழிகள் முற்றும் பொய்யாய் முடிந்தன." எனவே. காளிந்தியும், "அம்மா, மல்லிகே, இவன் வாய்மொழியை முற்றும் கேட்பதன் முன்னமே நீ இங்ஙனம் மனந்தளர்வது சரியல்ல." என்று மல்லிகையைத் தேற்றவே, பிரமரகன் மீளவும் மொழிந்ததாவது: "பின்னர் அவர் அச்சித்திர கன்னிகையை ஸத்தியமான கன்னிகையென்றே நினைத்து அச் சீமந்தமணியை அச்சித்திரத்தின் நெற்றிதனில் புனையப்போனார்". எனவே, மல்லிகை, "ஸகி, காளிந்தி, என்? இவன் வாய்மொழி முற்றும் கேட்டாய்விட்டதல்லவா? இனி யான் இவ்விடம் விட்டெழுந்து செல்லுகிறேன்." என்று மனஞ்சலித்துக் கூற, அக்காலை நவமாலிகை மிக்க விசனத்துடன், (தன்னுள்), "ஓ! மன்மதபகவானே, யாதுமறியாத பேதையாகியவோர் குலமாதை இங்ஙனம் அம்மாருதன் மாட்டு மையலுறச் செய்து அவரைமட்டும் மற்றொரு மங்கைபால் மனவேட்கையுறுமாறு புரிவது உனக்கு அழகோ?" என்று எண்ணிக்கொண்டிருக்கக் காளிந்தியும் மல்லிகையைநோக்கி, "ஸகி, உனக்கேன் இவ்வளவு பதற்றம்? அவன் இன்னும் சங்கதியை முடிக்கவில்லையே." என்று தேறுதல் செய்து, பிரமரகனை நோக்கி, "பிரமரகா, உனது யஜமானன் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கும் படத்தினுருவம் யாருடைய சாயல்போலிருக்கின்றதடா?" என, அவன், "அன்னைமீர்காள், இதுகாறும் அவ்வடிவத்திற்கு ஒப்பு எங்கும் இல்லையென்றே நினைத்திருந்தேன். இப்பொழுது இவ்வம்மாளை நோக்குகையில் அப்படம் இவருடைய சாயல்போலவேயிருக்கின்றது" எனவே, சகிகள் இருவரும் மல்லிகையை நோக்கி, "ஸகி, மல்லிகே, நீதான் அப்படத்தில்எழுதப்பட்டிருக்கின்றாயென்பதில் சந்தேகமில்லை." என, மல்லிகை, "தோழிகாள், அச்சித்திர கன்னிகை எனது சாயலை யொத்திருக்கின்றாளென்பதினாலேயே அப்படத்தில் வரையபட்டிருப்பவள் யானே யென்று புகல்வது எங்ஙனம்?" என, காளிந்தி, "உன்னையொருமுறை கண்ணுற்ற

பிறகு மற்றொரு மங்கையினது படத்தையும் பார்க்க அவர் மனமிசையுமோ?" என, மல்லிகை, "என் மீது நினக்கு இருக்கும் நேசமிங்ஙனம் உன்னையியம்பச்செய்கின்றதேதவிரவிது வாஸ்தவமல்ல." என்று புகல, பிரமரகன், அன்னைமீர், அச்சித்திர கன்னிகை இவ்வம்மாளை யொத்திருக்கின்றாளென்பது மட்டுமேயல்ல. இவ்வம்மாள் ஐயன்மாருதனுக்களித்த மல்லிகைமாலையுடன் இவ்வம்மாளே அப்படத்திலெழுதப்பட்டிருக்கிறாரென்பதில் ஈஷத்தேனும் ஐயமில்லை" என்றான். உடனே காளிந்தி, மல்லிகையை நோக்கி, "பிராணஸகி, இப்பொழுது என்ன சொல்லுகின்றனை? பிரமரகன் பேச்சையும் பொய்யென நினைக்கின்றாயோ?" என, மல்லிகை, "ஸகி, காளிந்தி, எனக்குமட்டும் இன்னும் நம்பிக்கை பிறக்கவில்லை. ஏனெனில், தீவாந்தரத்தில் எனது படமிருக்கக் காரணமென்?" என்று மீண்டும் வினவ, காளிந்தி "நீ இப்பொழுது தரித்திருக்கின்றதும் தீவாந்தரத்தினின்றும் வந்ததுமான நினது வல்லபன் மாருதனது சித்திரம் எங்ஙனம் வரையப்பட்டிருக்கின்றதோ அங்ஙனமே தான் அவரிடத்திலிருக்கும் உனது படமும் எழுதப்பட்டிருக்கின்றது." என்றாள். பின்பு பிரமரகன் மீளவும் மொழிந்ததாவது:— "எம்மையன் மாருதன் இங்ஙனம் அச்சித்திர ரூபையான இவ்வம்மாளை யதார்த்தமென்றே யெண்ணி யடிக்கடி இச்சீமந்த மணியை அப்படத்தின் முகத்தினிற்புனைய முயலுகையில் அருகிலிருந்த ஐயன் கலகண்டன், "அன்பனே, இது சித்திரமேயல்லது ஸத்தியமான தையலல்லள்." என்று வற்புறுத்தினதின்பேரில், 'இம்மணியைப்புனைவதற்குத் தக்கவள் அப்பெண்மணியே" என்றுரைத்து இப்பொழுது அதனைத் தம்மிட மளித்துவருமாறு என்னை யேவியிருக்கின்றனர்." என்றான்.

அக்காலை காளிந்தியும் பிரமரகனை நோக்கி, "பிரமரக, எமது பிரிய ஸகி உங்கள் யஜமானர்க்கு அடிமைப்பட்டிருக்கின்றாள். ஆதலின் அவர் அன்புடன் அளித்த இம்மணியை எமது ஸகி இன்புடன் ஏற்றுக்கொள்ளுகின்றாள்." என்றுரைத்து அதனை வாங்கி மல்லிகைக்குக் காண்பித்துச்சொன்னதாவது: "ஸகி, பொன்னின் வடந்தனில் கோத்த செந்நிறம்பொருந்திய இச்சீமந்தமணி, ஐயன் மாருதன் அநங்கனது அம்பினால் துளைக்கப்பட்டு செங்குருதியாற் பூசுண்ட தனது மனத்தையே உன்மாட்டு அவர்க்கிருக்குமன்பின் மிகுதியால் அனுப்பியிருக்கின்றாரோவென்ற வையத்தை விளைவிக்கு

மாறு விளங்குகின்றது." என, மல்லிகையும் மிக்க ஆவலுடன் அச் சீமந்தமணியைப் பார்த்துக் கொண்டிருக்கையில் மந்திரித்தலைவர்க்கு மாலை ஸந்தியாவந்தனம் புரியும் நேரத்தைத் தெரிவிக்கும் வந்திகளுடைய வாத்யசத்தம்காதில்பட்டது. உடனேபிரமரகனும், (தன்னுள்) யானிப்பொழுது எனது யஜமானனது கட்டளைப்படி ஸீமந்தமணியை மல்லிகையம்மாளிடம் அளித்து விட்டேன்; ஐயன் மாருதனது சித்திரத்தைத் தன் வத்திரத்தின் முன்றானையிற் கண்டு களி கொண்டிருப்பதினால் மல்லிகையம்மாளுக்கும் அவரிடத்தில் உண்டாயிருக்கும் அபிநிவேசமும் விசதமாயிற்று." என்று எண்ணிக் கொண்டு அவர்களிடத்தில் விடைபெற்று மாருதன்பால் சென்றனன். பின்னர் ஏதோ நூபுர சத்தம் காதில்படவே காளிந்தி மல்லிகையை நோக்கி, "ஸகி, இச்சிலம்பிெனாலியால் நின்னை தரிசிக்குமாறு நினது அன்னை ஈண்டு எய்துகிருள் என்று நினைக்கின்றேன். ஆதலின் சடுதியிலெழுந்து தேவியை எதிர்சென்றழைக்கச் செல்; யானும் எமது யோகீச்வரியிடம் செல்லுகின்றேன்." என்றுரைத்து மல்லிகைபால் விடைபெற்று மந்தாகினி மாட்டுச்சென்று மல்லிகைபால் நிகழ்ந்த சங்கதிகள் யாவையுமுள்ளபடி உரைத்தனள். அக்காலை மந்தாகினியும் மனமகிழ்ச்சியுடன் தன்னுள், "ஆகா! யான்கொண்ட கருத்துக்கேற்கத்தெய்வமும் அனுகூலமாயிருக்கின்றது. ஏனெனில் மல்லிகைக்கும் மாருதனுக்கும் பரஸ்பரம் நீக்கவொண்ணாத காதல் உண்டாயிருப்பதுடன் துகூலமும் ஸீமந்தமணியும் கிடைத்திருக்கின்றன. அன்றியும் எனது கண்மணிகள் இரண்டு பேருக்கும் இப்பொழுது நிகழ்ந்திருக்கின்ற அன்பானது இதற்கு முன் ஜன்மந்தொட்டே உதித்திருக்கின்றமையால், முறையே உத்தமம், மத்திமம் அதமம் ஆகிய மாஞ்சிஷ்டம், நீலம் கௌஸும்பம் என்று மூவகைத்தாய அன்புகளுக்குள் தலைமையான மாஞ்சிஷ்டமெனுமன்பேதான். அல்லாமலும் மாருதன்பால் மையல்கொண்டு இப்பொழுது மல்லிகை படும் அவஸ்தைகளையும் காளிந்தியிடமிருந்து கேட்கக் கனவருத்தமுண்டாகின்றது. விநயம், காம்பீர்யம் முதலிய நற்குணங்களுக்கு உறைவிடமாகிய வத்ஸன் மாருதனும் இப்பொழுது என்மாட்டு மிதமற்ற மாத்ரு விச்வாசமும் அன்புமுற்றிருக்கின்றனன். அவன் அடிக்கடி என்னைத் தரிசிக்கவும், என்மாட்டுத்தனது இரகசியங்களைச் சொல்லவும், தான் புரியும் ஒவ்வொரு காரியங்களிலும் என்னுடைய ஆலோசனைகளைக் கேட்

கவும் விரும்புகின்றனன். இங்ஙனம் தமக்கு நேரிட்ட விரகதாபத்தைப்பரஸ்பரம் சித்திரதர்சனத்தினுலேயே தணித்துக்கொண்டிருக்கின்றஇவ்விருவரும் மீண்டுமொருமுறை ஒருவரையொருவர்கண்டுகளிக்குமாறு யான் செய்விக்கவேண்டும்.'' என்று தனனுள் தீர்மானித்து, காளிந்தி, ஸாரஸிகையென்றதன்னிரு சேடிகைகளேயும் விளித்து, "இக்கணம் நீங்கள் இருவரும் சென்று வஸந்தோத்தியானத்தில் மல்லிகையும் மாருதனும் சந்திக்கும்படி செய்யுங்கள்.'' என்று அவர்களுக்கு அங்ஙனம் புரிவதற்குத் தக்க வுபாயத்தையும் தெரிவித்து அனுப்பினுள். பின்னர் மந்தாகினி கீழ்வருமாறு ஆலோசிக்கத் தொடங்கினுள்:—''இனி யான் சதிமதியனுன சம்பரகனதுசூதுகளைக் கண்டறிந்து களையவேண்டும். ஸர்வ மங்களங்களையுமளிக்கவல்ல ஸர்வமங்களையினது பதகமலத்தகத்துழலும் மனத்தனுன நமது விச்வவஸுவெனும் மந்திரித்தலைவன் மல்லிகையைச் சம்பரனுக்கு மணஞ்செய்விக்கும்படி அரசன் நிர்ப்பந்தித்த காலேயில் 'மல்லிகையை மணஞ்செய்விக்கும் பாத்தியம் அம்பிகைக்கேயல்லது எனக்கில்லே.' என்று அரயன் தன்பேரில் மனஸ்தாபப்படாமலிருக்குமாறு மறுமொழியீந்தது மிகவும் புத்திசாலித்தனமே. என்முலும் பாவி சம்பரகனது சதிமதியை யோசிக்கையில் என் மனத்திற்குஆறுதல்உண்டாகவில்லே.'' என்றுஎண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் ஸாரஸிகை மிக்க பறபறப்புடனுற்று, "பகவதி, தாம் கட்டளையிட்டவண்ணமே யான் ஐயன் மாருதனை அவர் வேலேக்காரனுன பிரமரகனுடன் வஸந்தோத்தியானத்திலிருக்கும் அதிமுக்தலதாமண்டபத்தில் இருக்கும்படி வற்புறுத்தியிருக்கின்றேன்.

மோ. க. சடகோபாசாரியார்.

இன்னும் வரும்.

# மனிதர்க்குரிய உணவு.

மனிதர்க்குரிய உணவு இன்னதுதானென்று ஐயந்திரிபறவறிந்து கொண்டு அதன்படியே நடத்தலானது மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். மனிதர்க்கு இதனிலும் மேற்பட்ட விசாரம் வேறொன்றுமில்லையன்றோ? மனிதனுடைய தேகக்கூறுபாட்டை நன்றாயறிந்து அதற்கேற்றபடி அன்னபானாதிகளை யுட்கொள்ளுதலே விவேகிகளுக்கழகாகும். தேகம் நன்றாயிருந்தால் மட்டுமே புத்தியும் தெளிவாயிருக்கும். மனிதர்க்குரிய உணவு இன்னதெனத் தெள்ளத்தெளிய வறிந்து விதிப்பது வயித்தியர் கடனாகும். வயித்தியர்களோ ஒருவர் போனவழி ஒருவர் போகாமல் தங்கள் தங்கள் வழக்கத்தையே பெரிதாகக்கொண்டு மனம்போன போக்கின்படியெல்லாம் ஆகாரங்களை விதிக்கிறார்கள். ஒருவன் எட்டிக்கொட்டையைத் தின்று வழக்கப்பட்டு அது நல்லுணவென்று எல்லோர்க்கும் உபதேசித்தால் அதை நாமும் ஸரிதானென்று ஒப்புக்கொள்ளுவது பொருந்துமோ? ஆகாரத்தில் ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என மூவகையுண்டென்று தொன்றுதொட்டு வழங்கிவருகிறது. இம்மூன்றனுள் ஸாத்துவீக ஆகாரமே சிறப்புடையது.

இவ்வுலகத்தில் மூலவர்க்கத்தைமட்டும் உண்பவர்களுமுண்டு. மூலவர்க்கம், மாம்ஸம் இவ்விரண்டினையு முண்

பவர்களுமுண்டு. இவ்விரண்டினுள் எது நன்று எது தீதெ ன்று உள்ளபடி உண்மையை யறிந்துகொண்டு அதன்படி யே நடப்பதே அறிவின் பயனாகும். சிலர் கொல்லாவிருத ம் பூண்டு கந்தமூல பதார்த்தங்களை மட்டுமே உணவாகக் கொண்டிருக்கிறார்கள். இவ்வுலகத்தில் மூலவர்க்கத்தை யும், மாம்ஸத்தையுஞ் சேர்த்து உண்பவர்களே அதிகமா வார். இவ்விருவகையாருள் யார் செய்வது நன்று, யார் செய்வது தீதென்று சற்றே உய்த்துணர்ந்து பார்ப்போம். கந்தமூலத்தை மட்டுமே யுண்பவர்கள் நோயின்றிப் பூர்ணா யுள் பெற்றுப் பலங்குன்றாதிருக்கிறார்களென்பார்கள். மா ம்ஸத்தையும், கந்தமூலத்தையுங் கலந்துண்பவர்கள், நமது பற்களில் சில மாம்ஸத்தைத் துண்டிப்பதற்கும் சில கிழிப் பதற்குமேற்றபடி அமைக்கப்பட்டிருப்பதனாலும், கடை வாய்ப்பற்கள் தானியத்தைக் கடித்துடைப்பதற்கும், மா வாக அரைப்பதற்குமேற்றபடி அமைக்கப்பட்டிருப்பதனா லும், மனிதற்கு இவையிரண்டுமே நல்லுணவென்றும், இவ்விரண்டினையுமுண்பவர்களுக்குத் தான் அதிகபலமு ண்டென்றும், ஆயுள் நீடித்திருக்குமென்றும், அப்படிக்கி ன்றி மனிதர்க்குரிய கந்தமூலங்களைமட்டுமே உணவாகக் கொள்ளுகிற பக்ஷத்தில் காரியமிலவாயு அதிகமாகவேண்டு மாதலால், அவர்கள் வயிற்றில் இடமில்லாமல் நோயுண் டாகும்படி கந்தமூலத்தை மிகுதியாக உண்ணவேண்டியிரு க்குமென்றுஞ் சொல்லுகிறார்கள். கந்தமூலத்தைமட்டு மே யுண்பவர்கள் எடுத்துக்காட்டுகின்ற நியாயங்களைப்பார் க்கையில் இவ்விருபாலாருள் யார் சொல்லுவது நியாயமெ ன்று ஐயுறும்படியுமாகிறது. ஆதலினால், இவ்விரண்டினை யும் நன்கு ஆராய்ந்து அமைவுடையதைமட்டும் பற்றுவ தே நியாயமாகும்.

அங்காதிபாத சாஸ்திர முறையின்படி பார்ப்பின், ஜந்துக்கள் மாம்ஸபக்ஷிணிகளென்றும், புல் பூண்டுண்ப

வையென்றும், பழங்களையுண்பவை யென்றும் எல்லாவற்றையுமுண்பவையென்றும், நான்குவகைப்படும். ஜந்துக்களின் பற்கள், முன்வாய்ப்பற்களென்றும், கடைவாய்ப்பற்களென்றும், சிங்கப்பற்களென்றும் மூன்று வகையினவாம். மாம்ஸபக்ஷிணிகளாகிய சிங்கம் முதலியவற்றின் முன்வாய்ப்பற்கள் அதிக பெரியனவாயிருப்பதுமில்லை. அவற்றால் அவற்றிற்கு அதிகப்பயனுமில்லை. ஆனால் அவற்றின் நாய்ப்பற்களென்கிற சிங்கப்பற்கள் மற்ற ஜந்துகளின் பற்களிலும் அதிகமாக நீண்டு துரடுகள் போல் வளர்ந்திருப்பதனால் அவற்றைக்கொண்டு அவை தங்கள் ஆகாரத்தைப் பிடித்திழுத்துக்கொன்று தின்னும். மாம்ஸம் தின்கிற மிருகங்களின் கடைவாய்ப் பற்கள் சற்றே கூராயிருக்கின்றதனால் அவை மாம்ஸத்தைக் கடித்து நன்றாய்ப் பொடித்துண்ணுவதற்கெளிதாகும். அவற்றின் மேல்வாய்ப்பற்களும் கீழ்வாய்ப்பற்களும் ஒரே வரிசையாய் நடுவே இடைவெளியின்றியிருக்கும்.

இது இப்படியிருக்கையில், யானை, குதிரை, பசு முதலிய மரம், மட்டை, புல், பூண்டு, செடி கொடி முதலியவற்றை உண்ணுகின்ற மிருகங்களின் முன்வாய்ப்பற்களோ வெளியில் கத்தி முனையைப்போல் கடித்துத் துணிக்கும்படி அழகாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் சிங்கப்பற்கள் புலி முதலிய சண்டையிடுந் துஷ்டமிருகங்களுக்கிருப்பதுபோல மிகப் பெரியனவாய் வளர்ந்திராமல் சிறியனவாயிருக்கும். அன்றியும்,புல்லுண்ணும்மிருகங்களின் கடைவாய்ப்பற்கள் நுனியில்பரந்திருக்கும். குரங்கு அணில் முதலிய கனி யுண்ணுமிருகங்களின் பற்கள் நிரை நிரையாயும், மூடினால்நடுவே இடைவெளியில்லாமலும்அழகாயுமிருக்கும். புலாலை யுண்ணும் மிருகங்களுக்கிருப்பதுபோல இவற்றிற்கு வக்கிர தந்தங்களில்லை. பன்றி, கரடி முதலிய கண்டதையெல்லா முண்ணுமிருகங்களின் முன்

வாய்ப்பற்கள், குரங்கு முதலிய கனியுண்ணுமிருகங்களின் பற்களைப்போலவும், சிங்கப்பற்கள் மாம்ஸமுண்ணும் மிருகங்களின் பற்களைப் போலவும், கடைவாய்ப் பற்கள் கூர்மையாகப்பரந்துமிருக்கும்.

இவ்வாறு வேறு வேறான பற்களுள் மனிதர்களின் பல் எந்தவகையானதென்று பார்த்தால் அவர்களுக்கு இன்னவகையான உணவுதான் வேண்டுமென்பதை எளிதிலறியலாம். மனிதரின் பற்களும், குரங்கு அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களின் பற்களும் ஒரேவிதமென்றாலும் குரங்கின் பல் சற்றே நீண்டிருக்கும். மனிதரின் பற்கள் ஆடுமாடுகள் சிங்கம் கரடி பன்றி இவற்றின் பற்களுக்கு முற்றும் வேறாக ஒருவாறு பழத்தையுண்ணும் ஜந்துக்களின் பற்களை யொத்திருக்கும். ஆதலினால், மனிதரைப் பழத்தை யுண்ணுபவரென்று சொல்லலாம்.

ஜந்துக்கள் உண்ணுமுணவு தங்கியிருக்குமிடமாகிய குடலின் அளவைக்கொண்டு அவற்றிற்கு இன்னவிதமான உணவுதான் வேண்டுமென்றுங்காணலாம். ஊனை உண்ணுப்பிராணிகளின் குடல் அவற்றின் தேகத்துக்கு மூன்றுமுதல் ஐந்து மடங்கு நீளமாகவிருக்கும். புல் பூண்டுகளை யுண்ணுகின்ற ஜந்துக்களின் குடல் அவற்றின் தேகத்தின் நீளத்துக்கு இருபதுமுதல் இருபத்தைந்து மடங்கு அதிகமாயிருக்கும். பழத்தை யுண்ணும் ஜந்துகளுக்கு இந்தக் குடலிருப்பதுமன்றி, இதனோடொட்டினாற் போல மணிக்குடலென்று இரண்டாவது குடலொன்றுமுண்டு. அவற்றின் குடல் தேகத்தின் நீளத்திலும் பத்துப் பன்னிரண்டு மடங்கதிகமாயிருக்கும். மனிதருக்கும் அப்படியேதானிருக்கிறது. இதனாலும் மனிதர்க்குரிய உணவு பழமென்று காணலாம்.

இவ்வாறு பூமியிலுள்ள பிராணிகளில், பறவைகளின் வேறுபாடுகளையும், அவற்றின் அளவையும் நன்றாய்ப் பரி

சோதித்தறிந்த வித்துவான்களெல்லோருமே ஒரே துணிவாய் மனிதர்க்கேற்ற உணவு மூலவர்க்கந்தானென்றும், அவர்களுக்கு மற்ற ஜந்துக்களின் மாம்ஸம் ஒருபொழுதுமே உணவாகாதென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். ஆதலால் பூமியிலுண்டாகிற பற்பல வகையான தானியங்கள், பழவகைகள், வேர்வகைகள், கிழங்குகள் மற்றுமுள்ள மூலவர்க்கங்களுமே மனித தேகத்திற்கு அநுகூலமான உணவென்று கொள்ளலாம்.

பிராணி தர்மகுண சாஸ்திரத்தின்படியும் பார்ப்போம். இயல்பாகவே பிராணிகள் தங்களுக்கேற்ற உணவுப்பொருளைக் கண்ணாலே கண்டமாத்திரத்தில் அவற்றிற்கோர் சந்தோஷமும், அவற்றின் மணம் உள்ளே செல்லுகையில் ஆனந்தமும், அவரவர் உண்ணும்போது கொண்டாட்டமுமாயிருக்கிறதைக் காணலாம். அதிலும், புலி, ஓநாய் முதலிய துஷ்டமிருகங்கள் தங்களுக்குணவாகும் ஜந்துக்களைக் கண்டால் அவற்றைக்கொன்று தின்னத் தாவிப்பாய்ந்தோடும். யானை, மாடு, குதிரை, மான் முதலிய பிராணிகள் மற்ற ஜந்துக்களைக் கண்டால் அவற்றிற்குத் தீங்கொன்றுமே விளைக்கிறதில்லை. இவற்றின் நல்லுணவாகிய புல்பூண்டு முதலியவற்றோடு சிறிது ரத்தம்பட்டிருந்தாலும் அவற்றை அவைமோந்து பார்ப்பதுமில்லை. குரங்கு, அணில் முதலிய கனியுண்ணும் ஜந்துக்களுக்குப் பழங்களைக் கண்டால் மட்டுமே ஆசை; அவ்வாறே குதிரை, ஆடு, மாடுகளுக்கு நல்ல புல்லையுந் தண்ணீரையுங்கண்டால் ஆசை.

மனிதர்க்கு ஜந்துக்களைக் கொல்லுவதற்கு மனமேயிராது; வேட்டையாடி வாடிக்கைப் பட்டவர்களும், கசாப்புக்காரர்களும் மட்டுமே செயற்கை வாஸனையினால் உயிர்வதை செய்ய அஞ்சுவதில்லையேயன்றி மற்றப்படி யாருமே கொல்லத்துணியார்.

ஜந்துக்கள் கதறக்கதற அவற்றின் மேல் காலெல்லாம் ரத்தமாய்ப் பூமியின்மேல் விழுந்துகிடப்பதைக் குழந்தை

களேயன்றிப் பெரியவர்களும் காணப்பொருரன்ருே? புலா லுண்பவர்களிற் பெரும்பான்மையோர்க்கு முதலில் ஜந்துக்களைக் கொல்லுவது தெரியாமையால் அதில் ஆசை. ஊனை யுண்பவர்களுக்கு அதனேடு வேறு ஸம்பாரவர்ககம் சேர்த்தால்மட்டுமே அது நன்ருயிருக்கும். காய்கனிகளை யுண்பவர்க்கோவெனின் அவற்றைக் காணும்போதே ஆசையாயிருக்கும். நல்ல ஊறுகாயைக் கண்டால் அதையுண்ண நாவில் ஜலம் ஊறுமன்ருே? ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு, குங்குமப்பூ இவற்றைக்கண்டால் யார்க்குமே ஸந்தோஷமாயிருக்கும். யார்க்கும் இயல்பாகவே மூலவர்க்கத்தைச் சேர்ந்த உணவை யுண்ணத்தான் ஆசையாயிருக்கும்.

மனிதர்களின் பற்கள் சில மாம்ஸமுண்ணுமிருகங்களின் பற்களைப்போல் சீக்கிரத்தில் சொத்தை விழுந்து கெட்டுப்போவதில்லை; அன்றியும் அவர்கள் மூச்சுவிடும்போது புலாலுண்ணும் மிருகங்களின் மூச்சுக்காற்றைப்போலத் துர்க்கந்தம்வீசுகிறதுமில்லை. மூலவர்க்கஉணவு நன்ருய்ப்பக்குவஞ்செய்யப்பட்டாலும், படாவிட்டாலும் தேகத்துக்குக்கேட்டை விளைப்பதில்லை; மாம்ஸத்தையோவெனில் எத்தனையோ முறையாய்ப் பக்குவப்படுத்தியே உண்ணவேண்டும். ஊனையுண்பவர்கள் அதிகமாகப் பசி தாங்கமாட்டார்கள். தானியங்களை யுண்பவர்களுக்கு உபவாஸஞ்செய்வதிலும் வருத்தமிராது. ஊனுண்பவர்களின் பல்லும் வாயும் எப்பொழுதுமே துர்க்கந்தமாக நாறிக்கொண்டிருக்கும். அவர்களுடைய மலமூத்திரங்கள் கணக்கில்லாதபடி துர்க்கந்தமாக நாறும். வயித்தியர்கள் எந்தநோய்க்கும் புலாலை யுண்பதை நிறுத்திவிடவேண்டுமென்று பத்தியம் விதிப்பார்கள். புலாலுண்பவர்கள் அதிகமான சீதோஷ்ணத்தைத் தாங்கமாட்டார்கள். காய், கறி, கிழங்குகளை மட்டுமே யுண்ணுபவர்களின் தேகக்கட்டு உறுதியாயிருக்கும்; அவர்கள் தேகம் அதிகமாகவும் பெருக்காது; இளை

த்தும்போகாது; புலன்களின் நுகர்ச்சியுங்கெடாதிருக்கும்; கண்ணுக்கழகாயும், தேகவலிமை யுடையவர்களாயுமிருப்பார்கள். இதனாலும் மனிதர்க்கு மூலவர்க்க உணவே ஏற்ற உணவென்றறியலாம். ரஸாயன சாஸ்திர முறைப்படியும் சற்றே பார்ப்போம். புலாலுணவு எளிதில் ஜீர்ணமாகுமென்றும், தேகத்துக்கு நல்ல புஷ்டியைத் தருமென்றும் சிலர் சொல்லுகிறார்களேயன்றி இது உண்மைதானென்று எல்லோரு மொப்புக்கொள்ளும்படி இன்னும் ரூபித்துக்காட்டவில்லை. மூலவர்க்கமே மனிதர்க்குச் சிறந்த உணவென்றும் அவற்றுள் சில மாம்ஸத்திலும் பல மடங்கு பலமுடையனவென்றும், அவை எளிதில் ஜீர்ணமாகின்றனவென்றுங் கண்டிருக்கிறார்கள்.

அரிசி, பயறுவர்க்கங்கள் ஆகிய இவற்றின் ஸாரமானது மாம்ஸத்தின் ஸத்திலும் அதிகமானதுமன்றித் தேகத்திற்கும் நன்றாய்ப் பொருந்தியதென்றுகண்டிருக்கிறார்கள். உருளைக்கிழங்கின் ஸத்து இறைச்சியின் ஸத்துக்கு குறைந்ததேயன்று. புலாலை யுண்பதனால் தேகத்திற்கு அவசியமிருக்கவேண்டிய உஷ்ணங்குறையாதென்று சிலர் சொல்லினும், காய்கறிகளிலிருக்கிற கரியமலவாயு தேகத்திற்கு உஷ்ணத்தை அதனிலும் அதிகமாகத்தரும். இது விஷயத்தில் வைத்தியர்கள் சொல்லுவதைச் சற்றே நன்றாக ஆலோசித்துப் பார்ப்பது அவசியமாகும். பேதி முதலிய விஷஜ்வரமும், கொள்ளை நோய்களும் பரவும்போது புலாலையுண்பது கூடவே கூடாதென்பது வைத்தியர்களின் கொள்கையாகும்; அக்காலத்தில் கந்தமூலங்களையுண்பவர்களுக்கு அந்நோய்கள் அதிகமாக உண்டாவதில்லை. காயம், நசிவு, நெருப்புப்பட்ட புண் இவை எளிதில் ஆறவேண்டுமானால், ஊனை யுண்ணாமலிருத்தல் வேண்டும். மேலே கூறியவை யனைத்தையும், உண்மையென்று நிபுண வைத்தியர்கள் கண்டறிந்து அப்படியே அநுஷ்டித்துக்கொண்டும் வந்திருக்கிறார்கள்.

இவ்வுலக சரித்திரத்தின்படி பார்த்தால், சாகபக்ஷணஞ் செய்கிறவர்களெல்லோருமே அதிக பலவான்களாகவும், நீடித்த ஆயுளுடையவர்களாகவும், நோயற்றவாழ்வுடையவர்களாகவும், கந்தர்வர்களைப்போல நல்ல அழகுடையவர்களாகவும், சிறந்த புத்திமான்களாகவு மிருக்கிறார்களென்பதைக் காணலாம். ஊனைப் பெருமிதமாக உண்ண உண்ண மனிதர்களின் அந்தமும் அழகுங்குன்றிப்போம். ஆங்கிலேயர், ஜர்மனியர், பிரஞ்சுக்காரர், அமெரிக்கர் முதலியவர்கள் மூலவர்க்க உணவையும் மாமஸத்தையுஞ் சேர்த்துண்டு நன்றாக அழகு வாய்ந்து சுகமாயிருக்கிறார்களென்று நினைத்தாலும், அவர்களிலும் ஊனை விலக்கிக்கொல்லா விரதம்பூண்டு காய்களைமட்டுமே உண்ணுபவர்களே எல்லாச்சிறப்புமமைந்தவர்களாம். இதனாலும் புலாலுண்ணுமையின் பெருமையை நன்றாயறிந்து கொள்ளலாம்.

ஊனுண்டல் கூடுமென்பதற்கு நீதிநூல்தான் இடங்கொடுக்கிறதோவென்று பார்ப்பின் அதுவும் அவர்களுக்கு முற்றுமே விரோதமாகும். ஊனை யுண்பதனால் அது தேகத்தில் ஓர்வித உணர்ச்சியை யுண்டாக்கிச் சிற்றின்பப் பிரியர்களாக்கும். அப்படிக்கின்றி ஸாத்துவிக ஆகாரமான கோதுமை, அரிசி, பயறு முதலிய தானியவர்க்கங்களைமட்டும் உண்டுகொண்டு வந்தால் அது தேகத்திற்கு அநுகூலமாய், மனம் போன போக்கின்படி யெல்லாம் மனத்தைச் செல்லவிடாது அதை ஒரு நிலையில் நிறுத்தி நம்மை நல்வழியிற் செலுத்தும். தன்னூன் பெருக்குதற்கு பிறிதூன் உண்பவனுக்கு அருளுடைமை எப்படி உண்டாகுமா தெரியவில்லை. ஒருயிரையுங் கொல்லாமலும், புலாலை உண்ணுமலுமிருப்பவர்களை எல்லா உயிருமே கை கூப்பித்தொழும். நாம் மற்ற உயிர்களுக்குத் தீங்கு நினை

யாமல் அவைகள் நம்மைக்கண்டால் அஞ்சாதபடியுஞ் செய்பவனே ஆண்டவனுடைய தயைக்குப் பாத்திரனுவான்.

அஹிம்ஸை தர்மங்களுளெல்லாம் உத்தமமானது. இது எம்மதத்தவர்களுக்கும் சம்மதமானது. இந்தப் பூமியில் அபரிமிதமாய்க் காய்களும், கனிகளும், கிழங்குகளும், பலவகையான தானியவர்க்கங்களுமிருக்கையில் அநியாயமாய் உயிர்வதை செய்வது நன்றாகாது.

நாம் அநுபவசித்தமாய்ப் பார்ப்பின், ஊனுண்பதை விலக்கி, மூலப்பொருள்களுள் நமக்குரிய நல்ல ஆகாரங்களை மட்டுமே தேர்ந்துண்பது இகத்துக்கும், பரத்துக்கும் நன்றாகும். ஒருவன் தனக்குரிய உணவாகிய தானிய வகைகளைவிட்டு ஊனை யுண்ணின் அதனுல் பலவகையான நோய்களுண்டாவது திண்ணம். குரங்கு, மான் முதலியவற்றிற்கு ஊனையுண்ணப்பழக்குவதனுல் அவற்றிற்கு நாளடைவில் நோயுண்டாகிக் கெட்டுப்போம். இக்காலத்தில் அங்கங்கேயுள்ள விவேகிகள் ஊனையுண்பது கூடாதென்று அதை மெள்ள மெள்ள விலக்க வழிதேடுகிறார்கள். ஊனை ஒரு பொழுதுமே யுண்ணுதிருந்த ஜப்பான் தேசத்தாரைப் போன்ற சூரர்களை எங்குமே காண்பதரிதன்றோ? ஆதலால் புலாலுண்ணுமையே பெருமையுடைத்தென்று கொண்டு ஸர்வஜீவதயாபரர்களாயிருத்தலே உத்தமமான தருமமென்று கொள்ளல்வேண்டும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்."

அன்பில் ஸ்ரீவெங்கடாசாரியர்.

# பழிக்குப்பழி.

மிகுதியும் எண்ணமுடையோர்க்குத் தூக்கம் வாராதன்றே. ஆசை, வெறுப்பு, இன்பம், துன்பம் ஆகிய மாறுபட்ட குணங்கள் என்னைப் பீடித்தன. மறுநாட்காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வெளியே சென்றேன். குறிப்பின்றி ஊர் முழுவதையும் சுற்றினேன். சாலையில் மனிதரை மிகவாகக் காணவில்லை. ஒருகால் வியாதிக்குப் பயந்து மாந்தர் வெளியே உலாவவில்லையோ என்னவோ. இவ்விதம் யான் திரியும்போது சுமார் நாலைந்து மனிதர் கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். யான் செல்லும் வழியாகவே அவர்களும் சென்றனர். அவர்களுள் முக்கியனை கோகுலாநந்தன் என்பவன் கனதனவான். எத்தனையோ முறை என்னுடன் பிரியத்துடன் வார்த்தையாடியிருக்கிறான். இப்பொழுது யாது காரணத்தாலோ என்னைப்பார்த்தும் பாராதவன்போலக்கடந்து சென்றான். அவன் சிறிது தூரம் சென்றதும் என்னைச்சுட்டி

"அவன் எவ்வளவு அழகாகவிருக்கிறான். ஆனால் அவன் குடுமி வெண்மையாகி இருப்பது நன்றாகவில்லை."

என்று தன் பரிவாரத்துளொருவனிடம் சொன்னான்.

"ஆம். ஆம். அழகிற்குத்தகுந்த யவ்வனமும் அவனிடம் இருக்கின்றது." என்று அவன் மறுமொழி பகர்ந்தான்.

இம்மொழிகளைக் கேட்ட யான் ஒருவித ஆவேசங்கொண்டு என் விருத்தாந்தத்தை அக்கோகுலாநந்தனிடம் சொல்ல அருகில் நெருங்கினேன். மறுபடியும் யான் வெளியாக ஒன்றையும் ஒருவரிடமும் சொல்லக்கூடாதென்று எண்ணி அப்புறம் சென்றேன்.

எனினும் கனவில் நடப்பவனைப்போல அக்கனவான் பின்னரே சென்றேன். அக்கோகுலாநந்தன் சிறிது தூரம் சென்றதும் ஒரு அழகிய பெண்மணி அவன் காலில்விழுந்து ''ஐயா! என் மகளிறந்து விட்டாள் கொடியவியாதியால். அரசன் உத்திரவினால் இச்சேவகர்கள் சிறிது உயிரிருக்கும்போதே எடுத்துச் செல்லப் பிரயத்தனப் படுகிறார்கள். நான் எவ்வளவு தடுத்துச் சொல்லியும் கேட்கமாட்டேனென்கிறார்கள். தாங்கள் அரசனைச் சார்ந்தவராதலின் தயவு செய்து பொறுத்து அவளைத் தூக்கிச் செல்லும்படி சொல்லவேண்டும் என்று இரங்கிக்கேட்டாள்.

கோகுலாநந்தன் மனமிரங்கி அப்படிச் செய்யவேண்டாம் என்று உத்தரவிட்டான். அவர்களும் அவன் உத்திரவுக்கு கீழ்ப்படிந்தார்கள். இப்படித்தான் உயிர்போகு முன்னமேயே என்னையும் புதைக்கும் இடம் கொண்டு சென்றிருப்பார்கள் என்று எண்ணினேன். மேலும் நான் அயலான் வீட்டிலன்றோ இறந்துவிட்டேன். ஒருகால் என்வீட்டில் தானே இறந்தேனாயின் என் மனைவி தடுத்திருப்பாள்.—ஆம். என்னவோ நான் கேள்விப்பட்ட துண்மையானால் அப்படிச் செய்யாமலுமிருப்பாள்——எப்படி நம்புவது?

உலகோர் எதையுஞ்சொல்லுவார்கள். ஒருவன் வீணாக ஏதேனுஞ்சொன்னால் மற்றவர்கள் கண்டதாகவும் பார்த்ததாகவும் ரூபிப்பதாகவும் சொல்ல அஞ்சார்கள். எதற்கும் சூரியன் மறையட்டும். தீமைகளெல்லாவற்றிற்கும் இரவுதான் சரியான காலம். அப்பொழுது தான் சோரத்திற் கேற்ற காலம். மனைவியின் குணத்தை ஆராய அக்காலத்தையே யான் துணைகொள்ளவேண்டும். அவள் சோரத்வத்தைக் கண்டுபிடிக்க யானும் சோரனாகவே இருக்கவேண்டும். பொழுது சுமார் பன்னிரண்டு மணியிருக்கலாம். பசி சிறிது வருத்தியது எனினும் யான் முதலில் வியாதிகண்டு படுத்த வீட்டினைத் தேடியடையவேண்டும் என்று தீர்மானித்தேன். சிறிது காலத்திலவ்விடத்தையடைந்தேன். பணத்திற்கு உணவளிக்கும சத்திரத்து எஜமானனைக் கேட்டேன். அவன் உணவளிக்க ஒப்புக்கொண்டான். அவனாகிலும் என்னை இன்னானென்று தெரிந்து கொள்கின்றானோவென்று பார்த்தேன். யான் சந்தேகித்தபடி என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. மேலும் என்னை ஒரு தேசாந்

தரஞ் சுற்றினவனுக நினைத்து "ஐயா! வெகு காலமாகக் கடலில் யாத்திரையாகச் சென்றீரோ" என்றான்.

திடீரென்று இம்மாதிரி என்னைக் கேட்டதும் பதில் ஒன்றுஞ் சொல்லத் தோன்றவில்லை. என் புத்தியை நிலைப்படுத்திக்கொண்டு புன்சிரிப்புச்சிரித்து "இக்கொடிய வியாதி எப்படியிருக்கிறது" என்று வினவினேன்.

அதைப்பற்றி என்னிடம் சொல்லாதே. ஜனங்கள் காடிப்பானையில் விழுந்திறக்கும் ஈக்களைப்போல இறக்கின்றனர். நேற்றைத்தினம்......ஆம்......வருத்தமாயிருக்கிறது சொல்வதற்கு" என்று பெருமூச்சு விட்டான். "நேற்றென்ன விசேஷம் நடந்தது? வருத்தப்படுவதில் என்ன பிரயோஜனம். இந்த ஸ்ரீரங்கத்திற்கே யான் புதியவன். இவ்வூரைப்பற்றிய விசேஷங்களைத் தெரிந்துகொள்ள ஆவல் கொள்கிறேன்". என்று யான் கேட்டேன்.

"சரி. செல்வமிகுந்த புஷ்பமித்திரர் என்றவரைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டா?" என்றான் அச்சத்திரத்தவன்.

"என் முகத்தைச்சிறிது கவிழ்த்துக்கொண்டேன். பிறகு மேல் துணியால் முகத்தைத் துடைத்துக்கொண்டு "யான் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை என்றேன்."

"சரிதான். அதோகிடக்கும் அந்தத்திண்ணையின்பேரில்தான் இறந்துவிட்டார். ஐந்துமணி நேரந்தான் வியாதியால் தொந்தரவடைந்தார். சிறிது உயிரிருக்கும்போதே அக்கொடிய சேவகர் எடுத்துச்சென்றனர் கொளுத்திவிடுவதற்கு. அவைகளை யெல்லாம் நினைத்தால் கனவைப்போலத் தோற்றுகின்றது."

"ஆனால் உயிர் இருக்கும்போதேயா எடுத்துச் சென்றனர்? அவர்கள் மகாபாவிகள். எத்தகைய தீச்செயலையும் பன்முறையும் ஒருவன் செய்தானுயின் அவனுக்கு வழக்கமாய்விடுகிறது. அவன் மனைவி மக்களிடம் இச்செய்தியை யார் போய்ச் சொன்னூர்கள்?" என்று கேட்டேன்.

"முதலில் அப்புஷ்பமித்திரரைத் தொடர்ந்து வந்த வைத்தியர் விஷயத்தைப்போய் அவன் மனைவியிடம் சொன்னூராம். என்னவோ அவள் மூர்ச்சையானுளாம்." என்றான் சத்திரத்து எஜமானுகிய கிருஷ்ணையன்.

"ஆயின் அவள் மிகவும் துக்கப்பட்டிருப்பாள்"

துக்கமென்ன?ஸ்திரீகள் அற்பமான விஷயங்களுக்காகவும்மூர்

ச்சையடைவார்கள். அது அவர்கள் சுபாவம். இப்படி அவன்சொன்னதும்யான் மனம்வருந்திப்பலகாரத்தைத்தின்னுமல்ஒதுக்கினேன்.

"ஏன் ஐயா! அவைகள் நன்ருகவில்லையா? அல்லது தங்களுக்குப்பசியில்லையா?"

நான் புன்சிரிப்புச்சிரித்தேன். பிறகு அவனை உற்றுப்பார்த்து "நீர் சொல்லும் வார்த்தைகள் எத்தகைய பசியையும் ஒழிக்கும். மனவருத்தமானது இவ்வுணவுகளைப் புசிக்கச்செய்யவில்லை. இறந்தவர்களைப்பற்றியும் இறப்பவர்களைப்பற்றியுமான கதைகளைத் தவிர்த்து வேறு விசேஷம் இந்த ஊரில் இல்லைபோலும்". என்று சிறிது வெறுப்புடன் சொன்னேன்.

"எல்லாம் இறைவன் செயல். இந்தக்கொடிய வியாதிக்கும் இறைவனே காரணன். நாம் என்ன செய்யக் கிடக்கின்றது." என்று சத்திரத்தவன் சொன்னதும் தெருவில் ஒரு வண்டியினின்றும் ஒருவன் இறங்கி உள்ளே பிரவேசித்தான். வந்தவனைக்கண்டதும் துணுக்கென்று ஒருவிதப் பயமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. அவன் சந்திரவதனன்......என் சினேகிதனுயிருந்தவன்......ஆவேசத்துடன் எதிர்கொண்டு போய்ப் பேசியிருப்பேன்......ஆனல் அவன் முகத்திற்ருேன்றிய ஒருவிதக் குறியினல் நெருங்கக்கூடாது என்று எனக்குத்தோன்றியது. அவன் முகம் சந்தோஷக்களையுடன் விளங்கியது. அவன் கையில் அழகிய மஞ்சள் நிறமுள்ள ரோஜாமலர் ஒன்று இருந்தது. அது என் தோட்டத்தினின்று தான் அவன் கைக்கு ஏறியது என்று தெளிந்துகொண்டேன். என் பக்கத்தில் அவன் செல்லும்போது உற்றுப்பார்த்தேன்———என் உடலில் ஒருவித நடுக்கம் உண்டாயிற்று. இதுவரையிலும் யான் கண்டிராத சந்தோஷக்குறி அவன் முகத்திலிருந்தது......ஆம்...... அவன் உயிர் நண்பனுகிய யான் நேற்றுத்தான் இறந்தேன். அவனைப்பார்த்ததும் நான் மிகவும் வருத்தப்பட்டேன்——மறு க்ஷணத்தில் என் மதியின்மையைக்குறித்து இகழ்ந்துகொண்டேன். முகம் சந்தோஷக்களையுடன் விளங்கினல் என்ன? கையில் மலர் இருந்தால்தான் என்ன? மனவருத்தம் உண்மையாகயிருக்கின்றதோ என்னவோ? எப்படி உண்மையையுணர்வது? இனி அவ்விடம் தங்கஎனக்குப்பிடிக்கவில்லை. மாலையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டுசத்திரக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக்கொடுத்து வெளியே சென்றேன். மத்தியானப் பொழுதெல்லாம் மனிதசஞ்சாரம் அதிகமாக இல்லாத இடமெல்லாம் நடந்து சுற்றினேன். சாதக

பக்ஷியைப்போல மாலைவரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்.

கடைசியில் நான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சாயந்திரமும் வந்தது. குளிர்ந்தகாற்று வீசியது. பலவகைப்பட்ட மலர்களின் மணத்துடன் கலந்த காற்று என் மனத்தை யின்புறச்செய்தது. ஆகாயத்தில் பரவிய சிறு மேகங்கள் மறையும் சூரியனின் பல வன்னக்கிரணங்களால் இனிமையுடன் விளங்கின. மனைவியையும் மகளையும் பார்க்கவேண்டுமென்னும் ஆசை சூரியன் முழுவதும் மறைவதன் முன்னமேயே அவர்கள் இருக்கும் இடத்திற்குத் தாண்டியதேனும் சிறிது நிதானித்தேன். சூரியன் மறைந்தான். சந்திரன் எழுந்தான். காவிரி பூர்ணப்பிரவாகமாக அப்பொழுதிருந்தமையின் அந்தச் சந்திரனின் கிரணங்கள் நீரினில் பிரதிபிம்பித்திருத்தலைப் பார்த்தற்கு ரமணியமாகவிருந்தது. இதுதான் நம் மனைவியின் குணத்தை யுணர்ந்தடையும் காலம் என்றுஎண்ணி என் ......ஆம் என்னதாயிருந்த வீட்டினை அடைந்தேன். அவ்வீடுமுழுவதும் சோலையால் மறைக்கப்பட்டிருந்தமையின் யாரும்பாராமல் தோட்டத்திற்குள் சென்றேன். மார்பம் துடித்தது. என்கைகால்கள் ஆவேசத்தால் நடுங்கின. அடி எடுத்துவைக்க முடியவில்லை. எப்பொழுதும் அந்தவழி அவ்வளவு தூரமாகத் தோன்றியதில்லை. கடைசியில் யான் மிகவும் விரும்பிப்பாதுகாத்துவந்த பூம்பந்தரண்டை வந்து சேர்ந்தேன். இனியமலர்மணம் வீசியது. சிறுபறவைகள் பாடும் கீதம் இன்பத்தைத்தந்தது. சந்தோஷத்தினால் உடல் முழுதும்புளகமடைந்தது. அந்தஇடத்தின் ஒருபுறம் ஒதுங்கி நின்றேன். நிச்சப்தமாயிருந்தது. ஹேமாங்கினியைக்கட்டியணைந்து முத்தமிட்டுக்கொள்ளலாம் என்ற சந்தோஷமானது மிகுதியும் ஆஹ்லாதத்தை யுண்டுபண்ணிற்று. சந்திரவதனனை எதிர்கொண்டழைக்க ஆவல் கொண்டேன். கண்மணி கல்யாணியை மடியினில் எடுத்து வைத்துக்கொண்டு முத்தங்கொள்ளப்பிரியங்கொண்டேன். இத்தகைய எண்ணங்கொண்டு நின்றிருந்தேன் .. ..சற்றுப்பொறுங்கள். என்னசப்தம் கேட்கின்றது? ஆ! ஆ! காலடி சப்தம் அன்று. அன்று. சிரிக்கும் சப்தம். யார் சிரிக்கிறார்கள்? ஒருகால் என் எண்ணங்களைத்தெரிந்துகொண்டு இயற்கையந்தேவி பரிகசித்துச் சிரிக்கின்றனளோ? அப்படி யிருந்தாலு மிருக்கலாம். ஆம். ஆம். என் மனைவியின்குரல். அவள்தான் சிரிக்கின்றாள். அக்குரல் நன்றாக எனக்குத்தெரிகிறது. ஆ! ஆ! நான் இறந்து இனி அவளுக்கு யாதொரு வகையான இடையூறும் செய்ய முடியாமையைக் குறித்தா சிரிக்கின்றாள்! உடனே வெண்மையான உடை ஒன்று தெரிந்தது. நான்

நன்ருக மரத்தண்டை ஒளிந்துகொண்டேன். மறுபடியும் சிரிப்புக் கேட்டது. அது கூர்மையான ஈட்டியைப்போல என் மனத்தைப் பிளந்தது. அவள் சந்தோஷமாக இருக்கிருள். யான் அவள் புருஷன்.....காதலன் இறந்துவிட்டேன் என்று தெரிந்துகொண்டு சந்தோஷமாக இருக்கிருள். சந்திரன் இனிமையோடு பிரகாசிக்கும் இக்காலத்தில் சோலையில் சந்தோஷத்துடன் உலாவுகிருள். எப்பொழுது இப்படி இருக்கிருள்? நேற்று இறந்த புருஷனைப் பற்றி நினைந்து மனமுருகி வருந்தவேண்டிய சமயத்தில். ஆம்... .. இவ்விதம் இருப்பாள் என்று யான் எதிர்பார்த்தேன்.

மோசக் காரிகள் ஆசை மொழியினை
நேச மொழியென நினைக்குந ரெல்லாம்
மடைய ரெவரினுங் கடையரே யாவார்.

உடனே என் மனத்தில் ஒருவித எண்ணம் ஜனித்தது. ஒருகால் துக்கத்தால் அவள் பைத்தியம் பிடித்தவளாயினளோ? இங்குச் செல்கின்ருேம் என்று தெரியாமல் உலாவுகின்றனளோ? இருந்தாலும் இருக்கும். உடனே அவளிருக்கும் இடத்தைக் கவனித்துப் பார்த்தேன். அவள் உருவத்துடன் வேருேர் உருவத்தைக் கண்டேன். ஆம். என் மனைவியும் என் நண்பன் சந்திரவதனனும் இருந்தார்கள். சரி .. ..அப்படியிருப்பதில் ஒன்றும் பிழையில்லை. யான் இறந்ததனுல் அவன்தானே அவளுக்குத் தேறுதல் சொல்ல வேண்டும் .....ஆயினும் சிறிது பொறுங்கள். சிறிது பொறுங்கள்... என்ன காண்கின்றேன்? கனவா, நனவா? ஒருவர் தோள்மேல் ஒருவர் கையைப்போட்டுக்கொண்டு உலாவுகின்றனர்......கோபத்தொனியுடன் பல்லைக்கடித்துச்கொண்டு நல்லது என்று சொன்னேன். யாரோ என்னைப் பின்னே வந்து கொலைசெய்வதுபோலத் தோன்றியது. ஐயோ நான் என் அவ்வியாதியால் இறக்கவில்லை. நன் காட்டினின்றும் என் யான் தப்பித்து வந்தேன்? இக்காட்சியைக் காண்பதினும் என்னைச் சுற்றிக்கிடந்த பிணத்தோடு ஒன்ருக இருந்திருக்கலாமே. யான் காதலித்த மனைவி அயலானுடன் உல்லாசமாக இருப்பதைக் காணுதலாகிய துன்பத்தினும் இறத்தல் கொடுமையாகாது. அந்த ஞாபகம் யான் இக்கதையை எழுதும் தற்சமயத்திலும் மனத்தைப் பிளந்து தலையைச் சுழற்றுகின்றது. இவ்வெழுதுகோலை மிகவும் கடினமாகப் பிடித்துக்கொள்ளுகிறது என்னுடைய விரல்கள். அயர்ந்து ஒன்றுஞ் செய்யத்தோன்ருமல் அடியினுல் பயந்த மிருகத்தைப்போல் நின்றேன். (இன்னும் வரும்).

# இந்தியா ராஜஸ்தானங்கள்.

**ஆசியா கண்டத்துள்** உள்ள தேசங்களில் எல்லா வற்றினும் மேம்பட்டுத் தொன்றுதொட்டுப் பலவிதத் தானும் புகழினும் செல்வத்தினும் வளத்தினும் சிறந்த தென்றெண்ணப்படுவது இவ்விந்தியா தேசம். ஆத லின் இதைக்கவரநினைந்தே அநேகர் படையெடுத்து வந்தனர். வந்தும், முழுவதுங் கைக்கொள்ளாமற் சிற்சில பாகங்களையடைந்தும், இந்தியவரசர்களாற் றத்தம் நாடுக ளுக்குத் துறத்தப்பட்டும் சென்றனர். அவ்வாறாகியும் இந்நாட்டின் மேலுள்ள அவா அவர் மனத்தை விட்டு நீங்கவேயில்லை.

எல்லாப் பக்கங்களிலேயும் இயற்கையிலேயே இவ் விந்தியாதேசம் நல்ல எல்லைகளையுடையது. உலகத்திலு ள்ள மலைகளெல்லாவற்றினும் மிகப்பெரியதான இமய மலை இந்நாட்டு வடபக்கத்தில் ஒரு பெரிய அரணாக நின்று பகைவர் வராமல் தடுக்கின்றது. கிழக்கிலும் மேற்கிலும் அலைவீசும் கடலாற் சூழப்பட்டு ஒரு பெட்டி போன்று ள்ள இந்நாடு முக்கோண வடிவாயும் தெற்கு வடக்காகச் சுமார் 1800 மைலும் கிழக்குமேற்காக 1500 மைலுமுள்ள தாயும் தென்பாகத்தில் கன்னியாகுமரி என்னுமிடத்தில் வந்து முனையாய் முடிவுபெறுகின்றது.

இவ்வாறுள்ளவிடத்தில் பலவிதமான நாகரிகங்களும் நடையுடை பாவனைகளும் காணப்படுகின்றன. சுருக்கிச் சொல்லுங்கால், இதை ஒரு சிறிய உலகமென்றே சொல்லி விடலாம். சமுத்திரமும் வற்றிப் போகும்படியாயுள்ள மிகுந்த உஷ்ண பாகமும், பாறை பாறையாய் உறைந்து நிற்கும் பனிக்கட்டிகள் நிறைந்த மிகவும் குளிர்ச்சியுள்ள பாகமும் இங்குக்காணப்படுகின்றன. உலகமுழுவதுமுள்ள விளைபொருள்களெல்லா மிங்கு விளைகின்றன. பூமி முழுவதும் ஒரே மாதிரியாயிராமல், பற்பல தோற்றங்களோடும் அவ்வத்தோற்றத்துக்கேற்ப விகற்பங்களோடும் விளங்குவது இந்நாடு.

அத்தோற்றங்களில் முதன்மையான ஹிமாலயப்பிரதேசம், காடுகளினாலும் குன்றுகளினாலும் நிறைந்து மனிதப்போக்கு வரவுக்குச் சாத்தியமில்லாததாய் இந்நாட்டுக்குச் சத்துரு பயமில்லாமற் காக்கின்றது. இதுமாத்திரமல்ல. இந்நாட்டாருக்கு உணவையும் செல்வத்தையும் கொடுப்பது இதுவே. குளிர் காலத்தில் பனியை மிகுதியாய்ச் சேகரித்து வைத்துக்கொண்டு அப்பனியை வெயிற் காலத்தில் ஆறுகளாய்ப் பெருகவிடுகின்றது. அவ்விதம் பெருகும் புண்ணிய நதிகளில் முக்கியமான ஸிந்து கங்கை, யமுனை, பிரமபுத்திரி என்பன இமயமலையின் தென் பாகத்திலுள்ள சமவெளியைச் செழிப்பாக்குகின்றன.

இச்சமவெளிதான் இந்நாட்டில் மிகுந்த செழிப்புள்ளதும் ஜன நெருக்கமுள்ளதும். இந்தியாவின்மேற் பகைவர் படையெடுத்து வந்து கைப்பற்றிக்கொண்டது இப்பாகமே. இதன் தென்பாகத்தில் உள்ள தக்ஷிணப் பிரதேசம் கிழக்கிலும் மேற்கிலும் கடலோரமாய் மலைகளாற் சூழப்பட்டுக் கன்னியாகுமரி வரையில் எட்டி நிற்கின்றது. நன்னதிகளும், காடுகளும், புண்ணியக்ஷேத்திரங்

களும் அலங்கரிப்பது இப்பிரதேசத்தையே. இவ்வாறு மகிமைபொருந்திய நம் பரத கண்டத்தின் ஜனத்தொகை 294,266,701 இருபத்தொன்பது கோடியே நாற்பத்திரண்டுலக்ஷத்து அறுபத்தாறுயிரத்து எழுநூற்றொன்று.*

"மடியில் கனமிருந்தால் வழியில் பயம்" என்பது போல இந்நாடு செல்வத்திற் சிறந்திருந்ததால் பலரும் இதைக் கவர நினைந்தனர். மேற்றேசத்தோராகிய கிரேக்கர் வடமேற்கின் மூலையில் ஓர் பாகத்தைக் கைப்பற்றி அதை நிறுத்திக்கொள்ளச்சக்தியில்லாமல் திரும்பிச்சென்றனர். பின்னர் மகம்மதியர் சமயம் நோக்கிவந்து நம் முன்னோரைப்படுத்திய பாட்டுக்கு அளவில்லை. கோயில்களெல்லாம் இடிபட்டன. புண்ணிய க்ஷேத்திரங்களெல்லாம் பாழாக்கப்பட்டன. வலிமை பொருந்தியவராதலால் அவரை எதிர்க்கச் சக்தியற்ற நம்முன்னோர், அவர் ஆளுகைக்குள் அடங்கி அனேக காலமிருந்தனர். பின்னர் ஐரோப்பா தேசத்தார் வியாபார விபாஜத்தோடு இங்கு வருவாராயினர். இவர்களில் போர்த்துகல் தேசத்தார், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர் முதலியோர் சிற்சிலகாலம் தங்கள் அதிகாரத்தைச் செலுத்திவிட்டு காலக்கொடுமையினால் நிலைநிற்கமாட்டாமல் திரும்பித் தங்கள் நாடுகளுக்குச்சென்றனர். அவர் நீங்கியதும் ஆங்கிலேயருக்கு நல்ல சமயம் வாய்த்தது. நாட்டை எளிதில் கைப்பற்றி அதிலுள்ள சிற்றரசர்களை யெல்லாம் கீழ்ப்படுத்தி மேன்மையோடு அரசு புரிகின்றனர். முதலில் வியாபாரத்திற்காகவே வந்து இந்திய அரசர்களின் தயவினால் கொஞ்சம் ஊன்றிக்கொண்டவுடன், நிலம் சம்பாதிக்க வாரம்பித்தனர்.

1690-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் ஹூக்லி நதிக்கரையில் தங்கள் கொடியை நாட்டியதுமுதல் 1799-ம் வருஷத்

* 1901-ம் வருஷத்தில் எடுத்த ஜனசங்கையின்படி.

திம் ஸ்ரீரங்கபட்டணம் பிடிபட்டது வரையில் அதிகமாக சுதேச அரசர்களுடைய சம்பந்தங்களில் தலையிட்டுக்கொள்ளவில்லை. அதற்குப்பின்பு, இங்கு உண்டாயிருந்த சண்டைகளை விலக்கிச் சனங்களுக்கு நன்மையுண்டாக்கவேண்டியதற்காக தலையிடவேண்டியது அவசியமாயிற்று. உதாரணமாக, மைசூரில் ஆண்ட இந்தியவரசனை அவன் கீழிருந்த ஹைதர் ஆலி என்னும் படைவீரன் ராஜ்யத்தினின்றும் துரத்திவிட்டுத் தான் அரசனாகித் தன்னரசைத் தன் மகனுக்கும் கொடுத்துச்சென்றனன். ஹைதராபாத்திலோ, மொகலாயச்சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப் டில்லியிலிருந்து தக்ஷிணத்தைப் பாதுகாக்கும்படி ஓர் படைவீரனையனுப்ப அவன் ஹைதராபாத்தைக் கைப்பற்றிச் சுவாதீனப்படுத்தித் தன் சந்ததியார்க்குக் கொடுக்க, அவர் வசத்தில் அந்நாடு இன்னுமிருந்துவருகின்றது. குவாலியர் தேசத்தையாண்டுவருகிற ஸிந்தியா வம்சத்தின் மூலபுருஷன் பேஷ்வாவுக்குப் பேருக்கு மாத்திரம் கீழ்ப்படிந்துவந்த ஒரு சேனைத் தலைவன். இந்தூர் தேசத்தை ஸ்தாபித்தவனும் அம்மாதிரியான ஓர் போர்வீரனே. ஔரங்கசீபினால் ஆளும்படி அனுப்பப்பட்ட ஒரு ஆப்கான் படைவீரனே போபால்தேசத்தை ஸ்தாபித்து நிலைநிறுத்தினான். பூனாவில் ஒரு பிராமணன் ராஜனை விலக்கிவிட்டு அரசெல்லாம் தன் கைக்கொண்டனன்.

இம்மாதிரியாக இந்தியா முழுவதும் கலகமும் குழப்பமுமாகவிருக்கவே, நிலமெல்லாம் பயிரிடுவாரின்றி அழிந்துபோயின. அடக்குவாரில்லாமற்போகவே, கொள்ளைகளும் கொலைகளும் அதிகரித்தன. ஜனங்களுக்குப்பிராணபயம் உண்டாகவே மூலைக்கு மூலை ஓடத்தலைப்பட்டார்கள். அரசு பாழடையும்படியிருந்தது. கொடுங்கோன் மன்னர் அதிகரித்து நாட்டுக்குப் பலவிதத்தாலும் தீங்கிழைக்க, அதைப்பொறுக்கமாட்டாது நாட்டாரெல்லோரும் அரற்றிபழும் தருணத்தில் தெய்வாதீனமாய் ஆங்கிலேயர் தோ

ன்றி, சிறிது சிறிதாக நாட்டைக்கவர்ந்துகொண்டு, பலமதிகரித்துத் தங்களேயும் ஸ்திரப்படுத்திக்கொண்டார்கள்.

கொடுங்கோன் மன்னரனைவரையும் கீழ்ப்படுத்தப்பல வாண்டுகள் சென்றன. ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் காலத்திலேதான் இந்த வணங்காமன்னரெல்லாரும் அடங்கிச்சிரான நிலைக்கு வந்தனர். வந்தபிறகும், அவர்கள் பழைய நிலைக்குத் திரும்பாவண்ணம் ஆங்கிலேயர் பாதுகாத்துவருகின்றனர். அவர்களுக்கிருந்த அதிகாரங்களில் பல அவர்களிடத்தினின்றும் விலக்கப்பட்டன. முதலாவது, ஒரு அரசனுக்கும் மற்றொரு அரசனுக்கும் யாதொரு சம்பந்தமும்கூடாது. ஏதாவது வேண்டுமானல் ஆங்கிலேயர் மூலமாய்த்தான் செய்யவேண்டும். அரசர்களுள் ஒருவர்க்கொருவருக்குள்ள சம்பந்தமற்றுப்போகவே அவர்களுக்குள் சண்டைசச்சரவுகளுண்டாவது துர்லபமாகிறதுபற்றி அவர்கள் பெரிய சைனியங்களை வைத்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லாமற்போயிற்று. ஆயினும், தங்கள் தங்களுடைய நாடுகளில் கலகம் நேரிடாமல் பாதுகாக்கவேண்டியதற்காகவும் ஆங்கிலேயருக்கு வேண்டிய சமயங்களில் ஒத்தாசை செய்ய வேண்டியதற்காகவும் சிறிய சைனியமொன்று ஒவ்வொருநாட்டிலும் இருக்கும்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு இந்தியாவிலுள்ள சுமார் அறுநூறு அரசர்களும் சிற்றரசர்களும் தங்கள் தங்கள் மானத்தையும் நாட்டையும் அன்போடு காப்பாற்றிவருகிறார்கள்.

இப்பரத கண்டத்தின் பரப்பளவில் மூன்றி லொரு பாகமாகியசுமார் 5,95,167 சதுரமைல் உள்ளபாகம் சுதேச அரசர்கள் கைவசத்தி லிருக்கின்றது. அதின் ஜனத்தொகை சுமார் ஆறுகோடியே அறுபதுலக்ஷமாகும்.

இனி இவ்வரசர்களில் முதன்மையானவர்களுடைய நாடுகளைப்பற்றிப் பேசுவாம்.

# வஸந்தஸேனை.

வஸந்தஸேனை—சகி, நினைத்து நினைத்து என்நெஞ்சம் புண்ணாய் விட்டதடி என் உயிர்த்தோழியான நீ இதற்கொருவழியுரைக்கமாட்டாயா? (பாடுதல்)

**இராகம் பியாது—ஏகதாளம்.**

பல்லவி.

*எப்படிச் சகிப்பேன் சகி இவ்விரகம்* — எப்.

அநு பல்லவி.

*ஒப்புவமையெங்குமில்லா வென்னின் னுயிர்ப்பங்காளனை*
*இப்பொழுதே காணவிடில் ஏங்கி உயிர்போமடி* — எப்.

சரணங்கள்.

*கண்ணழகும் காந்தன்கமனவழகும் சொல்லழகும்*
*கண்ணின்வழி சென்றென்மனம் கைப்பிடியாக்கினவே* — எப்.

*மல்லிகையைக் காணில் விஷமாய்த் தென்றல் வீசில் பயம்*
*மெல்லிசை வீணை யோசையில்மேனி நடுங்குதடி* — எப்.

*பித்தம் பிடிக்குமுன்னமே பிராணநாதனோடு கூடி*
*உத்தமியாய் வாழவோருபாயமுமில்லையோடி* — எப்.

சம்பகமாலை—ஏதடி வசந்தம் இதற்கொரு யோசனையா? வீண் விசாரப்படுகிறாய். உன்னிடத்தில்காதலுள்ள உன் நாயகன் உன்னை நினைத்து உனக்குமேலாகவே வருந்துவாரென்பதில் தடையில்லை, ஒரு கடிதமெழுதியனுப்பினாலென்ன? அதனாலென்னகுற்றம் சிறிதாலோசித்துப்பார்.

வஸ—[தியானித்துச் சிறிது முகமலர்ந்து] சம்பகம் நீ சொல்வது யுக்தமாய்த்தோன்றுகின்றது. ஒரு கடிதமெழுதட்டுமா? உத்தமகுல ஸ்திரீயின் சுத்த மான மனத்தை யெனக்குக்கல்பித்த ஜகதீசன் இந்த நிகிருஷ்ட ஜாதியில் ஏன் பிறப்பித்தானென்று கவலை யாயிருந்தேன். அதுவும் என் பாக்யவசத்தாலென்று இப்பொழுதல்லவா தோன்றுகின்றது. சகி! ஈசன் சிருஷ்டியில் எது பயனற்றதடி! ஆகா! நான் துணி ந்து என்நாதனுக்குக் கடிதமெழுதக் கூடுமே. குலம ங்கைக்கு எது பழிக்கிடமாகுமோ அதுவே என் புக ழிற்குக் காரணமாகின்றது. நல்லது எழுதட்டுமா (யோசித்து) எப்படி யாரம்பிப்பது? ஏனடி சம்பகம்! எவ்விதமாய் எழுதலாமடி எனக்கொன்றும் தோற்ற வில்லையே.

சம்ப—"பிராணநாதா" என்றாரம்பித்தெழுதேன்?

வஸ—அப்படி திடீரென்றாரம்பிக்கலாமா? அதுசாகசமல் லவா? பிராணநாதர் தான், தடையில்லை ஆனாலும் அவ் விதமெழுதுவதற்கு லஜ்ஜையாயிருக்கிறதே.

சம்ப—ஆனால் "ஆர்ய" என்றெழுதேன்.

வஸ—ஆம் அது சரியானபதமே; அவர் ஆர்யர் தாம் ஆனால் அப்பதம் பூஜ்யவாசகமாதலின் அதற்கும் பிந்தி எழுதப்புகும் மனோரத விஷயத்திற்கும் பொருத்த மில்லாமல் போகின்றதே.

சம்ப—ஆனால் "புவனவல்லப" என்று படாமல் படும்படி எழுதுகிறதுதானே.

வஸ—சகி சம்பகம்! உன்னை மெச்சினேன். "புவனவல் லபா" ஆகா எவ்வளவு சுந்தரமான வார்த்தை "வல் லப" என்ற பதம் என் காதலையறிவிக்கும்; புவன

மென்பது அதன் முன்னின்று என் லஜ்ஜையைக் காப்பாற்றும் உண்மையிலும் தனதினியகுணங்களால் புவியுளோர்க்கெல்லாம் வல்லபராயுள்ளவரவர். நல்லது சகி! புவனவல்லப என்றாரம்பிக்கட்டுமா ?

சம்ப—தவக்கமென்ன ?

வஸ—அப்படியே யாரம்பிக்கிறேன். அதற்குமேல் என்ன எழுதுகிறது. "தங்கள்மேல் தீராக்காதல் கொண்டேன்" என்றால் "வேசிகளெல்லாம் இப்படிப்பேசி வஞ்சிப்பது சகஜமே"என்பாரோ என்னவோ?"யான் தமக்குப்பிரியையன்றோ" என்பது மூடவினாவாகும். "தம்மையன்றி ஜீவிக்கமாட்டேன்" எனல் அனுவப விரோதமான வாக்கியம். "மதனன் என்னை இம்சிக்கிறான்" எனல் கௌரவக்குறைவான வார்த்தை "என் மனம் கவர்ந்தீர்கள்" என்பது சாகச பாஷணமாய்த் தோன்றும். "அவசியம் வரவேண்டுகின்றேன்" என்பது "தான்தான் அழகி என்று இவளுக்கு என்ன இறுமாப்பு" என்றவரேச இடந்தரும் "நான் தரிசனத்துக்கு வரட்டுமா"? என்பது "பெண்களின் மனம் எவ்வளவு சபலமானது" என்ற சொல்லுக்கு வழி கொடுக்கும். "தாங்களொருவேளை மறப்பீர்களோ வென்று வரப்பயப்படுகின்றேன்" என்பது அவருக்கில்லாத போதனையை யுண்டாக்கி நமக்கு விரோதமாய் முடியும். எனடி சகி! எப்படி எழுதுவேனடி.

சம்ப—ஏதடி வசந்தம்! இவ்வளவு மூடையாயிருக்கின்றாய். சத்குண நிதியான அம்மகாபுருஷன் குணங்களையன்றி மற்றொன்றையும் கவனியார். "பேசினாலும் போதும் பேதை நமைத் தூஷணமாய் ஏசினாலும் போதும்" என்று வேண்டுவது காதலுள்ள புருஷர்களினிலக்ஷணமென்றறியாயா ?

ஏமாங்கதன்—சம்பகமாலை உள்ளபடி யொளிக்காமல் சொல்கிறாள். என் கண்மணி என்னை லக்ஷ்யம்செய்து ஏசக்கிடைக்கவேண்டுமே.

வஸ—ஏதோ ஒரு விதமாய் எழுதுகின்றேன் குற்றம் குறையிருந்தால் நீ தான் திருத்தித்தரவேண்டும்.

சம்ப—அப்படியே யாகட்டும் விரைவிலெழுது.

வஸ—(எழுதுவதை யபிநயித்து) சகி! இதோ பார் இது போதுமா? இன்னும் ஏதாவது சேர்க்கவேண்டுமா?

சம்ப—(கையில் வாங்கிப்பார்த்து ஸம்ஸ்கிருதத்தில் படிக்கின்றாள்).

"अद्यापि किं भुवनवल्लभ? मामकाक्षदेवान्नपाययसि वल्लभता मुपेतान्।
रागाभिधानममृतं भवदीयरूप मन्थाननिर्मथितमद्धृदयाब्धिजातम्॥"

(புவனவல்லப! தங்கள் ரூப மத்தைக் கொண்டு என் இருதயசமுத்திரத்தினின்று கடைந்தெடுத்த ஆசையென்னு மமுதத்தைத்தங்கள் பிரிய பாத்திரர்களான என் இந்திரியங்களென்னும் தேவர்களை ஏனின்னும் பானம் செய்விக்கவில்லையோ?)

பதங்களெல்லாம் நன்றாயமைந்திருக்கின்றன; பாடினும் சுகமாய் இருக்குமென்று தோன்றுகின்றது; இதன் பொருள் விளங்கவில்லையே சிறிது விவரிப்பாய்?

ஏமா—சம்பகமாலை நமக்கு மிகவும் உபகாரியாகின்றாள். சுட்டுப்போட்டாலும் நமக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு அக்ஷரம்கூட வராது; இதன்பொருள் இவள் வாயாலேயே கேட்கும்படி செய்கின்றனளே.

வஸ—இதன் பொருள் விளங்கவில்லையா? அவ்வளவு கடினமாகவாயிருக்கின்றது இந்த சுலோகம். ஆனால் சொல்கிறேன் கேள் (என்று சொல்லவாரம்பித்து லஜ்ஜையை யபிநயித்துப் பின்வாங்கி) லஜ்ஜையாயிருக்கின்றதே! சொல்லத்தான் வேண்டுமோ?

சம்ப—அப்பா வெட்கமே! நாம் தான் இந்த ஜாலமெல்லாம் வேண்டாமென்றேனே. நல்லது சொல் பார்ப்போம். அதன் குணாகுணத்தை நான் அறியவேண்டாமா?

வஸ—அவசியம் அறியவேண்டியதுதான். சொல்லட்டுமா? சசி! பூர்வத்தில் பக்தபராதீனரான ஸ்ரீபகவான் தேவர்களுக்காகவேண்டி மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகியெனும் கயிற்றைக்கொண்டு தாமே விசுவரூபியாய் நின்று பாற்கடலைக் கடையவில்லையா?

சம்ப—ஆம் ஆம்.நான் இந்தமாதிரி ஒரு கதை கேட்டதாய் ஞாபகமிருக்கின்றது.

வஸ—அப்பொழுது உண்டான அமுதத்தை மோகினியுருவெடுத்து நின்று தாமே அத்தேவர்கள் களிக்குமாறு பகிர்ந்துகொடுக்கவில்லையா?

சம்ப—கொடுத்தாரோ? வாஸ்தவமே. அப்படித்தான் புராணம் கூறுகின்றது. சரி! அப்புறம்.

வஸ—அப்புறம் என்ன? அந்தக்கதைதானிந்த சுலோகத்தின் தாற்பரியம்.

சம்ப—நன்றாயிருக்கிறது சபாஷ்! சபாஷ்! நல்ல புத்தி மதியடி நீ "பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது" என்பதற்குச் சரியாயிருக்கிறது உன் காரியம். அமிருதமதன கதைக்கும் நீ யுத்தேசித்த பிரணயலேகத்துக்கும் என்ன சம்பந்தமடி.

வஸ—சம்பந்தமில்லையா? சம்பந்தமில்லாமலா ஒருத்தியெழுதுவாள், நான் என்ன பித்தம் கொண்டவளா?

சம்ப—தடையென்ன? ஒரு விஷயத்தில் பித்தங்கொண்டவள் தான்.

வஸ—அப்படியே இருக்கட்டும். இன்னுமொருதரம் வாசித்துப்பார் சம்பந்தமிருப்பது உனக்கே தெரியவரும்.

சம்ப—(வாசிப்பதாய்ப்பாசாங்குசெய்து)விளங்கவேயில்லை. நீ சொல்லவேண்டும்.

வஸ—சரி; கேள் எனது மனமே பாற்கடல் என் போன்ற வனிதையர் கண்களைக் கட்டி யிழுக்கவல்ல ரூபமே மத்து. அந்தக்கடலில்...அந்த மத்தை நாட்டி ஒரு திவ்யபுருஷன் தனது குணமென்னும் கயிறுகொண்டு கடைந்தான்.

சம்ப—அப்புறம்.

வஸ—கடையவே,—சம்பகம்! கேட்கின்றாயா?...கடையவே; அந்தக்கடலிலிருந்து ஆசை, ஆசை, யென்று பெயருடைய ஒரு அமுதம் வெளிவந்தது.

சம்ப—அந்த அமிர்தத்தை அந்தத் திவ்ய புருஷனெடுத்து உன் இந்திரியங்களுக்குப் பரிமாறவேண்டுமென்கிறாய். தெரிந்தது, தெரிந்தது, ஆகா என்ன புத்தி சாதுர்யம். இந்த சுலோகத்துக்கே அவர் விலைப்பட்டு விடுவார் போலிருக்கிறதே. இவ்வளவு நேர்த்தியாய் எழுதத் தெரிந்த நீ இத்தனைநேரம் ஒன்றுமறியாதவள் போல வேஷம் போட்டாயல்லவா? இவ்விதமான சூதுக்களுக்கெல்லாம் இருப்பிடமாதல்பற்றியே ஸ்திரீகளைக் கவிகள் (ஸம்ஸ்கிருதத்தைத் தழுவி]

आवर्तः संशयानामविनयभुवनं पट्टणं साहसानां
दोषाणां सन्निधानं कपटशतमयं क्षेत्रमप्रत्ययानां ।
स्वर्गद्वारस्य विघ्नः नरकपुरमुखं सर्वमायाकरण्डं
स्त्रीयन्त्रं केन सृष्टं विषममृतमयं प्राणिलोकस्य पाशः ॥

என்றும்

இராகம் இந்துஸ்தான் காபி சாபு.

மோசம்போனேனடிமானே
நேசமொழியைநம்பி வீணாகினேனே — மோசம்.
தாமரைக்கொடி என்றெண்ணினேன்
காமவிஷமேறிய கருநாகமென்றெண்ணாமல் — மோசம்.

கல்பலதை யென்றெண்ணினேன்
தல்பம்தீண்டிய த்ருஷ்டிவிஷமென்று நினையாமல் மோசம்.
பிராணசகி யென்றேமாந்தேன்
திராணியொழிக்கும் பச்சைப்பாம்பென்று நினையாமல் மோ.

என்றும் இவ்வாறெலாம் கண்டபடி நிந்திக்கின்றார்கள். நல்லது சகி! சந்தோஷம் இதை யார்வச மனுப்பலாம்.

வஸ—[சற்றுநேரமாலோசித்து] சிரமத்தைப் பாராமல் நீதான் போய்வரவேண்டும். வேறு யாரைநம்புவேனடி. அவர் வீடு சமீபத்தில்தானே. கால்நாழிகைக்குள்போய்வந்துவிடலாம். கொஞ்சம் போய் வருகின்றையா? நான் இந்தமாதவிக்கொடியினிடமே நிற்கின்றேன்.

சம்ப—அப்படியே உன் பிரியத்தை நிறைவேற்றுவதைவிட எனக்கு வேறென்ன காரியமிருக்கின்றது.

வஸ—நான் வேலையிட்டதாய் நினைத்து மனஸ்தாபமடையாதே!

சம்ப—ஒரு பொழுதுமில்லை நீவேறு நான் வேறு? போய் ஒருநொடியில் சந்தோஷசமாசாரம் கொண்டுவருகிறேன் (போகின்றாள்)

ஏமா—இதற்குச் சமீபமாயுள்ளது நமதரண்மனையே. சாருதத்தன் வீடும் சமீபத்தில் தானே. நல்லது நான் முன்னாலேயே வீடுபோய்ச்சம்பகமாலையின் வரவை எதிர்பார்க்கட்டுமா? எதற்காக? கையில் வெண்ணையிருக்க நெய்க்கழுவானேன். அவள் போய் யாரிடத்தில் கடிதத்தை யொப்பித்தாலும் நம்மிடம் தானே சேரும்; அதோ நம்மனோரதம் தனித்து நிற்கின்றது. இணை பிரியாத சம்பகமும் நமது அதிருஷ்ட வசத்தால் விலகிப்போகிறாள். இம்மாதிரியான சமயம் எளிதில் வாய்க்குமா? நாணத்தை விட்டு அவள் மனத்தை வெளியிடக்கூடுமோ. விலாஸ வீக்ஷணங்களாலும் உல்

லாஸ ஸல்லாபங்களாலும் என்னையாநந்த சாகரத்தில் அமிழ்த்தினவளே. போகிறேன். இவ்வளவு அனுகூலம் செய்த தெய்வம் சம்பகத்தைத் தாமதிக்கச்செய்யாதா? அவள் பாம்பு கடித்திறந்தாலுமெனக்கிஷ்டமே.

வஸ—[வலக்கண் துடிப்பதையபிநயித்து] என்ன! திடீரென்று கண் துடிக்கின்றதே. என்ன விபத்து வருமோ தெரியவில்லையே. என் செய்வேன். சம்பகத்தையும் அறியாத்தனமாய் அனுப்பிவிட்டேனே. ஜகதம்பிகே! ராஜராஜேச்வரி! நீயே துணை [ஏமாங்கதன் வருவதைக்கவனித்தவளாய் திகிலை யபிநயித்து] ஆ! தெய்வமே! என் மனம் பதைக்கின்றதே. அந்தப் பாவி அதோ வந்துவிட்டானே. பாம்பின் வாய்த் தேரைபோலும் அகப்பட்டுக்கொண்டேனே ஆ! எவ் விதம் தப்புவேன். (துரிதமாய்ப்போகின்றாள்).

ஏமா—[வழிமறித்து]

இராகம் காம்போதி நடகம்.

பல்லவி.

என்னபடபடப்பு? யாரிடமிந்தபயம்?
வன்னமயிலே! சொல்லடி.

அனு பல்லவி.

பின்னகதிதளரப் பார்வைமிகமருள
தன்னந்தனியாய் இங்குதேனே! தவிப்பதேனோ? என்.

சரணம்.

கூந்தலவிழ்ந்துவீழ குங்குமங்கலைந்திட
சாந்தகரையக் கண்கள்சாய்ந்து சிவக்க, வனம்
போந்தவேடரைக்கண்டு பயந்துவேகமாய் ஓடும்
காந்தமானினம்போல் நீ கலங்கிவாடுவதேனோ? என்.

வஸ—(ஒன்றும் பதில் சொல்லாமல் விலகிப்போக யத்தனிக்கின்றாள்).

ஏமா—விப்ரமவதி! நான் கேட்டதற்குப் பதில்கூடச் சொல்லக்கூடாதா? என்னிடமவ்வளவு கோபமா?

வஸ—[தனக்குள்] துஷ்டனிவன் நயமாய்ப் பேசினலன்றி மானத்துடன் மீள்வதருமை ஆ! எப்படி யிவனை வஞ்சிப்பேன் [வெளியாய்] மன்னவா! ஏதோ பொழுதுபோய்விட்டதென்று வேகமாய் வீடுபோகிறேன். தயவுசெய்து வழிவிடுங்கள்.

ஏமா—சுந்தரி! என்ன அவசரம், பயமா? நான் பக்கத்திலிருக்கும்போது எதற்காக நீ பயப்படவேண்டும். நானுன்னை ஜாக்கிரதையாய் வீடு கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். இவ்வஸந்தோத்தியானத்தில் மலையமாருதம்மெல்லெனவீசிக்குசுமவாசனையால்மனத்தை மயக்கும் இந்த சந்திபாகாலத்தில்—இவ்வனத்தின் அதிதேவதையைப்போன்ற உன்னையும் உன்னிடத்து வெகுநாளாய்க் காதல்கொண்ட அனுரூபனுன என்னையும்—தெய்வம் தானகவே சந்திக்கச் செய்திருக்க ... ... ... ...

வஸ—[ஒருபுற மொதுங்கிப்போய், தனக்குள்] அய்யோ! பாவி யாரம்பித்துவிட்டானே ஸரஸவார்த்தையாட எப்படிப்பதிலுரைப்பேன். [வெளியாய்] மகாராஜ, தங்கள் செல்வத்திற்கு என்னைவிடப் பதின்மடங்கதிகமானலாவண்யமுள்ள ஸ்திரீகள் தானய்க்கிடைப்பார்கள். துஷ்குலீனையாய் சௌபாக்யமென்பதேயில்லாத என்னிடம் ஆசைகொள்வது தங்கள் பெருமைக்கே குறைவாகும். செலவு தாருங்கள் நான் போகின்றேன்.

ஏமா—சதுரபாஷிணி! உன்னைவிட அழகான பெண்களைப் பிரமன் இனிமேல்தான் சிருஷ்டிக்கவேண்டும். வீணய்க் காலம் போகின்றது தடை சொல்லாதே. தயவு செய், யான் உன்னிடம் வெகுநாளாய் ஆசைகொண்டவன்.

### இராகம் கமாசு ஏகதாளம்.

ஆசையாகினேன் அன்னமே யுன்மேல்நான்
நேசமுடன்வா பேசிக்குலாவுவோம். ஆசை.
என்னை மறந்தேன் உன்னைக்கண்டமுதல்
நீயே யாகினேன் நீ வேறாகலாமோ? ஆசை.
மதிதுறந்தேன் மதிவதனியே!
மதுவுண்டனே மானமெங்குபோச்சோ? ஆசை.

### இராகம் கமாசு ஆதி.

ஆசைகொண்டேனடி நான் கண்ணே
(மின்னே, பொன்னே) உன்மேல் ஆசை.
நேசமுடனுன்னை நாடிஸரஸமிக
வாடிக்கொண்டாடிப் பின்கூடிக்குலாவவே ஆசை.
இன்பரஸமூறும் இதழ்பருகிச்சுக
வாழ்வியிலாழ்ந்து மகிழ்ந்தேயுனைப்புகழ ஆசை.

காதலென்பதோரிடத் தேற்பட்டால் அவ்வஸ்து கிடைத்தாலன்றி அது சாந்தியடையாது என்பது உனக்குத்தெரியாதா? கண்மணி மறுவார்த்தை சொல்லாமே வா. இந்த மேடையிலுட்காருவோம்.

ப. கி. கல்யாணராம சாஸ்திரிகள்.

இன்னும் வரும்.

# கிருஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

## 13-ம் அதிகாரம்.

### "வருவன எல்லாம் வருக." என்றிருத்தல்—அதாவது சோதனையைச் சகித்தல்.

இவ்வுலக வாழ்வில், சோதனையும், துயரமும் இயல்பாம். ஆகவே, ஜோப், என்பவரின் சரிதத்திஞல் "உலக வாழ்க்கை என்ருல் சோதனைக்கு இருப்பிடம்." என அறிகிறோம். அதனுல், ஒவ்வொருவரும் சோதனைகளைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தம்முடைய தியானத்தில், விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். சோர்வும் மனத்தளர்ச்சியும் தன்னைப்பற்ருது இருக்கட்டும். தம்மைத்தாழ்த்தித் தம்மை வசப்படுத்த (Satan) மாயை எங்கே யென்று இரவு பகல் காத்துக்கொண்டிருக்கின்றது. முற்றும் தூயவர் ஒருவருமிலர். முற்றும் நல்லவர் ஒருவருமிலர். சோதனை, யாரையும் விடாது. எப்போதாயினும் வந்துதீரும். அதை விட்டு விலகமுடியாது.

2

கொடுமையான சங்கடங்கள் சம்பவிக்கின்றனவே.—என்ருலோ, அவைகள் மனிதனுக்கு அனுகூலமானவை. அவைகளை தைரியமாகப் பொறுத்தால், நம் அகந்தை ஒடுங்கும். தூயராவோம். நம்மறிவு விரியும். ஞானிகள் என்ற அனைவோரும் பல சங்கடங்களை அனுபவித்தவர்கள்; பல கவலைகளுக்குள்ளாகி யிருந்தவர்கள்; அவைகளைத் தைரியமாகப் பொறுத்துப் பலன் அடைந்தார்கள். அத்துன்பங்களைத் தைரியமாகப் பொறுக்காமல் இருந்தோர், ஈசன் வழிவிட்டு நழுவிக் கெட்டுப்போனுர்கள்.

### 3

எந்த ஆசிரமியாக இருப்பில் என்ன ; எவ்விடத்தில் இருப்பில் என்ன, சோதனைகளும் துன்பங்களும் அணுகாமல் இரா. மனிதன் உள்ளவரை அவைகளை விட்டு விலகமுடியாது. ஏனெனில், சோதனைக்கு மூலம் தன்னுள்ளே. காமத்தில், பிறந்தோம். ஒரு சோதனை, ஒரு துன்பம் வந்து தணிய, மற்றொன்று அதன் ஸ்தானத்திற்கு வருகிறது. ஆக ஏதாவது ஒரு துன்பம் அல்லது மற்றது மனிதனுக்கு இருந்துகொண்டே யிருக்கும். அவனுடைய பூர்வ ஆனந்த நிலைமையைவிட்டு விலகினது முதற்கொண்டு, இந்தக்கெதி தான் அவனுக்குள்ளது.

### 4

அநேகர், சோதனைகளைவிட்டு விலகிக்கொள்ள முயலுகிறார்கள். அவ்வளவுக்குத்தக்க பாதாளத்தில் விழுகிறார்கள். அவைகளை விட்டு ஓடினால், அவைகள் விடா. அவைகள் வரட்டுமென்று பொறுத்துத் தணிந்து கொடுத்தால் நமக்குத் தைரியம் உண்டாகும். அவைகளைக்கண்டு ஒதுங்குகிறவன் அவ்வளவு சாதகம் பெறான். திரும்பவும் அதிக ஊக்கத்துடன் அவைகள் அவனைத் தாக்கும். சிறுகச்சிறுகப் பொறுமையாலும், மனச்சமாதானத்தாலும், ஈசன் அருளால், அவைகளை மேற்கொள்ளலாகும். முரட்டுத் தனத்தினாலும், மனச்சஞ்சலத்தினாலும் பரபரப்பான நடத்தையாலும் அவைகளை வெல்லமுடியாது. சோதனையால் மெய்யுணர்வு பெறுவாய். அதனால், துன்பத்துக்குள்ளாயினாரைச் சாந்தமாய் நடத்துக; அவர் மேல் அன்புடையனாய் ஒழுகுக: அவருக்கு ஆறுதல் சொல்லுக; நினைக்கக்கேடு தனக்குஎன்ற பழமொழியைஉன்னுக; சஞ்சலசிந்தையும், ஈசனிடம் பற்றுவையா மனமும், இவ்விரண்டும் துன்பத்திற்கு வித்தாம். வேறு வித்து இடல் வேண்டுமோ ? சுக்கான் இல்லா மரக்கலம், அலையால் அங்கும் இங்கும் தத்தளிக்குமாறு போல வாழ்நாளை நேர்மைப்படுத்தாமலிருக்கின்ற புத்திமீனன், தவிப்பான்.

### 5

நெருப்பினால் இரும்பு சுத்தமாகும் ; துன்பத்தினால் நல்லார் விளங்குவாராவர். பெரும்பாலும், நம்முடையசக்தி நமக்கே தெரியாமல் இருக்கும். துன்பமும் துயரமும் நம்முடைய சக்தியை வெளிப்படுத்தும்.

ஆயினும், துன்பம் அணுகுகையில், எச்சரிக்கையா யிரு. அப்போது, அதை இலகுவாய் ஜயிக்கலாம். அது அணுகுகையில் நம

மனம் சலிக்காமலிருப்பின், அது மனதுக்குள் பிரவேசிக்கு முன் அதை வெல்லலாம். "வருவாயிலேயே வியாதியைத்தொலைத்துவிடு. பின்னீடு செய்வோம் என வேண்டாம்." இது ஒரு ஞானியின் துணிபு. அன்றேல், ஒரு தீய சிந்தை மனசில்படும்; பின்பு அது விஸ்தரிக்கும்; பின்புமனம்அதைநினைத்துநினைத்துத் தீயபாவத்தைச் சித்திரிக்கும்; பின்பு அதில் ருசி தட்டும்; பின்பு அதின் வசமாகும். இவ்வண்ணம் மெல்ல, மெல்ல, அது பலப்பட்டு நம்மை அடிமைப் படுத்தும். அத்தீய பாவம் வரும்போழ்தே, கண்ணுயிராமல், சோர்வு உற்று இருப்பினும், வந்த பிறகு பார்ப்போம் என்று நினைப்பினும், அத்தீய பாவம் மேன்மேலும் விருத்தியாக விருத்தியாக நம்முடைய தைரியம் வரவரத்தளர்வதாகும்.

### 6

சிலர், நிவிர்த்திமார்க்கத்தின் ஆரம்பத்திலேயே, அதிக சோதனைகளுக்கு உள்ளாகிறார்கள். சிலர் அதன்கடைமுறையில், துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள். பின்னும் சிலர்—வாழ்நாள் முழுமையும் துன்பப்படுகிறார்கள். சிலர் சொற்பத் துன்பத்துக்கு உள்ளாகுகிறார்கள். இவையெல்லாம் ஈசன் செயல். அவன் அவனுக்குத்தக்க வாறு, தர்மம் நிகழும். அவன் அவன்யோக்கியதையை, அவர் அறிவார். அதற்கு ஏற்றபடி துன்பத்தை வருத்திடுவார். அவரை நம்பினவரின் க்ஷேமத்தின் பொருட்டுத் தொன்றுதொட்டு, இந்தத்தர்ம விதியே நடைபெறுமாறு, ஏற்படுத்தியிருக்கிறார்.

அதனால், சோதனையாகத்துன்பம் நேரிடில், மனம் சோர்வடையாது இருமின்: அகலாது இறைவனைப் போற்றுமின்: இப்படிச் செய்வீரேல், நம் துன்பத்தில், அவரிரங்கி, அருள் புரிவர். "ஒவ்வொரு துன்பத்துடனும் அதை விட்டு விலகிக்கொள்ளும் உபாயத்தையும், அதைப் பொறுத்துக் கொள்ளும் முறையையும், ஈசன் அமைத்திடுவர்," எனப் பால ஞானியர் செப்பியிருக்கிறார்.

ஒவ்வொரு சோதனையிலும், ஒவ்வொரு துன்பத்திலும் ஈசன் அருள் இருக்கிறதென்று உன்னி, மனத்தைத் தாழ்மைப்படுத்திக் கொள். பணிந்தமனமுடையவரை, இறைவன் கைதூக்கிவிடுவர், ரக்ஷிப்பர். சோதனைகளாலும், துன்பங்களாலும், ஒவ்வொருவனுடைய மனோநிலையின் விருத்தி விளங்கும். அப்போதுதான் அவனுடைய மனவொழுக்கமும் மனோதர்மமும் அதிகமாகத் துலங்கும். நாம் மனத்தின் கண் மாசிலனாக இருப்பினும், அன்பினால் மனம் உருகினும், என்ன துன்பம் வந்தாலும் அவை நம்முடைய மனத்தைச்சலிப்

பிக்காவாம்: எத்துன்பம் வரினும், அதைப்பொறுத்தால், நிவர்த்தி மார்க்கத்தில், மேம்பாடு அடைவானென்பதற்கு நம்பிக்கை உண்டு.

பெரியசோதனைகளில் சிலர் சாவதானமாய் நீந்தித் தப்புகிறார்கள். அவர்கள் அற்பத்துன்பங்கள் நேரிடில் அடிக்கடி அமிழ்ந்து போகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால்—கொடிய துன்பம் வருங்கால், தம்மை நம்பாமல் இறைவனை நம்பிக் கரையேறுகிறார்கள். சிறிய துன்பங்கள் வரில் அவரை நினையாமல் தம்மை நம்பித் தடுமாறுகிறார்கள்.

## 14-வது அதிகாரம்.

### ஆராயாத தீர்மானத்தை விலக்குதல்

உன் யோக்கியதையை நீ உன்னிப்பார். பிறர் குற்றங்களை யோசித்துநாடு. பிறர்மேல் அவதூறு சொல்லும் முயற்சிவேண்டாம். பலகால் நாம் குற்றங்களைச் செய்கின்றோம்; இலகுவில் பாபத்தைப் பண்ணுகிறோம்; நம்மை நாமே சோதித்துப்பார்த்தோமேயானால் அது நமக்கு நன்மை பயக்கும். நம்முடைய மனோபாவத்துக்குத் தக்கபடி, பிறர் குற்றங்களையும் குணங்களையும் கிரகிக்கிறோம். ஒன்றன் மீது நமக்குப் பற்றுண்டானால் அதைச் சீர்தூக்கும் யோக்கியதை குன்றுகிறது. சத்தியமே நம்முடைய நோக்கமாயிருப்பின், நம்முடையமனத்துக்கு விரோதமாய் ஒன்று இருப்பினும், அதனால் தர்மமுறையினின்று மனம் நழுவாது; இன்றேல், ஏதேனும் ஒன்று, அகத்தின் கண்ணுவது, புறத்தின் கண்ணுவது நேரிட்டு மன நேர்மையைக் கெடுத்து, அதன்வழியே இழுக்கும்.

2

அநேகர் தாம் செய்பவைகளிலெல்லாம் குப்தமாக, சுயநயம் நாடியே செய்வர். அதை அவர் தாமேஅறியார். தம்முடைய பிரியத்துக்கும், மனோபாவத்துக்கும், நேர்மையாக எல்லாம் ஒத்து நடைபெறின், அவரும் உபசாந்தம் உள்ளார்போல் நடிப்பர்; ஆனால் தம்மன நேர்மைக்கு அன்னியதாக ஒன்று நேரிடின், உடனே மனச் சஞ்சலம் அடைந்து துன்பமடைவார்.

3

மனோபாவங்களும் அபிப்பிராயங்களும் பலவாறாக வேறுபடுகின்றன. அதனால் சினேகிதர்க்குள்ளும், ஒரு ஊரார்களுக்குள்ளும், மத அபிமானிகளுக்குள்ளும், கலகங்கள் சம்பவிக்கின்றன. பலநாள் பழக்கம் இலகுவில் விடமுடியாது. ஒவ்வொருவரும் தம்

புத்திக்கு எட்டினமட்டில்தான் பிறரை நம்பி, நடிப்பவராவர். அதற்கப்பால் கால் எடுத்து வையார். இயேசுநாதரின் அருள் சக்தியில் பக்தி பாராட்டாமல் உன் அறிவு உனக்கு அடைக்கலம், உன் கர்மமே உனக்கு ஆதாரம், என நினைப்பின் இலகுவாகவும் சீக்கிரமாகவும் மெய்யுணர்வு உனக்கு லபிக்காது. கடவுளே நமக்கு அடைக்கலமென நினைத்தும், நம்மறிவின் சாமர்த்தியத்தை விட்டு அவரையே அன்புபாராட்டியும், இருக்கக்கடவோம்—இதுவே ஈசன் கட்டளை.

## 15-ம் அதிகாரம்.

### அன்போடு செய்யும் கருமம்.

ஒருவனுக்காவது அல்லது சொந்த லாபத்தை நோக்கியாவது தீயகருமம் செய்யாது ஒழிக. ஆனால் சில சமயங்களில் ஏழைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து, சத்கருமத்தைச் செய்யாமல் நிறுத்தலும் கூடும். அல்லது அக்கருமத்தைவிட்டு அதைவிட மேன்மை பயக்கும் மற்றொன்றும் செய்யற்பாலது. *

இவ்விதம் நடத்துவதினால் உன் சத்கருமத்துக்கு குறைவில்லை. அன்பின்றேல் வெளிக்கருமம் பயனில்லையாம். அஃதுண்டேல் கர்மம் எவ்வளவு அற்பமேனும், அது பலனுளதாம்—செய்பவன் மனோபாவம் எத்தன்மையதோ, அதுபற்றியே ஈசன் அருள் ஏற்படுவதாகும்; செய்யும் கருமத்தின் அளவுபற்றி அன்றாம்; அன்புடன் செய்யும் காரியம் சிறிதேனும், பெரிதாம்; உண்மையுடன் செய்யும் கருமம் உயர்வாம். சுயநயம் பாராட்டாது பொதுநயம் பாராட்டுவோன் கருமம் நன்றாம்.

நாம்செய்யும் சத்கருமங்களெல்லாம் சத்கருமங்களல்ல. அவை எல்லாம் சுயநயத்தை நாடிச் செய்தனவாகவே முடியும். அவைகள் சில, மனசின் பிரியத்தினாலும் சில, நாம் செய்தோமென்ற அகங்காரத்தாலும், சில, மறுமையிற் பலனைக்கருதியும், சில, நம் சுகத்தை நாடியும், இருக்கின்றனவாம். உண்மையில் சத்கருமத்தைச் செய்வான், அதனால் சுயநயம் தேடான், அதன்பலனை ஈசுவரார்ப்பணம் செய்வான். அவன் ஒருவரையும் கண்டு பொறாமைப்படான். தனக்கென்று சந்தோஷம் அவன் நாடான்; தானே சுகிக்கவேணுமென்று கருதான், இறைவனிடம் உபசாந்திபெறுதலே

---

* பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த—நன்மை பயக்கப் பெறின்—குறள்.

பெரும் பாக்கியமென எண்ணுவான். மனிதனால் ஆவது ஒன்றில்லை என எண்ணி எல்லாம் ஈசன் செயலென்று அவன் உணருவான். எல்லாம் ஊற்றுக்கண்போல அவரிடமிருந்து வருகின்றன என்று அறிவான். ஞானிகள் எல்லாம் கடவுளிடம் உபசாந்திபெறுதலையே தம்லட்சியமாக வைப்பார்கள். யதார்த்தமான அன்பு ஒருவனிடம் பொறியளவே இருப்பின், அவனுக்கு உலகு வாழ்வு வீண்பயித்திய மாகத் தோன்றும்.

## 16-வது அதிகாரம்.

### பிறர் குற்றத்தில் பொறையுடைமை.

உன்னைச் சீர்ப்படுத்தமுடியாவிடினும், பிறனைச்சீர்ப்படுத்தமுடியாவிடினும் அதைக்கடவுளே சீர்திருத்துவாரென்று நம்பி நீ பொறுமையாக இரு. இதுவே உனக்கு நலமாம். உன் பொறுமையின் அளவைச்சோதிக்கவும், உன்யோக்கியதையை விளக்கவும், இவ்விதம் சம்பவிக்கிறதென்று அறி. இவ்விதசோதனை இல்லாவிடில், மனிதன் யோக்கியதை பிரகாசிக்காது. இவ்வித இடையூறு நேரும்கால், அதைச்சகிக்கச்சக்தியும், மனச்சமாதானமும், அருளவேண்டுமென, இறைவனைப்போற்று. ஒருவன் ஒரு முறை, இரு முறை, புத்தி சொல்லியும் கேளாவிடில் அவனோடு போராடாதே. கடவுளிடம் அவனை ஒப்புவித்துவிடு. அவர் ஆக்ஞைப்படி நடக்கட்டுமென்று நினை. தீமையை நன்மையாக மாற்றும் சக்தி அவருக்குண்டு.

2

### பிறர் குற்றத்தையும் குறைவையும் சகிப்பாயாக.

அவை யெத்தன்மையதாயினும் பொறுப்பாயாக. உன் குற்றங்களையும், குறைகளையும், பிறர் சகிக்கவேண்டுமென விரும்புகிறுயல்லவா? நீ விரும்பியபடி உன்னை ஆக்கிக்கொள்ள உனக்கு முடியாமற்போனால், பிறரை உன் மனப்படி ஆக்க முயலுவதில் என்ன பயன்? நம்மைத்தவிர பிறர் எல்லாம் குற்றமும், குறையும் அற்ற ஞானிகளாக இருக்க விரும்புவோம்! நம் குற்றங்களைக் களைய நாடோம்! பிறர் குற்றங்களைக் கண்டிப்போம்! நம்மைக் கண்டிக்க இணங்கோம்! பிறர் சுதந்திரம் பாராட்ட நாம் சகியோம்! நம்முடைய விருப்பத்தில் தடை நேரிட்டால் அதைப் பொறோம்! பிறருக்கு விதிப்போம்! நம்மையும், பிறரையும், ஒரே தராசில் நிறுக்கச் சகியோம்! எல்லாருமே ஞானிகளேயாகில் பிறர் குற்றம்

சகிக்கச்சமயம் எங்கே? ஈசனுக்குத் திருப்தியாய் வழிபடும் முறை எங்கே? அதனால் பிறர் சுமையை நாம் தாங்குகிறதே ஈசுவர சங்கல்பமென, உலகமுறை காட்டுகின்றது. குற்றமிலார் ஒருவருமிலர், தன் கவலையைத் தானே தாங்கும் சக்தியுள்ளார் ஒருவரும் இலர்; ஒருவர் சுமையை மற்றவர் முறைமாறித்தாங்குகின்றார். ஒருவர் மற்றவருக்கு ஆறுதல் செய்கிறார்; உதவி புரிகிறார்; புத்தி கற்பிக்கிறார்; அறிவு ஊட்டுகிறார்; அவரவருக்குச் சோதனையான துன்பங்கள் நேரிடுங்கால் அவர் அவர் சுபாவம் விளங்கும். கெட்ட காலங்கள் மனிதனைக் கெடுக்காவாம். ஆனால் அவனவன் சுபாவத்தைக் காட்டுமாம்.

## 17-வது அதிகாரம்.

### துறவு.

பிறருடன் நேர்மையாக இருக்க விரும்பின் தன்னைத்தானே அடக்க வேண்டும். துறவிகளுடனும், ஒரு கூட்டத்தாருடனும், வாழ்நாள் முடியும் வரை குற்றத்திற்குள்ளாகாமல், காலங்கழித்தல் இலகுவான காரியமன்று. அவ்வண்ணம் நேர்மையாய்க் காலங்கழித்தவன் பாக்கியமே பாக்கியம்! நிற்கவேண்டியபடி நிற்கவும், நடக்கவேண்டியபடி நடக்கவும், பிரியப்படுவாயாகில், உன்னை வழிப்போக்கனாகவும் உலகத்தை வழிப்போக்கர் தங்குமிடமாகவும், எண்ணக்கடவாய். நிவிர்த்தி மார்க்கத்தில் நடைபெற்று கிருஸ்துவழிபடின், உலகம் உன்னைப் பித்தன் எனச்சொல்லும் காஷாயத்திலும், தலை மொட்டையிலும் பயனில்லையாம். ஒழுக்கம் மாறவேண்டும்: மனத்தூய்மை பெறவேண்டும்: சித்தவிருத்தி அடங்கவேண்டும்; இதுதான் சந்நியாசம். இறைவனடி சேரவும், ஆத்மஞானம் பெறவும், முயலாமல் உலகவழிபற்றி ஒழுகினால் தூக்கமும் துயரமுமாம். தன்னை அற்பனாகவும் எல்லாருக்கும் அடிமையாகவும் எண்ணுதான் உபசாந்தம் நீடித்து நிற்காதாம். பிறருக்குக் கைங்கரியம் செய்யவே, உலகத்தில் ஜனித்தாய்; அரசு ஆள அன்றும். உழைக்கவும், வருந்தவும், உனக்குச்சரீரம் அமைந்ததேயன்றி, சோம்பித்திரியவும், பயனில் சொல் சொல்லவும், அன்றும். தங்கம் உலையில் போல் மனிதர் உலகில் தபிக்கப்பெறுகிறார். இறைவனிடம் பூர்ண அன்பு பற்றி ஒருவன் நடை பெறுனுகில் அவன் கதி நிர்க்கதியே.

ஆத்மநாதன்.

இன்னும் வரும்.

# செவ்வாய்தோஷம்.

செவ்வாய் என்னும் கிரகம் பூமிக்கு அடுத்தது. பூமியின் அமைவுக்கும் செவ்வாய்கிரகத்தின் அமைவுக்கும் அதிகஒற்றுமையுண்டென்பது இக்காலத்து வானசாஸ்திரிகளால் அறிபப் பட்டிருக்கிறது. இந்தசம்பந்தம் நமது முன்னோர்களுக்குத் தெரிந்திருந்தபடியால் தான் செவ்வாயைக் குஜன் என்றும் பெயரிட்டிருக்கிறார்கள். குஜன் என்றால் பூமிக்குப் பிறந் தவன் என்று பொருள். செவ்வாய் கிரகத்தின் நிறம் அதிகச்சிவப்பு. ஆதலால் செவ்வாய் அக்கினிக்கு அதிகாரி. ஹிந்துக்களுக்கு விவாகம் நடக்கும் பொழுது நெருப்பில் செய்யப்படும் ஔபாஸனம் என்னும் ஓர் சடங்கு ஆரம் பிக்கப்பட்டுத் தம்பதிகள் இருவரும் ஜீவவந்தராயிருக்கும் வரையில் நடந்தேறிவரும். மனைவியானவள் புருஷனுக்கு முன் மரித்தால் அவளது சரீரத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கணவன் கடைசியாக ஔபாஸனம் செய்து அந்த நெருப்பில் ஒருபாகத்தைத் தூர எடுத்துவைத்து விட்டு, மிகுந்த நெருப்பைத்தான் அச்சரீரத்தின் பேரில் போடுகிறது; ஆதலால் மறுகல்யாணம் செய்துகொண்டா லொழிய அப்புருஷனுக்கு ஔபாஸனம் செய்ய அதிகார மில்லாமல் போகிறது. அக்கினிக்கு அதிகாரியாகிய செவ் வாய், ஔபாஸனக்கினியுடன் ஆரம்பமாய் அவ்வௌபா

ஸஞக்கினியுடனேயே முடியும் விவாகச்சடங்கிற்கும், அதிகாரியாகிறான் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா? மேலும் செவ்வாய் சமையலுக்கு உபயோகப்படும் லௌகிகாக்னிக்கும் அதிகாரி. ஹிந்துகுடும்பத்தின் மாதர்களுக்குள்ள கடமைகளில் தம்குடும்பத்திற்கு வேண்டிய உணவுகளைச் சமைப்பது ஒன்றென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமேயல்லவா. இவ்விதமாய் இவ்விரண்டு அக்னிகளுக்கும் செவ்வாய் அதிகாரியாயிருப்பதால் விவாகச்சடங்கிற்கும் விவாகமாய் வாழும் தம்பதிகளின் சுகதுக்கத்திற்கும் செவ்வாயே முக்கிய காரணமாகிறான் என்பது நன்கு புலப்படும். ஆதலால் தம்பதிகளுள் ஒருவர் ஜாதகத்தில் மாத்திரம் இத்தகைய செவ்வாய் துஷ்டஸ்தானங்களில் அதாவது கெட்டபாவங்களில் இருக்கும்பொழுது ஔபாஸஞக்கினியும் லௌகிகாக்கினியும் இரண்டும் சீக்கிரத்தில் அவிந்துபோய் அவ்வண்ணம் தோஷமுள்ள கணவனுக்கு தோஷமில்லாத மனைவியும் தோஷமுள்ள மனைவிக்குத் தோஷமில்லாத கணவனும் இறந்துபோய்விடுவார்களென்பது சித்தாந்தப்படும். இவ்வகைத்தோஷத்தைத்தான் செவ்வாய் தோஷமென்று சொல்வார்கள்.

2. கல்யாணம் செய்து கொள்ளும் தம்பதிகளில் ஒருவருக்கு நஷ்டத்தை உண்டாக்கும் தோஷங்கள் பலவற்றுள் இச்செவ்வாய்தோஷமும் ஒன்று. இச்செவ்வாய் தோஷத்தைக்காட்டிலும் அதிக பலமுள்ள தோஷங்கள் வேறு அநேகம் இருந்தாலும், விவாகத்திற்குப் பொருத்தங்கள் பார்க்கும்பொழுது இச்சென்னை இராஜதானியிலும் முக்கியமாய்த் தமிழ் நாடுகளிலும் இச்செவ்வாய்தோஷத்தையே அதிகமாகக் கருதுவது யாதுகாரணத்தைப்பற்றியோ எனக்குப்புலப்படவில்லை. மற்றைக்குணதோஷங்களைக்கருதாது நமது தமிழ்நாட்டில் இச்செவ்வாய் தோஷத்

தையே முக்கியமாகக்கவனிப்பதால் அநேககுடும்பங்களுள் அவர்கள் கோரியபடி விவாகங்கள் நடக்கத் தடைப்பட்டு நின்றுபோகின்றன வென்பதை நான் சொல்லவும் வேண்டுமோ.

3. நான் ஆராய்ந்த வரையில் இச்செவ்வாய் தோஷத்தைப்பற்றிக் கேரள சாஸ்திரத்தில் தான் விஸ்தாரமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதிலதைப்பற்றி விவரித்திருக்கும் சுலோகமாவது.

धने व्यये च पाताले जामित्रे चाष्टमे कुजः ।
स्त्रीणां भर्तृविनाशश्च भर्तृणां स्त्रीविनाशनम् ॥ १ ॥

தனேவியயேசபாதாளே ஜாமித்ரேசாஷ்டமேகுஜ:!
ஸ்திரீணம்பர்த்துரு விநசஞ்சபர்த்ரூணம் ஸ்திரீவிநசனம்॥

"செவ்வாயானவர் 2, 12, 4, 7, 8 இந்த பாவங்களில் இருந்தால் மனைவிக்குக் கணவனுடைய சாவையும் உண்டாக்குகிறார்".

இந்த 2, 12, 4, 7, 8 பாவங்களை லக்கினத்திலிருந்து மாத்திரமல்ல, சந்திரனிருக்கும் இடத்திலிருந்தும் சுக்கிரனிருக்கும் இடத்திலிருந்தும் பார்க்கவேண்டும். நான் மற்றோர் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறபடி ஒவ்வொரு பாவபலன்களையும் விசாரிக்கையில் அந்த பாவங்களை லக்கினத்திலிருந்தும் சந்திரனிருக்கும் இடத்திலிருந்தும் விசாரிக்கவேண்டும். இவ்வண்ணம் விவாக விஷயமாகப் பரிசோதிக்குமிடத்து லக்கினத்திலிருந்தும் சந்திரனிருக்கும் இடத்திலிருந்தும் 2, 12, 4, 7, 8 பாவங்களில் செவ்வாய் இருக்கிறாரா என்று கவனிக்கவேண்டும் என்பது தெளிவாகவிளங்கும். களத்திரபாவத்தைப்பார்க்கும்பொழுது சுக்கிரனிருக்கும் இடத்திலிருந்தும் மேற்சொல்லிய வீடுகளில் செவ்வாய் இருக்கிறாரா என்றும் பார்க்கவேண்டும். ஏனெனில், சுக்கிரன் களத்திர சுகத்திற்கும் தம்பதி

களின் அன்னியோன்னியநேசத்திற்கும் பொதுவாய் ஸ்திரீ சுகத்திற்கும் விஷய சுகத்திற்கும் ஸங்கீத, ஸாஹித்திய நாட்டிய, நாடக வித்தைகளுக்கும் வாகனங்கள் முதலிய வைகளுக்கும் அதிகாரி ஆதலால் விவாகமான தம்பதிகள் அன்னியோன்னியமாய்ப்பிரியம் பொருந்திச்சுகப்படுவதற்குச் சுக்கிரனிருக்கும் இடத்திலிருந்துகூடச் செவ்வாய் மேற்சொல்லிய கெட்டபாவங்களிலிருக்கக்கூடாது. ஆதலால் ஜாதகன் அல்லது ஜாதகியின் இலக்கனத்திலிருந்தும் சந்திரனிருக்கும் இடத்திலிருந்தும் சுக்கிரனிருக்குமிடத்திலிருந்தும் செவ்வாய் தோஷத்தைச் சோதிக்க வேண்டும். செவ்வாய் இலக்கனத்திலிருந்து மேற்சொல்லிய பாவங்களில் இருப்பதைவிடச் சந்திரனிருக்கும் இடத்திலிருந்து மேற்சொல்லிய பாவங்களிலிருப்பது அதிக தோஷமென்றும் சுக்கிரனிருக்குமிடத்திலிருந்து மேற்சொல்லிய பாவங்களில் இருப்பது முன் சொல்லிய இரண்டிலும் அதிகதோஷமென்றும் கருதுதல்வேண்டும். ஏனெனில் இச்செவ்வாய் தோஷத்தைப்பற்றி விவரித்துக்கூறியிருக்கும் கேரள சாஸ்திரப்பிரகாரம் லக்கினத்தைவிட சந்திரனிருக்கும் வீடு ஜாதகத்தில் முக்கியமானது. லக்கினம் சரீரத்தைக் குறிக்கும். சந்திரனிருக்கும் வீடு மனத்தைக்குறிக்கும். விவாக சுகத்திற்கே உரிய கிரகம் சுக்கிரன்; ஆகையால் சந்திரனிருக்கும் வீட்டைவிடச் சுக்கிரன் இருக்கும் வீடு அதிகமுக்கியமானது. சில சோதிட சாஸ்திரிகள் இதற்கு மாறுபாடாக சுக்கிரன் இருக்கும் வீட்டைவிட சந்திரன் இருக்கும் வீடு அதிகமென்றும் சந்திரன் இருக்கும் வீட்டைவிட லக்கினம் அதிகமென்றும் கூறுகின்றனர். ஆயினும் என்மேற்கோள் சரியானதென்று விளங்கும்.

4. மேற்சொல்லிய 2, 12, 4, 7, 8 இந்த பாவங்களில் தான் செவ்வாய் ஏன் தோஷமுள்ளவனென்றும், மற்ற

பாவங்களில் ஏன் தோஷமற்றவனென்றும் யோசித்து, பார்ப்போம். 2-வது பாவம் ஜாதகன் அல்லது ஜாதகியின் குடும்பத்தையும் அவர்களது இல்லறத்தையும் குறிக்கும். இவ்வில்லத்திற்குக் கணவனும் மனைவியும் முக்கிய ஆதாரங்கள் என்பது தெரிந்த விஷயந்தானே. 12-ம் பாவம் படுக்கையின் சுகத்தை அதாவது விவாகத்தினுலுண்டாகும் சாஸ்திர சம்பந்தமான காமசுகத்தைக் குறிக்கும். 4-ம் பாவம் ஜாதகன் ஜாதகிக்குள்ள சயனசுகத்தை மாத்திர மல்ல எல்லா சுகங்களையும் குறிக்கும். 7-ம் பாவம் புருஷன் ஜாதகத்தில் அவன் மனைவியையும் பெண்ணின் ஜதாகத்தில் அவள் புருஷனையும் குறிக்கும். 8-ம் பாவமோ இப்படி 7-ம் பாவத்தால் குறிக்கப்பட்டுள்ள சதிபதிகளுடைய மரணத்தைக்குறிக்கும். ஏனெனில் இரண்டாம் பாவம் மாரக பாவத்தையும் குறிக்கும். ஆதலால் ஏழாம் வீட்டிற்கு இரண்டாம் பாவமாகிய 8-ம் பாவம் அவ்வேழாம் வீட்டினுல் குறிக்கப்பட்ட சதிபதிகளுடைய மரணத்தைக்குறிக்கும். ஆதலால் தான் ஸ்திரீ ஜாதகங்களில் 8-ம் பாவம் அவர்கள் பதிகளுடைய மரணத்தைக்குறிக்கிறபடியால் மாங்கிலிய பாவமென்று சொல்லப்படும். புருஷனுடைய மரணத்தைப் பொறுத்ததல்லவா ஸ்திரீகள் கழுத்தில் கட்டியிருக்கும் மாங்கிலியம். இங்ஙனம் 2, 12, 4, 7, 8 ஆகிய இந்தபாவங்களுக்கும் விவாக தம்பதிகளுடைய அன்னியோன்னிய சுகத்திற்கும் கொஞ்சமாகவாவது அல்லது அதிகமாகவாவது சம்பந்தமிருக்கிறதென்று விளங்கும். மற்றஇடங்களில்செவ்வாய் ஏன்தோஷமுள்ளவனுகக் கூறப்படவில்லையென்றும் சோதிப்போம். 1-ம் பாவம் ஜாதகன் அல்லது ஜாதகியின் சரீரத்தைக் குறிக்குமே ஒழிய ஜாதகனுடைய மனைவியையாவது ஜாதகியினுடைய கணவனையாவது குறிக்கமாட்டாது. 3-ம் பாவம் சகோதரர்களைக்குறிக்கும். 5-ம் பாவம் புத்திரர்களைக் குறிக்கும்.

புத்திரர்கள் இல்லாவிடினும் விவாகசுகம் குறையக்காரண மில்லை. புத்திரர்கள் இல்லையென்று துக்கம் இருக்கலாம். 6-ம் பாவம் சத்துருக்களைக் குறிக்கும். 9-ம் பாவம் பிதாவையும் குருவையும் குறிக்கும். 10-ம் பாவம் உத்தியோகத்தைக்குறிக்கும். 11-ம் பாவம் லாபத்தைக் குறிக்கும். ஆதலால் இந்த 1, 3, 5, 6, 9, 10, 11 பாவங்களுக்கும் விவாகதம்பதிகளுள் அன்னியோன்னியமாயிருக்கும் சுகதுக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை யென்பது ஸித்தாந்தப்படும். ஆதலால் இப்பாவங்களில்செவ்வாயிருக்கும் பொழுது அந்தந்த பாவங்களினால் குறிக்கப்பட்டவைகளுக்குத்தீங்குநேரிடக் கூடுமே ஒழிய விவாகசம்பந்தமான காரியங்களுக்குத்தீங்கு ஒன்றும் நேரிடக் காரணமில்லை. அதனால்தான் இப்பாவங்கள் விலக்கப்பட்டன.

5. ஆகையால் லக்கினத்திலிருந்தாவது அல்லது சந்திரனிருக்கும் இடத்திலிருந்தாவது சுக்கிரனிருக்குமிடத்திலிருந்தாவது 2, 12, 4, 7, 8-ம் பாவங்களில் தம்பதிகளில் ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் இருந்து மற்றொரு ஜாதகத்தில் இல்லாமல்போனால் கெடுதி உண்டாகுமென்று ஏற்படும். இரண்டு ஜாதகங்களிலும் செவ்வாய் மேற்சொல்லிய இடங்களிலிருந்தால் ஒரு ஜாதகத்தின் தோஷம் மற்றைய ஜாதகத்தின்தோஷத்தால்நிவிர்த்தியாகும். ஏனெனில் அவன் பலமில்லாதவன்அல்லன் என்று சொல்லுமிடத்து அவன்பலமுள்ளவனென்னும் கருத்துப்புலப்படுமாதலால், வியாகரண நூலில் இரண்டு அன்மைகள் சேரும்பொழுது ஒரு உண்மை கொளப்படுதல் போல் இச்சோதிட நூலிலும் தம்பதிகள் இருவருடைய ஜாதகங்களிலும் தோஷம் இருந்தால் தோஷம் நீங்கினதாகக் கொள்ளப்படும். மேற்சொல்லிய வீடுகளின் கிரமப்படியே தோஷமும் அதிகப்படும். 2-ம் இடத்திலுள்ள தோஷத்தைவிட 12-ம் இடத்

தில்செவ்வாய்க்குதோஷம் அதிகம். இரண்டாமிடம் குடும் பத்தைமாத்திரம் குறிக்கும். 12-ம்இடமோ படுக்கைச்சுகத் தைக்குறிக்கும். 12-ம்இடத்திலுள்ளதோஷத்தைவிட 4-ம் இடத்தில் செவ்வாய்க்கு தோஷம் அதிகம். 12-ம் இடம் சயன சுகத்தை மாத்திரம் குறிக்கும். 4-ம் இடம் எல்லா சுகங்களையும் குறிக்கும். 4-ம் இடத்திலுள்ள தோஷத்தை விட 7-ம் இடத்தில் செவ்வாய்க்குத்தோஷம் அதிகம். 4-ம் இடம் சுகங்களைமாத்திரம் குறிக்கும். 7-ம்இடமோ ஸ்திரீ ஜாதகத்தில் கணவனையும் புருஷஜாதகத்தில் மனைவியையும் குறிக்கும். 7-ம் இடத்திலுள்ள தோஷத்தைவிட 8-ம் இடத்தில் செவ்வாய்க்குத் தோஷம் அதிகம். 7-ம் இடம் கணவன் அல்லது மனைவியைக் குறிக்கும். 8-ம் இடமோ அவரது மரணத்தைக்குறிக்கும். ஆதலால் 8-ம் இடத்தி லுள்ள செவ்வாய் தான் அதிகமான தோஷமுள்ளவன்.

6. ஆயினும், பேதையேன் என்னுடைய அபிப் பிராயப்படி இச்செவ்வாய் தோஷத்தையே அதிகமாகக் கருதுதல் சரியன்று. புருஷர்கள் களத்திரஹீனர்களாவ தற்கு வேறு அநேக தோஷங்கள் கூறப்பட்டுள. ஸ்திரீகள் விதவைகளாவதற்கும் அநேக தோஷங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. மேலும் எத்தகைய தோஷங்கள் இருந்தாலும் அத்தோஷங்களை நீக்கித் தம்பதிகள் அநேக காலம் எல்லாவிதமான சௌக்கிய போகங்களை அடையச் செய்யும் சுபயோகங்களுமுள. ஆதலால் இத்தகைய தோஷங்களையும் சுபயோகங்களையும் கருதுவதுமுக்கியமே அன்றி ஓர் செவ்வாய் தோஷத்தையே நாடுதல் சரியன்று. ஆயினும் இவ்வெல்லா தோஷங்களையும் பரிகாரயோகங் களையும் அறிந்துகொள்வது பிரயாசையாயும், ஓர் சுலோ கத்திலேயே தோஷமெல்லாம் கூறப்பட்டுள்ள செவ்வாய் தோஷத்தைக்கருதுவது சுலபமாயும் இருப்பதினாலேதான் இச்செவ்வாய்தோஷத்தைப் பற்றியே விசாரிப்பது இந் நாட்டில் அதிக வழக்கமாயிற்றென்று எனக்குத் தோன்று கின்றது.

7. ஒவ்வொரு விதிக்கும் விலக்குண்டு என்பது வியாகரணசித்தாந்தம். அதுபோலவே சோதிட சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொருதோஷத்திற்கும்விலக்குகளுண்டு. ஆயினும் இச்செவ்வாய் தோஷத்திற்கு மேற்கண்ட கேரள சாஸ்திரத்திலேயே கூறப்பட்டுள்ள விலக்குகள் அநேக ஜோதிடர்க்கு தெரியமாட்டாது. அவ்விலக்குகளாவன.

---

(1) த்விதியே பௌமதோஷஸ்து யுக்மகன்யகயோர் விநா.
द्वितीये भौमदोषस्तु युग्मकन्यकयोर्विना ।

(2) துவாதசே பௌமதோஷஸ்து விருஷதௌலிகயோர் விநா.
द्वादशे भौमदोषस्तु वृषतौलकयोर्विना ॥

(3) சதுர்த்தே பௌமதோஷஸ்து மேஷவிருச்சிகயோர் விநா.
चतुर्थे भौमदोषस्तु मेषवृश्चिकयोर्विना ।

(4) ஸப்தமே பௌமதோஷஸ்து நக்ரகர்கடயோர் விநா.
सप्तमे भौमदोषस्तु नक्रकर्कटयोर्विना ॥

(5) அஷ்டமே பௌமதோஷஸ்து தனுர்மீனத்வயோர் விநா.
अष्टमे भौमदोषस्तु धनुर्मीनद्वयोर्विना ।

(6) கும்பசிம்ஹௌந தோஷௌ ஸ்யாத் ப்ரத்யக்ஷம் தேவகேரளே.
कुम्भसिंहौ न दोषौ स्यात् प्रत्यक्षं देवकेरळे ॥

(7) குருமங்களஸம்யோகே பௌமதோஷம் நவித்யதே.
गुरुमंगळसंयोगे भौमदोषं न विद्यते ।

(8) சந்த்ரமங்களஸம்யோகே பௌமதோஷம் நவித்யதே.
चन्द्रमंगळसंयोगे भौमदोषं न विद्यते ॥

---

(1) இரண்டாமிடத்துள்ள செவ்வாய் அவ்விரண்டாமிடம் மிதுன கன்னிகளில் ஒன்றுனொழிய தோஷமுள்ளவன். அதாவது ஒரு ஜாதகத்தில் லக்கினத்திலிருந்தாவது சந்திரராசியிலிருந்தாவது சுக்கிர ராசியிலிருந்தாவது இரண்டாமிடம் மிதுனமாகவாவது அல்லது கன்னியாகவாவது இருந்து அதில் செவ்வாய் இருந்தால் தோஷ

மில்லை. வேறு இராசிகள் அவ்விரண்டாமிடமாயிருந்து அவ்விடங்களில் செவ்வாய் இருந்தால் தோஷமுண்டு. இடபலக்கினத்தாருக்கும் இடபராசியாருக்கும் இடபத்தில் சுக்கிரன் இருப்பவர்களுக்கும் மிதுனமாகிய இரண்டாமிடத்தில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. அதே விதமாய் சிங்கலக்கினத்தாருக்கும் சிங்கராசியாருக்கும் சிங்கத்தில் சுக்கிரன் இருக்கிறவர்களுக்கும் கன்னியாகிய இரண்டாமிடத்தில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. இவ்விடப சிங்கராசிகள் நீங்கலாக வேறு எந்த ராசிகள் லக்கினமானாலும் சந்திரராசியானாலும் சுக்கிரராசியானாலும் அவைகளுக்கு இரண்டாம்இடத்தில்செவ்வாய் இருந்தால் செவ்வாய்தோஷமுண்டு. இவ்விதமாகக்கீழ்வரும்சுலோகங்களின் தாத்பரியங்களையும் அந்வயிக்க.

(2) 12-ம் இடத்துள்ள செவ்வாய் அப்பன்னிரண்டாமிடம் இடபதுலாங்களில் ஒன்றானால் ஒழிய தோஷமுள்ளவன்.

(3) 4-ம் இடத்துள்ள செவ்வாய் அந்நாலாம் இடம் மேஷ விருச்சிகங்களில் ஒன்றானாலொழிய தோஷமுள்ளவன்.

(4) 7-ம் இடத்துள்ள செவ்வாய் அவ்வேழாம்இடம் மகர கடகங்களுள் ஒன்றானாலொழிய தோஷமுள்ளவன்.

(5) 8-ம் இடத்துள்ள செவ்வாய் அவ்வெட்டாமிடம் தனுர் மீனங்களில் ஒன்றானாலொழிய தோஷமுள்ளவன்.

(6) கும்ப சிங்கங்களினுள்ள செவ்வாய்க்கு தோஷமேயில்லை. இம்மாதிரி தெய்வத்தன்மையையுடைய கேரள சாஸ்திரத்தால் பிரத்தியக்ஷமாய் ஏற்படுகிறது. கும்ப சிங்கங்கள் 2, 12, 4, 7, 8 இவைகளில் எந்தஇடமானாலும் அங்குள்ள செவ்வாய்க்கு தோஷமில்லை யென்பது பிரமாணம்.

(7) செவ்வாயும் குருவும் சேர்ந்திருந்தால் செவ்வாய் தோஷமில்லை.

(8) சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் செவ்வாய் தோஷமில்லை.

8. இவ்விலக்குகளுக்கு உள்ள ஆதாரங்களையோசிப்போம். ஏனெனில் சோதிட சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு வசனத்திற்கும் சாஸ்திரசம்மதமான ஆதாரங்களுள. இரண்டாமிடத்தின் முக்கியப்பொருள் வித்தை. அவ்வித்தைக்கு புதன் எஜமான். ஆதலால் அவ்விரண்டாமிடம் புதன் வீடாகும்பொழுது அதற்கு பலமுண்டு. அப்படி பலமுள்ள புதன் வீடுகள் இரண்டாமிடமாய் அவைகளில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. 12-ம் இடம் சயன சுகத்தைக்குறிக்கும். அச்சயன சுகத்திற்கு சுக்கிரன் எஜமான். ஆதலால் அப்பன்னிரண்டாமிடம் சுக்கிரன் வீடாகும்பொழுது அதற்குபலமுண்டு. அப்படி பலமுள்ள சுக்கிரன் வீடுகள் 12-ம் இடமாய் அவைகளில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. 4-ம் இடம் கேந்திரங்களில் ஒன்று. கேந்திரஸ்தானங்களுக்கு அதிபர் பாபிகளானால் நல்ல பலன்கொடுப்பார்களென்றும் சுபர்களானால் கெட்ட பலன் கொடுப்பார்களென்றும் ஜாதக சந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆதலால் இந்த கேந்திரங்களுள் ஒன்றாகிய 4-ம் வீடு செவ்வாய் வீடு ஆனால் அதற்கு பலமுண்டு. அப்படிபலமுள்ள செவ்வாய் வீடுகள் 4-ம்வீடாய் அவைகளில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. 7-ம் இடம் கேந்திரங்களில் ஒன்றாயினும் ஸ்திரீஜாதகத்தில் கணவனையும் புருஷர் ஜாதகத்தில் களத்திரத்தையும் முக்கியமாகக்குறிக்கும். ஆதலால் அவ்விடங்களிலுள்ள செவ்வாய் உச்சனாகவாவது அல்லது நீசனாகவாவது இருந்தால் ஒழிய தோஷமுள்ளவன். உச்சனானல் செவ்வாய் நல்ல பலன் கொடுக்கிறவனாகிறான். ஆதலால் 7-ல் இருந்தபோ

திலும தீங்கு செய்யான். நீசமான பொழுது செவ்வாய் கெடுதி செய்பவனாயினும் பலமற்றுப்போகிறான். ஆதலால் கெடுதி செய்கிறதில்லை. வியாழபகவான் நல்ல பலன்களைக் கொடுப்பவரும் தீமைகளைவிலக்குபவரும் ஆகிறார். ஆதலால் ஸ்திரீ ஜாதகத்தில் கணவன் மாரகத்தையும் புருஷன் ஜாதகத்தில் களத்திரமாரகத்தையும் குறிக்கும். 8-ம் இடம் வியாழனுடைய வீடுகளில் ஒன்றாகும்பொழுது அதற்கு பலமுண்டு. அப்படி பலமுள்ள வியாழன்வீடுகள் 8-ம் வீடாய் அவைகளில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை. சிங்கம் சூரியபகவானுடைய வீடு. சூரியபகவான் கிரகங்களுக்கெல்லாம் இராஜாவாகவும் அவர்களுக்கு வெளிச்சம் கொடுப்பவராகவும் இருக்கிறார். ஆதலால் சூரியன் வீடாகிய சிங்கத்தில் வியாழன் தவிர மற்ற எந்த கிரகங்களுக்கும் பலமில்லை. வியாழன் தேவமந்திரியாதலால் இராஜாவாகிய சூரியன் வீட்டில் அவருக்கும் பலமுண்டு. எந்த வருஷத்தில் குருவும் பூர்ணசந்திரனும் சிங்கலக்கினத்தின் முதல் பாகமாகிய மகம் நட்சத்திரத்தில் கூடுகிறார்களோ அந்த வருஷத்திற்குத் தான் மாமகம் அல்லது மாமாங்கம் என்று பெயர். கும்பம் வெறுங்குட ரூபமுள்ளது. ஆதலால் அங்குள்ள செவ்வாய் குடத்தில் வைத்த விளக்குப்போல் பலமற்றவன். ஆதலால் சிங்கம் கும்பம்இந்த இடங்களில் செவ்வாய்க்குத்தோஷமேயில்லை. இக்காரணங்களால் தான் மேலே எழுதப்பட்ட விலக்குகள் கூறப்பட்டன.

9. இப்பொழுது கடையிலுள்ள சுலோகத்தின் தாத்பர்யத்தை நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. செவ்வாய் சந்திரனுடனாவது வியாழனுடனாவது கூடி மேற்குறித்த துஷ்ட ஸ்தானங்களாகிய 2, 4, 7, 8, 12 இந்த இடங்களில் எவ்விடத்திலிருந்தபோதிலும் செவ்வாய் தோஷம் கிடையாது. வயதுள்ளவும் மலடுமில்லாத பெண்கள் மாதவிடாயாகும் பொழுதெல்லாம் அவர்கள் கர்ப்பம்

தரிக்கிறதில்லை. எந்த மாதவிடாய் நேருங்காலத்தில் அந்த சரியான காலத்திற்கு வரையப்படும் இராசி சக்கரத்தில், அப்பெண்களுடைய ஜன்மராசிக்கு அனுபசயவீடுகளில் சந்திரன் இருந்து செவ்வாயால் பார்க்கப்படுகிறதோ அந்த மாதவிடாய் ஸ்னானத்திற்குப்பிறகுதான் அவர்கள் கர்ப்ப மடைவார்கள். ஜன்மராசியென்றால் ஒருவர் பிறந்த பொழுது சந்திரன் இருந்த ராசி; அனுபசய வீடுகளென்றால் 3, 6, 10, 11 அல்லாத வீடுகள். அதாவது 1, 2, 4, 5, 7, 8, 9, 12, வீடுகள். ஒருபெண்ணின் நட்சத்திரம் அசுவதியானால் அவள் ஜன்மராசி மேடமாகும். அம்மேடராசிக்கு அனுபசயஸ்தானங்கள். மேடம், இடபம், கடகம். சிங்கம், துலாம், விருச்சிகம், தனுசு, மீனம். இந்த ராசிகளில் எதிலாவதொன்றில் சந்திரனிருந்து செவ்வாயால் பார்க்கப்படும் காலத்தில்அவள்மாதவிடாயானால் அம்மாதவிடாய்க்குப்பிறகுதான் அவள் கர்ப்பமாவாள். இவ்விதமில்லாதிருக்கின் கர்ப்பமாகாள். கர்ப்பத்திற்கும்செவ்வாய் சந்திரர்களுக்கும் சம்பந்தமென்னவெனின் சந்திரன் ஜலகிரகம், சீதளத்துக் கதிகாரி. செவ்வாய் நெருப்பு கிரகம், உஷ்ணத்துக்கதிகாரி. உஷ்ணமும் சீதளமும் சம்பந்தமானால் பித்தம் பிறக்கும். அந்தப்பித்தம்கருத்தரித்தலுக்கும் அக்கருவளர்தலுக்கும் காரணம். ஆதலால் ஸ்திரீ ஜாதகத்தில் சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் அவளுக்கு அதிக சந்தானத்திற்கு ஹேது வுண்டென்றும் அவ்விதம் சந்தானம் அதிகரிக்க அவள் கணவன் தீர்க்காயுளுள்ளவனாக இருப்பானென்றும் நன்கு விளங்கும். புருஷர் ஜாதகங்களிலும் கூட, செவ்வாயும் வியாழனும் கூடியிருந்தால் நல்ல சுகங்களுண்டென்றும் நல்ல அந்தஸ்துள்ளவனாவானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸ்திரீ புருஷர் ஜாதகத்தில் செவ்வாயும் சந்திரனும் கூடியிருந்தால் செவ்வாய் தோஷமில்லை. இவ்விதமாகவே செவ்வாயும் குருவும் சேர்ந்தாலும் செவ்வாய்க்கு தோஷமில்லை. ஏனெனில் குரு சுபக்கிரகங்களெல்லாவற்றிலும் அதிகசுபகிரகம்.

அப்படி அதிக சுபக்கிரகமாகிய குருவுடன் செவ்வாய் சேரும்பொழுது தன் பாபம் நீங்கி சுபனாகிறான். அதனால் அப்பொழுது செவ்வாய் தோஷமில்லை. பிரகஜ்ஜாதகத்தில் 4-ம் அத்தியாயத்தில் பரஜாதகங்களை விவரிக்கும் சுலோகத்தில் நிரீக்ஷிதே யென்னும் பதத்திற்கு அர்த்தம் செய்வதுபோல் இந்த சுலோகத்திலும் ஸம்யோகே என்னும் பதத்திற்கு செவ்வாயை குருவாவது சந்திரனாவது பார்த்தாலும் சரி அல்லது செவ்வாய் இவர்களுடைய வர்க்கங்களில் இருந்தாலும் சரி செவ்வாய் தோஷமில்லை யென்னும் கருத்து உண்டென்று நாம் கிரகிக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆயினும் இவ்விஷயத்தில் வேறுவிதமாய்க் கூறுவாருமுளர்.

10. மேற்சொன்ன விதமாக நான் 1901-ம் வருஷத்தில் 'அஸ்டராலிஜிகல் மகஸீன்' என்று அக்காலத்தில் பிரசுரமாய்க்கொண்டிருந்த ஒரு மாதாந்த பத்திரிகையில் எழுதியிருந்தேன். அதற்குப்பிறகு என் சிநேகிதர்களுள் ஒருவர் தன் ஞாபகத்திற்காகப் பின் எழுதப்பட்ட சுலோகங்களை ஒரு புஸ்தகத்தில் எழுதி வைத்திருந்ததைப் பார்க்கலானேன். இந்த சுலோகங்களைச் செய்தவர்கள் இன்னாரென்றும் இவை இன்ன கிரந்தங்களிலுள்ள சுலோகங்களென்றும் விவரங்கள் அந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை. ஆயினும் அவைகள் பிரமாணமான கிரந்தங்களிலிருந்து தம் முன்னோர்களால் எழுதப்பட்டதாக அவர் சொன்னார். இச்சுலோகங்களால் இச்செவ்வாய் தோஷம் பார்ப்பதில் ஏற்கனவே உள்ள கலக்கங்கள் அதிகமாகின்றன.

11. முதல் சுலோகம்.

த்விதியே த்யூனகே பும்ஸாம் ஸ்திரீணாம் சத்வாரிரிப்பகே.
द्विदीय्ये यूनगे पुंसां स्त्रीणां चत्वारिरिःफगे ।
உபயோரஷ்டமம் தோஷம் பௌமதோஷம் வதேத்புதஹ.
उभयोरष्टमं दोषं भौमदोषं वदेद्बुधः ॥ ६ ॥

லக்கின, சந்திர, சுக்கிரர்களுக்கு, இரண்டாமிடத்திலும், ஏழாமிடத்திலுமுள்ள செவ்வாய் புருஷர் ஜாதகங்களில் தோஷமுள்ளவன். 4, 12-ல் உள்ள செவ்வாய் ஸ்திரீகள் ஜாதகத்தில் தோஷமுள்ளவன். 8-ல் உள்ள செவ்வாய் இருவருக்கும் தோஷமுள்ளவன். இவ்விதமாகப் பெரியோர்களால்செவ்வாய்தோஷம் கூறப்பட்டிருக்கிறது.

---

ஆதலால் ஸ்திரீ ஜாதகத்தில் 2, 7ல் செவ்வாயிருந்தாலும், புருஷ ஜாதகத்தில் 4, 12ல் செவ்வாயிருந்தாலும் செவ்வாய் தோஷமில்லையென்று ஏற்படுகிறது. என் அபிப்பிராயத்தில் இந்த சுலோகத்தை நாம் அங்கீகரித்து மேற்கண்ட வீடுகளில் செவ்வாய் இருந்தால் மிகவும் சுவல்ப தோஷமாகப் பாவிக்கலாம்.

12. இங்ஙனம் இந்த சுலோகத்தால் செவ்வாய் தோஷத்திற்கு ஹேதுவென்று கூறப்பட்ட துஷ்ட ஸ்தானங்கள் குறைக்கப்பட்டுள்ளபோதிலும் பின் எழுதப்படும் சுலோகத்தினுல் முதல் வீட்டில் அதாவது லக்கினத்திலாவது சந்திரனுடனாவது சுக்கிரனுடனாவது செவ்வாய் இருந்தாலும் செவ்வாய் தோஷம் உண்டென்று ஏற்படுகிறது.

தம்பத்யோர் ஜன்மகாலே தனவியயஹிபுகே சப்தமேரந்திரலக்னே

दम्पत्योर्जन्मकाले धनव्ययहिबुके सप्तमे रन्ध्रलग्ने

லக்னச்சந்திராச்ச சுக்ராதபி கலு, நிவஸன் பூமிபுத்ரத்வயோச்ச

लग्नाच्चन्द्राच्च शुक्रादपि खलु निवसन् भूमिपुत्रद्वयोश्च ।

தம்பத்யோர் தீர்க்கமாயுர்பஹுதன மகிலம் புத்ரபௌத்ராபி
விருத்திஹ ।

दम्पत्योर्दीर्घमायुर्बहुधनमखिलम् पुत्रपौत्राभिवृद्धिः

தஸ்மின்னேகத்ரஹீனே ம்ரிதி ரத பவதி ப்ராஹு ரத்ர்யாதிமுக்யாஹ

तस्मिन्नेकत्रहीने मृतिरथ भवति प्राहु रत्र्यादिमुख्याः ॥

"தம்பதிகள் பிறக்கும்காலத்தில் லக்னத்தினின்ருவது சந்திரராசியிலிருந்தாவது சுக்ரராசியிலிருந்தாவது 2, 12, 4, 7, 8, 1 இந்த இடங்களில் இருவர் ஜாதகத்திலும் செவ்வாய் இருந்தால்தம்பதிகளுக்குத்தீர்க்காயுசும் அதிக எராளமான தனமும் புத்ரபௌத்ர விருத்தியும் உண்டாகும். (ஒருவர் ஜாதகத்தில் இருந்து) ஒருவர் ஜாதகத்தில் இல்லாவிட்டால் (அப்படி இல்லாதவர்களுக்கு) மரணம் சம்பவிக்குமென்று அத்ரியாதியாகமுனிகள் சொல்லியிருக்கிருர்கள்."

---

நான் முன்னே யெழுதியதுபோல லக்கினத்தில் செவ்வாய் இருந்தால் அவரவர்க்கே கெடுதியே ஒழிய அவர்களை விவாகம் செய்வோர்க்குக் கெடுதியில்லையென்பதே பிரமாணமாயினும் அவ்விதமாகச் செவ்வாய் லக்கினத்திலாவது சந்திரனுடனாவது சுக்கிரனுடனாவதுகூடியிருக்கும் பக்ஷத்தில் ஜாதகருக்கே உண்டாகும் கெடுதியால் அவர்களை விவாகம் செய்தவர்களுக்கும் மனத்துயர் உண்டாவதைப்பற்றி 1-ம் இடத்தையும் இந்தகிரந்தகர்த்தாதுஷ்டஸ்தானங்களில் ஒன்றென்று சொன்ஞர்போலும்.

13. இவ்வடுத்த சுலோகத்தில் செவ்வாய் துஷ்டஸ்தானங்களிலிருந்தாலும் புதன் அல்லது வியாழனுடன் சேர்ந்தாலும் அவர்களால் பார்க்கப்பட்டாலும் செவ்வாய் தோஷமில்லையென்று சொல்லப்படுகிறது.

வாகம்பு கந்தர்ப்பம்ரிதிம் வியஸ்தே குஜேது பாணிகிரஹணம் நகுர்யாத்

**वगम्बुकन्दर्पमृतिं व्ययस्थे कुजेतु पाणिग्रहणं न कुर्यात् ।**

புதார்யயுக்தேப்யதவா நிரீக்ஷிதே தத்தோஷநாசம் ப்ரவதந்தி சந்தஹ

**बुधार्ययुक्तेष्वथवा निरीक्षिते तद्दोषनाशं प्रवदन्ति सन्तः ॥**

---

"செவ்வாய் (இலக்கினம் சந்திரன் சுக்கிரன் இவர்களுக்கு) 2,4,7,8,12 இடங்களில் இருந்தால் (அப்படி இல்

லாத ஜாதகருக்கு) பாணிக்கிரகணம் செய்விக்கக்கூடாது. ஆனால் புதனாவது வியாழனாவது இத்தகையசெவ்வாயுடன் சேர்ந்தாலும் அல்லது செவ்வாயைப் பார்த்தாலும் தோஷ மில்லையென்று சொல்லுவார்கள்.''

இச்சுலோகத்தில் துஷ்ட ஸ்தானங்கள் லக்கினாதிக் கிரமமாய்க் கூறப்பட்டதே ஒழிய, தோஷாதிக கிரமமாய்க் கூறப்படவில்லை.

நாம் முன்படித்த சுலோகத்தில் ஸம்யோகே என்னும் பதத்திற்கு பார்த்தாலும் என்று அர்த்தம் செய்யும்படி இருக்கிறதென்று நான்காட்டிய அபிப்பிராயத்திற்கிணங்க இவ்விடத்தில், குரு செவ்வாயைப் பார்த்தாலும் தோஷ மில்லையென்று கூறப்பட்டிருக்கின்றது. புதன் செவ்வா யுடன் கூடினாலும் அல்லது செவ்வாயைப்பார்த்தாலும் தோஷமில்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. புதன் சுப கிரகங்களில் ஒருவனாதலால் அவனுடன் கூடினும் அவனால் பார்க்கப்பட்டாலும் செவ்வாய்க்கு தோஷமில்லையென்று நாம் கருத இடம் உண்டு.

14. பின் எழுதப்படும் சுலோகத்தினால் வேறு ஒரு வித தோஷபரிகாரம் சொல்லப்பட்டிருக்கிறது.

பௌமஸ்திதேசே யதிகேந்த்ரகோணே தத்தோஷநாசம்ப்ரவதந்தி ஸந்தஹ

भौमस्थितेशे यदिकेन्द्रकोणे तद्दोषनाशं प्रवदन्ति सन्तः ।

புண்யோதயேஜாஹ்னவி தீரஸமஸ்தே கூபோத மிச்சந்திஹிமூட சித்தஹ

पुण्योदये जाह्नवितीरसंस्थे कूपोदमिच्छन्ति हि मूढचित्ता ॥

---

(மேற்சொல்லிய துஷ்ட ஸ்தானங்களில் செவ்வாய் இருக்கும்பொழுது) அச்செவ்வாய் இருக்கும் வீட்டுக் குடையோன் (லக்கினத்திற்கு) கேந்திர திரிகோணங்களில்

இருந்தால் செவ்வாய் தோஷமில்லை. புண்ய காலங்களில் கங்காநதி தீரத்தில் இருக்கும் ஒரு புல்லறிவினன் கூட அம்மகாநதியில் ஸ்னானம் செய்யாது ஓர் (பாழும்) கிணற்றில் ஸ்நாநம் செய்ய இச்சைகொள்வானா? (மாட்டானென்றபடி).

---

ஓர் கிரகம் இருக்கும் இடத்தின் அதிபன் பலவானானால் அக்கிரகத்திற்கும் பலமுண்டென்பது ஓர் ஜோதிட சித்தாந்தம்.

15. இதுவரையிலும் செவ்வாய் தோஷத்தைப்பற்றியும் அதற்குள்ள விலக்குகளைப்பற்றியும் எழுதப்பட்டது. பெண்கள் ஜாதகங்களில் இருப்பனவாக நான்முன் கூறிய அவயோகங்கள் விஷகன்னியாயோகமென்றும் விதவாயோகமென்றும் இருவகைப்படும். ஆண் ஜாதகங்களில் உள்ளனவாக நான்கூறிய அவயோகங்கள் வெகுகளத்திர யோகமென்றும் களத்திரக்ஷய யோகமென்றும் இருவகைப்படும். இவைகளைப்பற்றி வேறே ஒரு சஞ்சிகையில் விவரித்து எழுதப்படும்.

கோனேட்டி ஐயர் பி. ஏ.,



உ

# உமையவள் பதிகம்.

பண் : நட்டபாடை.

1. திங்கட்சடை யவனருள் செழிக்குந்திர வியமே
பொங்கித்ததும் பியபூரண புனிதத்திரண் மயமே
மங்குற்கெதி ரெனவேமுனம் வையா தறம் வளர்த்த
செங்கைத்திற மறியா தவிச் சிறியேற்கரு ளுமையே.

2. கண்ணேகரு மணியேயிரு கண்ணின்மணி யொளியே
பண்ணேநிகர் மொழியேபகர் குயிலேபனி வரையின்
பெண்ணேசிவ பெருமானருட் பெருமாணிடத் தமுதே
புண்ணேபடு மனத்தேனெனைப் புரந்தாள்புக ழுமையே.

3. தேனேதெவிட் டாதேயுளந் தித்தித்திடுங் கனியே
ஊனேயென துடலேயுடற் குயிரேயுயிர்க் குணர்வே
தானேதனக் கிணையாளெனச் சதுமாமறை துதிசெய்
மானேயவ மதியாதெனை மதித்தாண்டரு ளுமையே.

4. *வண்மைக்குள பொருளிர்கிலக் கியமாய்வயங் குனையே
பெண்மைக்கிறை யெனப்பன்முறை பேசிப்புகழ்ந் திடுமிவ்
வுண்மைக்கெதி ருரையொன்றிலை யுளங்காதலித் தெனையுன்
அண்மைக்குரி யவனுத்தடுத் தாட்கொண்டரு ளுமையே.

5. கற்றைச்சடை யுடனேமிகக் கடுகித்தவ முயலும்
முற்றத்துறந் தவரேனுமொய் குழலார்முக மயலின்
பற்றுக்குடன் படுவாரவர் படுமாயையின் வலையிற்
சுற்றிச்சுழன் றனனின்கழற் றுணையேதுணை யுமையே.

6. அன்பேயொரு வடிவாயிலங் கணங்கேயளப் பரிதா
மின்பேவிளை நிலமேயென திதயத்தொளிர் நலமே
துன்பேவிளைத் திடுமோமனச் சுகமேவிளைத் திடுமோ
என்பேதைமை விளைவித்திட லறியேனெழி லுமையே.

7. மணமேவிய மலரேமது மலர்மேவிய மணமே
குணமேகல னெனக்கொள்குலக் கொடியேகொடு மிடியாற்
பணவேட்கையுற் றிலனுனகப் பசியாலரு ளமுதம்
உணவேட்கையுற் றுளனுதரித் துவந்தாளெனை யுமையே.

8. மத்தேறிய தயிர்போற்சுழன் மனத்தேன்குறை மதியேன்
‡பித்தேறிய திரிந்தேனருட் பெரும்பேறடைந் திடுவான்
எத்தேவரும் பணிந்தேத்திடு மிறைவற்கிணை யிதழான்
முத்தேதரு மிமயாசல முகிலேயமை யுமையே.

---

*வண்மை—அழகு, ஈகை, குணம், புகழ், மெய்ம்மை, வளமை; தனித்தனி அழகு முதலியவற்றிற்கு இலக்கியமாய் வயங்கு முன்னை யென்க. ‡ஏறிய—வினையெச்சம்.

9. அகமும்புற மதுவும்புறப் புறமும்அகப் புறமும்
மிகவுங்களிந் துருகித்தொழு மடியார்வினை பொடிசெய்
திகமும்பர மிரண்டுங்கொடுத் திடுமெண்குணத் திறைவன்
முகநச்சிய நகைமெச்சிய மோதக்குழ லுமையே.

10. மாசற்றொளிர் மணியேமலை மணியேநவ மணியே
பேசத்தகு வனநின்புகழ் பேசாதிது வரையும்
நீசத்தொழில் புரிந்தேனதை நினையாதொளிர் குமர
தாசற்கருள் புரிவாய்மலர் ஜலஜானன வுமையே.

லா. அ. வேங்குஸாமி அய்யர்,
வக்கீல்
குமாரவிலாஸ், திண்டுக்கல்.

# குடித்தனச்செட்டு.

ஜீவப்பிராணிகள் உயிர் வாழ்வதற்கு ஆகாரம் இன்றியமையாதது. இவ்வகை ஆகாரங்களிற் சில தின்னக்கூடிய வண்ணமாய் இயல்பாகவே உண்டாகின்றன. அப்படிக்கில்லாத வேறு சிலவற்றை மனிதர் விளைவித்துப் பிறகு உணவுக்கேற்பச்செய்யவும்வேண்டியிருக்கிறது. ஆகவே பிந்தியனதாம் பாடுள்ளவையென்றும் முந்தியன அப்படிக்கல்லன வென்றும் நினைக்கக்கூடும். ஆகிலும்சற்று ஊன்றிப்பார்த்தால் இவ்வெண்ணம்மாறும்; நாம் தூங்கிவிழித்து ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தால்நமது பசிக்கேற்ற ஆகாரம் தானுகவே நம்முடைய வாயில் வந்து நுழைகிறதில்லை. பற்களால் கடித்துப் பச்சையாய்த் தின்னக்கூடிய சர்க்கரைவள்ளிக்கிழங்கேயானுலும் நினைத்த மாத்திரத்தில் உண்டாகிறதில்லை. ஒரு வேளை தானுக உண்டாகி ஓரிடத்திலிருந்தாலும் அவ்விடம் நமக்கு ஞான திருஷ்டியால் தெரிகிறதில்லை. தெரிந்தாலும் அது அங்கிருந்து நம்மிடத்திற்கு மந்திர சக்தியால் வருகிறதில்லை. இதனுல் உணவுப்பொருள் உள்ளவிடத்தைக் கண்டு பிடிக்கவோ, அதை அறிந்தால் அவைகளைப் கைப்பற்றவோ, கைப்பற்றினபிறகு உணவிற்கேற்றபடி அமைக்கவோ,சமைக்கவோ,

தேகப்பிரயாசை அத்தியாவசியம் வேண்டி இருக்கிறது என்று புலப்படும். உணவுப்பொருள் மாத்திரமல்ல மற்றெந்தப்பொருளும் இப்படியே பாடு பட்டுத்தேடினவையேயன்றி வேறில்லை. மேற்சொல்லியபடி பொருள் தேடுவதில் மாத்திரந்தான் பாடுள்ளதென்றல்ல. தேடிய பொருளைச் சேமித்தலும் வேண்டும். உணவு முதலியவற்றை வேண்டும்போது தேடிக்கொள்ளுதல் போதாதா, முன்னரே தேடிச்சேமித்து க்கொள்ளவும் வேணுமோ? இவ்வகைப்பாடுவீண்பாடல்லவோவென்று சங்கிக்கலாம். ஏன் இந்தச்சங்கை. தேடிய பொருள் அப்போதே கிட்டும் என்பது என்ன திண்ணம்? ஒருவாறு கண்ணுக்குத்தென்படுமாயினும் அப்போது நம்போல் பசித்த பிறரும் அதன் மீது அவாக்கொண்டு வந்தாராயின் என்செய்வோம். சண்டைமிகுந்து மண்டையுடையுமே தவிரப்பண்டம் கிடைக்குமோ சொல். இப்படிக்கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற்போனால் அப்போது பசியால் வருந்தி வாடுவோமல்லவா. இது காரணம் பற்றி முன்னரே தேடிவைத்தல் வேண்டும். அதுமட்டோ, தேடினவற்றைச் சேமித்தலும் வேண்டும். தேடி வைத்த பொருள் வெப்பத்தினலாகினும் சீதத்தினலாகினும் கேடடைந்து வியர்த்தமானாலோ, நன்றாகவே இருப்பினும் வீட்டில் எலியும் பெருச்சாளியும் அவைகளை அழித்துவிட்டாலோ, அப்படியு மல்லாது கள்வர் கொள்ளை கொண்டாலோ, என் செய்வோம். ஆகையால் தேடிய பொருளைச் சேமித்தலும் வேண்டும். இதனல் தான் உலகானுபவமுள்ளவர்கள் அவரவர்கள் சக்திக்கும் அவசியத்திற்கும் ஏற்ற அளவாய்ப் பொருள்களைச் சேகரித்து ரக்ஷித்து வைக்கிறார்கள். இப்படித் தேடிவைக்கும் பொருள்களும் அவைகளை ரக்ஷித்து வைக்கும் இடங்களும் அவரவர்களுடைய நாகரிகத்திற் கேற்றபடி யிருக்கும். இதைச் சற்று விவரிப்பாம்.

காட்டு மிருகங்களை வேட்டையாடிக் காலங் கழிப்பவர்களுக்கு நாட்டுவாழ்வுமுண்டோ? இவர்களுக்கு இருக்க வீடேது. உடுக்கத் துணியேது. இவ்வேடர்கள் எடுப்பது வில்லை, பிடிப்பது மானை, உடுப்பது தோலை, உண்பது ஊனை, குடிப்பது கொம்பில், படுப்பது பரணில்.

ஸ்ரீராமர் வனவாசம் போன காலத்தில் கங்கை நதிக் கரையண்டை குகன் அவரைக் காணிக்கை கொடுத்துக் கண்டதையும் அவர் அதை அங்கீகரித்ததையும் கேட்டறியீர்களோ. அப்போது வந்தவர் சக்ரவர்த்தியேயானாலும் தந்தது மீனும் தேனுமென்றால் இருந்ததில் சிறந்தது இவைதாமென்றியம்பவும் வேண்டுமோ. காட்டு வேடர்களையும் கடற்கரை வலையர்களையும் விட நாகரீகத்தில் சற்று உயர்ந்தவர்கள் யாரெனில் ஆட்டையும் மாட்டையும் கூட்டமாய்ச்சேர்த்துக் காட்டிலே மேய்த்துக்காலங்கழிப்பவர். இவர்களிடத்தில் இறைச்சி தவிர இனித்த பாலும் புளித்த தயிரும் இயங்கி நிற்கும். சிலர் தமதாடுமாடுகளைப்பட்டியில் கட்டிப் பாலைக் கறந்து சட்டியிற் காய்ச்சி இட்டமாய்க்குடிப்பார்கள். வேறு சிலர் ஆட்டு மயிரால் ஆடையும் நெய்து குடிசையும்கட்டிக்குளிரும் தீர்வார். தங்களுடைய ஆடு மாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல் உள்ள தரைகள் குறைவு பட்டமையாலோ அல்லது இவ்விடத்திற்கு வேறு வல்லோர் வலியவந்தமையாலோ இவர்கள் அப்புறம்போக வேண்டிவரும். இப்படிப் பலவிடங்களிலும் மாறி மாறி வசித்துக்கொண்டு வருகிறவர்களுக்குச்சரித்திரக்காரர்கள் சஞ்சாரிகள் என்று பெயரிட்டு இருக்கிறார்கள். ஆகவே நிலங்களைப் பயிரிட்டுந்தங்களுக்குவேண்டிய உணவுப்பொருள்களைத்தேடிக்கொள்ளும் வியவஸாயிகள் நிலையாக ஓரிடத்திலிருந்து தாங்கள் வசிப்பதற்கு வீடும் கட்டிக்கொண்டு வாழ்தலால் இப்படிப்பட்டவர்கள் மேற்சொல்லிய சஞ்சாரிகளைவிட நாகரிகமுள்ளவர்களாய் மதிக்கப்படுகிறார்கள். இவர்களிடத்துக் கெடாது பலநாள் வைத்திருக்கக்

கூடிய தானிய வகைகளும் மற்றை உணவுப்பொருள்களும் இருப்பதுமல்லாமல் இவ்வகைத்தானியங்களைக்குத்தி அரிசி யாக்கி மாவரைத்தோ மற்றப்படி சமைத்தோ உண்ணத் தக்க தேர்ச்சியும் உளதாகும். இவர்கள் வாழுமிடத்தை நாடெனக் கூறலாம். இனி, பருத்தி முதலியன விளைவி த்து நூல்நூற்றுத் துணி நெய்தல் முதலிய கைத்தொழிலி லும் தேர்ந்தால் அவர்கள் முன்னிலும் அதிக நாகரிகம டைந்தாரெனப்படுவார். அப்போது இவர்கள் நாகரீகத் தில் நான்காம் பதவி அடைந்தாரெனப்படலாம். இவ்வித மாகப் பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் அதிகப்பட அவைகளை அனுசரிப்பவர்களிடத்தில் விளையும் பொரு ளும் தங்கள் தங்களுக்கு வேண்டிய அளவிலும் அதிகப் படும். அப்போது இருவகையாரு மிகுதியான பொருளைக் கொண்டு வேறு பண்டமாற்றி முன்னிலும் அதிக சுகம் பெறுவார். இவ்வகைப் பண்டமாற்றையே தொழிலாகக் கொண்டவர்கள் வியாபாரிகளெனப்படுவார். வியாபாரிகள் நிறைந்துள்ள குழாங்களை நாகரிகத்தில் ஐந்தாம் பதவி அடைந்தார் என்பர் அறிவுடையோர். இச்சரக்குகள் ஓர் ஊரிலிருந்து வேறூர் கொண்டுபோவதற்குத் தக்க சாலைக ளும் இருப்புப் பாதைகளும் இதர தேசம் போவதற்கு ஏற்ற கப்பல்களும் இக்காலத்து ஏற்பட்டுள்ளன.

மேற்சொல்லியபடி பொருள்களை ஆக்குவதற்குப் பாடு இன்றியமையாததானாலும் பாட்டைத் தவிர வேறு வேண்டியதில்லையோ? அன்றியும் சாமர்த்தியமும் இல்லா விட்டால் பாட்டுக்குத் தகுந்த பயன்தான்உண்டோ? இவ் விரண்டும் பெரும்பாலும் பிறவிக்குணமேயானாலும்பயிற்சி யால்சீர்திருத்தப்படக்கூடியவையென்பது அனுபவசித்தம் இதுபற்றித்தான் இவ்வுலகத்தில் ஆங்காங்குப்பலவகைப் பட்ட வித்தியாசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நெல் விளைப்பதற்கு வேண்டிய வித்தோ இயல்பாய் உள் ளது; நீரும் அப்படி; நிலமும் அப்படி; வேண்டியவெப்பம்

வெப்யோன் தருவான். ஆற்றிலே தண்ணீர் அதுவாய் ஓடும்; ஆட்டையும் மாட்டையும் ஆண்டவன் அளிப்பான். விரையைப்போட்டால் தானே முளைக்கும். செடியே வளர்ந்தால் பூவும்பூத்துக் காயுங்காய்க்கும். அரிசியைச்சமைத்தால் அன்னமாகும். இப்படி யிருக்கப் பயிரிடுவோர் பாடுபடுவதுமாத்திரம்போதாதோ? இதற்கு அறிவு என்ன வேண்டியிருக்கிறது என்று சிலர் கேட்கலாம். சற்று யோஜனைப் பண்ணிப்பார்த்தால் இப்படி கேட்பது அறிவீனமென்று புலப்படும். விளைந்த நெல்லெல்லாம் விரை நெல்லாகுமோ, வேண்டியபோதெல்லாம் விதைத்தலும் கூடுமோ, பட்டமறிந்து பயிரிடல் வேண்டும், எந்த மண்ணுக்கு எத்தனை உழவு, உழுத சேரும் உலர்ந்தால் கெடும், வந்ததண்ணை வடிப்பதெப்படி, வயலுக்குத்தகுந்த வளமும் வேண்டும், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு, வரப்பைக்கட்டி வயலை நட்டால்போட்ட எருவும் மோட்டை போகாது, தேங்கவைத்துத் தெளியவைத்தால் பாங்காய்ப் படிந்து பலனைத் தருமே, ஆனையும் மாட்டையும் அன்பாய்வளர்ப்பாய், பேணி வளர்த்தால் பெருமுதல் வேண்டாம்; இவைபோலுள்ள நுட்பங்களை அறியாதவர் வீண்பாடுபடுவர். அல்லது பாட்டுக்குத்தக்க பயனடையார் என்பதை இனி யார் தான் அறியார். ஆகவே பெண்மணிகளே! நீங்கள் எடுத்த காரியங்களை ஏற்ற அறிவுடனும் சாமர்த்தியத்துடனும் தக்கபடி பிரயாசைப்பட்டு முடிக்க முயலவேண்டும்.

ச. சுப்பிரமணிய சாஸ்திரி, பி. ஏ.

# விப்ரம விஹாஸம்.

## மூன்றாவது அங்கம்.

### முதலாவது களம்.

கோற்கை நகரத்துக் கருணாகரனும், சுமுகனும், நீலமேகாசாரியும். வசுமித்திரனும் வருதல்.

கோற்கைக் கருணாகரன்.—ஐயா, நீலமேகாசாரியரே! நான் உம்மை வேண்டிக்கொள்வதொன்றுண்டு; நான் எப்பொழுதாயினும் வீட்டை விட்டு வெளியே சென்று மறுபடி திரும்பிவரச் சற்றுநேரம் பிடித்தாலும் எனது மனையாள் அதனைப் பொறுக்கமாட்டாள்; ஆதலினால், அவள் ஏன் இந்நேரமாயிற்றென்று என்னைக்கேட்டால் நீர் அவளுக்காக இப்பொழுதுசெய்து வருகிற சுவர்ணமாலையின் வேலை முற்றுப்பெறாமல் இன்னும் அரை குறையாய் இருக்கிறதென்றும், அதனைச் செய்து முடித்தற்பொருட்டு நான் உமது கடையில் இதுகாறும் காத்திருந்தேனென்றும், அதற்கு நாளைத்தினம் நீர் மெருகு வைத்து முடிப்பீரென்றும், முடிந்தவுடன் அதைக் கொணர்ந்து கொடுப்பதாகவும் சொல்லவேண்டும். ஆயினும், இந்தப்பாவி பொருத்தன் எதற்கும் பானகத்துரும்பாய்க் குறுக்கே வந்து தோன்றியிருக்கிறான். கேட்டீரோ சங்கதியை! இவன் என்னைக் கடைத்தெருவிலே கண்டு என்னோடு பேசிக்கொண்டிருந்தானும்; நான் இவனைக் கண்டு இவனிடத்தில் ஆயிரம் பூவராகன் கொடுத்திருந்ததாகவும், அதை இவன் கொண்டு வந்து கொடாமையால் நான் இவன்மேற் கோபங்கொண்டு இவனை அடித்துத் திட்டினேனும்; அன்றியும் எனக்கு வீடே

து, வாசலேது, பெண்டாட்டியேது என்று இவனை வைது அதட்டிக் கேட்டேனும்; இதென்ன அக்கிரமம் பார்த்தீரா! அடகுடிகேடா! இப்படிக்கெல்லாம் தில்லும் மல்லுஞ் சொல்லி என்னத்திற்காகவடா என் குடியைக் கெடுக்க வந்து தோன்றினுய்!

கோ சு.—ஐயா! தாங்கள் தங்களுக்குத் தோன்றுவதையெல்லாஞ் சொல்லிக்கொண்டே யிருங்கள்; நான் எனக்குத் தெரிந்ததில் முந்திரிகூடப் பிறழாமல் உள்ளதை யுள்ளபடித்தான் சொல்லுவேன். தாங்கள் என்னைக் கடைத்தெருவிலே அடித்தது கூடப்பொய்யோ? தங்களது கைச்சுவடு அப்படியே ஐந்து விரலோடுந் தடித்துப் புடைத்திருக்கின்றதைப் பார்க்கவில்லையா? எனது தோல் கெட்டிக் கடிதமாகவும், தங்கள் கைத்தலம் மைதோய்ந்ததாகவும் இருக்குமாயின் தங்கள் கைச்சுவடு முழுமையுமே முத்திரையிட்டாற்போல என்மேற் பதிந்திருக்கக் காண்பீர்.

கோ. கரு.—என்னடா! கழுதையாயிருக்கிறுய்?

கோ. சுமு.—தாங்கள் இப்படிச்சொன்னதில் ஒருஅணுவளவாயினும் பொய்யில்லை; நான் படுகின்ற பாட்டையும் அடியையும் பார்த்தால் என்னைக் கழுதையென்று சொல்லுவது சரியேயாம்; கிட்ட வந்தால் காலைத்தூக்கி யெட்டியுதைப்பது கழுதையின் குணமாதலால் என்னிடமிருந்து உதை வாங்காதிருக்க வேண்டுமானுல் தாங்கள் மரியாதையாகச் சற்றே யெட்டிநிற்பது நன்று.

கோ. கரு.—ஐயா, வசுமித்திரரே! தங்கள் முகமேன்சற்று வாட்டமாயிருக்கிறது? நான் செய்த புண்ணியத்தின் பயனுல் தங்களை இன்று நல்விருந்தாகப் பெற்றேன்; இன்று எனது கிருகத்தில் அமுது செய்துவிட்டுப்போகவேண்டும்.

வசுமித்திரன்.—ஐயா! விருந்துக்கென்ன குறை? அது

165402

யாரிடத்துமிருந்துங் கிடைப்பது அரிதன்று; தங்களைப்போல அகமலர்ச்சி முகமலர்ச்சி யுடையாரைக் காண்பதன்றோ அரிதாகும்.

கோ. கரு.—ஐயா! ஒருவன் நெய்யும், பாலும், பாகும், தெளிதேனுஞ் சொரிந்து, இலை நிறைய வகைவகையாய்க் காயுங்கனியும் அன்னமும், பக்ஷணமும் நிரை நிரையாய்ப் பரிமாறினும் உள்ளன்பு இல்லையாயின் அவ்விருந்து பயன்படாது.

வசு.—ஒருவன் எவ்வளவு தான் இழிந்தவனாக இருப்பினும் அவன் விருந்திடுவது அரிதன்று.

கோ. கரு.—வீணே வாயுபசாரஞ் செய்வதில் செலவொன்றுமில்லை; அது வெற்றுரையேயாம்.

வசு.—கீரையுஞ் சோறுமானாலும் அன்போடு உள்ளங்கனிந்து அளிப்பதே நல் விருந்தாகும்.

கோ. கரு.—விருந்திடுகிறவன்கிருபண சிரோமணியாயிருந்தால் விருந்துண்பவனும் அவனிடம் உணவைத் தொட்டுத்தொட்டு மோந்துபார்த்து விட்டுப்போய் விடுவான். அப்படிக்கின்றி நான் அளிக்கும் விருந்து அற்பமெனினும் நான் கள்ளங்கபட மின்றி உள்ளன்பு கொண்டு அளிக்கின்றேன். இதென்ன புதுமை! என் வீட்டுக்கதவு சாற்றித் தாளிடப்பட்டிருக்கிறது! சுமுகா! உன்னை கூப்பிட்டுக் கதவைத் திறந்துவிடச் சொல்லு.

கோ. சுமு.—சித்திராங்கி. கல்யாணி! கமலாம்பா! சம்பகவல்லி! வனஜாட்சி! கதவைத்திறவுங்களடி; நேரமாகிறது.

சி. சுமு.—அண்ணகளா! திண்ணை தூங்கி! உம்மணாமூஞ்சி! சாப்பாட்டுராமா! குண்டோதரா! சப்பாணி! யாரடா இப்படிக்கூப்பிடுகிறது? நீ கதவண்டை நிற்பது கூடாது போடா; இல்லையாயின் யாருக்கென்ன வருத்தம்; தலைக்கடையில் விழுந்து கிட; மூச்சுவிடாதபடி சளசளவென்று மந்திர வாதி உச்சாடனஞ் செ

ய்வதுபோல எத்தனை பேர் பெண்டுகளைக் கூப்பிடுகிறாய்? ஒருவனுக்கு இத்தனைபேர் பெண்டா!போ,போ.

கோ. சு.—எங்கள் யஜமானன் ஈரத்தில் கால்கடுக்க நடுத் தெருவில் நிற்கையில் உள்ளே இருந்துகொண்டு என்னடா ஆனந்தத்தாண்டவமாடுகிறாய் பேய்ப்பயலே! யாரோ போக்கிரிப்பயல் இப்படிக் கில்லாடித்தனமாகப் பேசுகிறான்.

சி. சுமு.—உங்கள் யஜமானனை அவன் எங்கிருந்து வந்தானோ அந்த இடத்திற்கே போய்ச்சேரும்படி சொல்லு. அவன் கால் மரத்துப்போம்படிக்குக் குளிரில் என் விறைத்துக் கிடக்கவேண்டும்?

கோ. கரு.—அடே! உள்ளே வார்த்தை சொல்லுகிறது யாரடா! கதவைத்திற.

சி.சுமு.—நல்லது, எல்லாம் சரிதான்; என்னகாரணத்துக்காகக் கதவைத் திறந்து விடவேண்டுமோ சொல்லுமையா கேட்போம்?

கோ. கரு.—என்ன காரணத்திற்காகவா? சாப்பிடத்தான்; நான் இன்று இதுவரையிலும் ஜலபானமும் பண்ணவில்லை.

கி. சுமு.—இன்றைக்கு இங்கும் அப்படித்தான்; அப்புறம் எப்போதாவது இஷ்டமானபோது இங்கே வரலாம்.

கோ. கரு.—நல்லது;"ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துறத்தியது" என்றாற்போல என் வீட்டிற்குள்ளே வலியவந்து நுழைந்துகொண்டு என்னை வெளியே போவென்று சொல்ல உனக்கு என்னடா பாத்தியம்?

சி. சுமு.—இப்பொழுது இங்கே எனக்கு வாசற்காப்பு மணியமையா; என்னைச் சுமுகனென்று அழைப்பார்கள்.

கோ. சுமு.—அட, பாவிப்பயலே! எனக்குரிய வேலையைப் பிடுங்கிக்கொண்டதோ டிராமல் என் பேரையுமோ வைத்துக் கொண்டுவிட்டாய்! என் வேலையினால் என

க்கு நல்லபேர் கிடைக்காமற் போயிற்று; இந்தப் பேரை வைத்துக்கொண்டிருப்பதிலும் குணமில்லை. வாஸ்தவத்தில் உன்பேர் சுமுகனுயிருப்பின் இந்தப் பேருக்காக நீ உருவம் மாறி யிருத்தல் வேண்டும். அல்லது உனக்குக் கழுதையென்று பெயரிருத்தல் வேண்டும்.

மோகனுங்கி.—(உள்ளே யிருந்தபடியே) கடைத்தலையில் என்ன பேரிரைச்சல்? சுமுகா! தெருக்கதவண்டை யார் இருக்கிறது?

கோ. சுமு.—மோகனமே! யஜமானன் உள்ளே வரவேண்டாமோ?

மோக.—பாஷை யிட்டிருக்கிறேன்; உள்ளே வருவது கூடாது! எனது மைத்துனஞர் இன்று இப்பொழுது தான் வீட்டுக்கு வந்திருக்கிறுர்; நீ பேசாமற்போ.

கோ. சுமு.—ஓ, ஓ, தெய்வமே! இதென்ன வெட்கக்கேடு! நான் சிரிக்கும்படி யல்லவோவாயிற்று. அட, பாவி! நான் இந்த வாசற்படியில் நீ கதவைத் திறந்துவிடுமளவும் பழியாய் விழுந்து கிடக்கிறேன் பார்.

மோக.—நீ பழியாய்க்கிடந்தாலுமில்லை; பிராயோபவேசஞ் செய்து பிராணனை விட்டாலுமில்லை, போ.

சி. சுமு.—மோகனுங்கியென்று பேரிடப்பட்டிருக்கிறபெண் நீதானென்றால் அம்மா, மோகனமே! நீ அவன்கேட்ட கேள்விக்குத் தக்கபடி விடை கூறினுய்.

கோ. சுரு.—முட்டாள் பெண்ணே! நான் கூப்பிடுவது இன்னும் உன் காதிற்படவில்லையா என்ன? கதவைத்திறந்துவிட இன்னும் என்ன தடை?

மோக.—நான் உம்மையன்றே கேட்க வேண்டுமென்று இருந்தேன்.

சி. சுமு.—நீதான் முன்பே மாட்டேனென்று சொல்லி விட்டாயே.

கோ. சுமு.—ஆம்; அப்படித்தான்; வா, நீ எனக்கு நல்லு தவி; பதிலுக்குப்பதில் வெகு அழகாய்ச் சொன்னாய்

கோ. கரு.—அட, கேடுகெட்டபயலே! கதவைத் திறந்து விடடா.

மோக.—யாருக்காகக்கதவைத்திறத்துவிடுகிறதுசொல்லும்.

கோ. சுமு.—ஐயா, இந்தக்கதவைக் கெட்டியாக ஒருஉதை உதையும் பார்ப்போம்.

மோக.—கால் நன்றாய் நோவும்படி உதைத்துக் கொள்ள ட்டும்.

கோ. கரு.—மூடப்பெண்ணே!நான் கதவைஉடைத்துத்திற ந்துவிட்டால்அப்பொழுது தெரியும்நீபடும்வருத்தம்.

மோக.—இதில் வருத்தமென்ன வந்தது; இந்த ஊரில் ஒரு தொழுமரந்தானா கிடையாமற்போயிற்று? சொல்லும்

காஞ்சன.— (உள்ளிருந்தபடியே) நமது தெருக்கதவண் டையிலிருந்து கொண்டு இத்தனை அமளிசெய்கிற வன் யாரடா?

சி. சுமு.—அம்மா, நான் உள்ளதைச் சொல்லுகிறேன், கேளும். உங்களூரில் நாடோடிப்பயல்கள் தெரு வில் மலிந்திருக்கிறார்களென்று காண்கின்றது.

கோ. கரு.—காதலியே! நீ உள்ளே தான் இருக்கிறாயோ? அப்படியானால் நீ இதற்கு முன்னே தானே வந்து கதவைத் திறந்து விட்டிருக்கலாமே.

காஞ்சன.—அட, சண்டாளா! நானா உன் மனைவி? யாரைப்பார்த்து இப்படி யழைக்கிறாய்! சீ, சீ, ஓடிப் போ. நீ இங்கே நில்லாதே.

கோ. சுமு.—ஐயா, இதென்ன பெருஞ்சங்கடம்; இவற்றை யெல்லாம் பார்க்க என் மனம் வாடுகிறது.

நீலமேக.—இங்கே நமக்கு விருந்துமில்லை வேட்டலுமில்லை; நமக்கு இதுவும் வேண்டாம்; அதுவும் வேண்டாம்.

வசுமி.—விருந்து உயர்ந்ததோ, அல்லது வருந்துதல் தான் உயர்ந்ததோ என்று நாம் இன்னும் தர்க்கஞ் செய்து

கொண்டிராமல் இரண்டையுமே வேண்டாமென்று இப்பொழுது இந்த இடத்தைவிட்டுப்போவதேநன்று.

கோ. சுமு.—ஐயனே, ஆசாரியாரும், செட்டியாரவர்களும் கதவண்டையிலே நிற்கின்றார்களே; அவர்களைத் தாங்கள் இங்கே அழைக்கவேண்டாமோ?

கோ. கரு.—இன்றைக்கு ஏதோ நமக்குக் காற்றுப்பிரதிகூலமாக அடிக்கிறாப்போலக் காண்கிறது; ஆனதினால் தான் உள்ளே போகத் தடைப்பட்டது.

கோ. சுமு—தங்களுடை மெல்லியதாயிருந்தால் தாங்களிப்படிச் சொல்லியிருக்கமாட்டீர்கள்; தங்களுக்கென்று நல்ல உணவைச் சுடச்சுட வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்; தங்கள் தலையிலெழுத்து "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை" யென்றபடி அதை உண்ணக் கொடுத்து வைக்காமற் குளிர் உதற நடுத்தெருவில் நிற்கலாயிற்று. தங்கள் மனைவியார் தங்களைப் பெண்ணுக் காளாக எண்ணி, வேண்டியபோது விலைக்கு வாங்கி வேண்டாதபோது விற்று வருகிற ஆடு மாடுகளைப் போல நடத்துகிறார்.

கோ. கரு.—சுமுகா! ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு வா; இந்தக் கதவை உடைத்தெறிகிறேன்.

சி. சுமு.—அப்படியா கதவை உடைக்கிறமட்டில் வந்துவிட்டதா? போக்கிரிப்பயலே! உன் மண்டையை உடைத்துவிடுகிறேன் பார்.

கோ. சுமு.—என்ன ஐயா! உம்மோடுபேசுவது கூடக்கூடாதா? பேச்சு மூச்சு; மூச்சு காற்று; காற்று ஆகாயம்; இவ்வளவுதானே; கண்டாலொன்றும், காணவிட்டால் வேறொன்றாகவும் சொல்லுவது கூடாதென்றுஎண்ணி உள்ளதைச்சொன்னேன்.

சி. சுமு.—உனக்குக் கேடுகாலந்தான் பிடித்திருக்கிறது என்று எண்ணுகிறேன்; நல்லது, உன்னைவிட்டேன், தப்பிப்பிழைத்து ஓடிப்போ.

கோ. சுமு.—என்னடா? உனக்குச்சொந்தமா? சீ, சீ, கத வைத்திறந்துவிடு. பறவைகளுக்குச் சிறகும், மீன்க ளுக்குச்செதிளும் இல்லாமற்போகிறகாலத்தில் நான் உங்களுக்குக் கதவைத் திறப்பேன்.

கோ. கருணு.—நல்லது இந்தப் பயல் எளிதில் வழிக்கு வா ரான், யாரையாவது கேட்டுச்சற்றுக்கட்டப்பாரை ஒன்றை இரவலாக வரங்கிக்கொண்டுவா.

வசுமி.—ஐயா! புத்திமான்களுக்குப் பொறுமை யன்றோ பெரிது; வீணே பதட்டப்படவேண்டாம்; தாங்கள் இவ்வாறு செய்யப்புகுவது தங்கள் பெருந்தன்மை க்கு அழகன்றாகும்; இத்தனை காலமாக ஊசிபோகிற வழியே சரடு செல்வதைப்போலத் தங்கள் கருத்துக் கிணங்கி ஒருவழிப்பட்ட உத்தமியான இந்தப் பத்தி னியின் மேல் இத்தனை சீற்றங்கொள்வது தங்களுக் குத் தருமமன்று; நாடும் நகரமும் நன்கறிய நல்லா ளெனப் புகழ்பெற்ற இந்த அருந்ததியைப் பொல் லாதவளென்று தாங்கள் பழிக்கப் புகின் தங்களைப் பித்தனென்றே உலகம் பழிக்கும். இத்தனை கால மாக நாங்கள் எல்லோரும் அறிந்தமட்டில் இவளைப் படிதாண்டாப் பத்தினியென்று கூசாமற்கூறுவோம்; நற்பெண்டிர்க்குரிய நாணம், மடம், பயிர்ப்பு, அச் சம் என்கிற நற்குணங்கள் எல்லாம் இம்மாதரசியி னிடத்துக் குடிகொண்டிருக்கின்றன; இன்று இவள் தங்களை யுள்ளே விடாமல் வாசலின் கதவுக்குத்தாழி ட்டதற்கு ஏற்ற காரணம் இல்லாதிராது; அந்தக் காரணம் இனிமேல்தான் வெளிப்படும்; இனிமேலும் தாங்கள் இங்கிருப்பது அழகன்று; இன்று நாம் எல்லோருமே சரஸ்வதீ விலாசத்துக்குச் சென்று அங்கே தானே போஜனம் செய்வோம் வாருங்கள்; அந்திப்பொழுதில் அங்கிருந்து தாங்கள் மட்டும் தனியே இங்கு மெள்ள வந்துபார்த்தால் இதன் உண்

மை இன்னதென்று தங்களுக்குத் தெரியவரும் ; நான் இவ்வாறு சொல்வதைத் தாங்கள் மதியாமல் கோபத்தையே பிரதானமாகக்கொண்டு அதிக ஜனப் பழக்கமான இந்தராஜமார்க்கத்தில் நடுப்பகலில்பஹி ரங்கமாகக் கல்லடி மங்கைப்போலக் கதவையுடை க்கஆரம்பித்தால் அதைச்சாதாரண ஜனங்கள் கண்டு எத்தனையோ விதமாக இழிவாகப் பேசிப் பழிக்கும் படியாகும்; அதனால் தாங்கள் இத்தனை காலமாகப் பெற்ற பேருக்குக் குறைவுண்டாகும்; மாசற்ற புகழ் பெற்றாரெனினும் அவர் சரிதையில் ஏதேனும் ஒரு குற்றங்குறை யுண்டானால் அது பெரும்பழியாய் அவர் தலையோடுமட்டும்போகாமல் இந்தப்பூமியுள்ள நாள் உள்ளமட்டும் வழுக்குடைத்தாய் வழி வழியே அவரது மரபினரையும் பற்றிக்கெடாதிருக்கும். ஆத லினால் "கோபம் பாபம் பாபம் சண்டாளம்." என்ற தை உபதேசமாகக்கொண்டு தாங்கள் கொண்டிருக் கும் சிற்றத்தை மாற்றிவிடவேண்டும்.

கோ. கருணை.—நண்பரே! தாங்கள் சொல்லியது முற்றுமே உண்மை; ஆதலால் தங்கள் அமிர்தமொழிக்கு மாறு சொல்லாமல் கட்டுண்டு ஒப்புக்கொண்டேன்; ஆயினு ம் ஒன்றுண்டு; எனக்கோ இது சந்தோஷமெல்லாம் போய்த்துக்கப்படுங்காலம், அப்படிக்கிருந்தும் நான் சிங்கார சேஷ்டையுடைய புது மாப்பிள்ளையைப் போல மேலுக்குத் தளுக்காகக் காட்டி நடிக்கவேண் டும். இந்நகரில் சகலகலாவல்லி யென்ற ஓர்விலைமகள் இருக்கிறாள்; அவள்வார்த்தை சொல்ல ஆரம்பித்தால் பிரகஸ்பதி பகவானும் அவளுடைய சாதுர்யமான அமுதவாக்கைக்கேட்பதற்காக இவள் ஸரஸ்வதிதேவி தானோவென்றையுற்று அவளது வாயைப்பார்த்திரு ப்பார். அவள் அழகில் லக்ஷ்மீதேவியை நிகர்ப்பாள். ஆயினும் அவளுக்குத் தான் என்னும் ஆணவம் மட்

டுந்தான் சற்றே அதிகம். என்றாலும் நல்லகுணவதி. இன்று தாங்கள் அவள் வீட்டிலே தான் என்பொருட்டாக விருந்துண்ணப் போகவேண்டும். இவ்வாறு நான் செய்யாவிடில் என் மனையாளின் கொட்டமடங்காது; அவள் என்னை மதிக்காமல் தன மதம் கொண்டு இறுமாப்புற்று என்னை இப்படியே தான் எத்தனையோ முறை அவமதித்திருக்கிறாள். எப்படியிருந்தாலும் இருக்கட்டும்; அது தாசி வீடாயிற்றேயென்று தாங்கள் இந்த விஷயத்தில் சங்கைப்படுவது கூடாது.—நீலமேகஆசாரியரே! நீர் இக்கணமே உமது வீட்டிற்குச்சென்று அந்தக் கனகமாலையை எடுத்துக்கொண்டு வந்துசேரும்; அதன் வேலை முன்பே முற்றுப்பெற்றிருக்கிறதன்றோ? அதை எடுத்துக்கொண்டு நீர் நேரே சகலாகலாவல்லி யுறைவிடமாகிய வாணீவிலாசம் வந்துசேரவேண்டும். நான் வீம்புக்காவது அந்தக் காஞ்சனமாலையைச் சகலகலாவல்லிக் களித்துவிடப்போகிறேன், நல்லது நீர் சீக்கிரம்போய் வாரும். என் வீட்டார்க்கே என்னை வீட்டைவிட்டு ஓட்டிவிட்டமையால் நான் அயலார் வீட்டிற்குச் சென்றால்அங்கு என்னாகுமோவென்பதையும் கண்டு கொள்ளவேண்டும். நான் அங்குச்சென்று அவள் வீட்டுக்கதவைத் தட்டிப்பார்க்கிறேன்.

நீலமேக.—இன்னும் ஒரு யாமத்துக்குள்ளே மாலையையெடுத்துக்கொண்டு அவ்விடத்துக்கு வந்து விடுகிறேன்.

கோ. கருணை.—நல்லது அப்படியே செய்யும்; இவ்வாறாக நான் பரிகாசம் செய்வதில் எனக்குக் கொஞ்சம் பொருட்செலவுமட்டுந்தான் உண்டாகும்.

மூன்றாவது அங்கம்.

முதல் களம் முற்றிற்று.

## புத்தக வரவு.

எட்வர்ட் சக்ரவர்த்தி:—இந்நூல் கோயமுத்தூர் பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் இயற்றியது. 'திரு அவதாரம்' முதலாக 'குணாதிசயங்கள்' என்பது ஈறுகவுள்ள 17-அதிகாரங்களை யுடைய இது இனிய செந்தமிழ் நடையுடையது. மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியாரவர்களின் நற்சரிதையை யாரும் எளிதிலுணரும்படி கடின பதங்களில்லாமல் அழகான எளிய நடையில் எழுதிய பண்டிதரவர்களின் திறமை பாராட்டத்தக்கதே. விஷயத்தையும், அது பயன்படுமாற்றையுங் கருதாது தம் தமிழ்ப் புலமையைவெளிப்படுத்துதலே முக்கியநோக்கமாகக்கொண்டு சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியவற்றினின்று செய்யுட்களையும், நிகண்டுவிலுள்ள கடின பதங்களையும் அதிகமாக வரையும் வழக்கம் இப்பண்டிதரவர்களிடத்து இல்லாமைக்கு யாம் பெரிது மகிழ்கின்றோம்.

ஆங்கிலப் பயிற்சியும், அப்பயிற்சியுடையார் பழக்கமும் இப்பண்டிதரவர்களிடத்து நிரம்பவும் உளவென இந்நூன்முகத்தானே யாமறிகின்றோம். வசன நூல்கள் தமிழ்மொழிக்கண் இல்லையென்று கூறுவார் குறையை நம் பண்டிதரவர்கள் இது போன்ற பல நூல்களை யியற்றி ஒருவாறு நீக்குவார்களாக. இந்நூற்கு கிருஷ்ணா ஜில்லா செஷன் ஜட்ஜ் V. வேணுகோபால செட்டியாரவர்கள் முகவுரை யெழுதியிருக்கின்றார்கள். ராயல் 16-mo வில் 176 பக்கங்களடங்கியது. விலை அணா 12. சென்னை: ஜீ. எ. நடேசன் கம்பெனியார் பதிப்பித்தது.

---

மதுரை பிர்ம்மஞான சங்கத்தார் (Madura, Theosophical society) துண்டு பத்திரிகைகள்.—மதுரைப்பிர்ம்மஞான சங்கத்தார் நம்முடைய ஆர்ய மதாபிவிர்த்தியைப் பெரிதும் சிந்தித்து நம்மதக் கோட்பாட்டை யாரும் எளிதில் நன்றாக உணரும்படி அடிக்கடி தமிழில் துண்டு பத்திரிகைகளை ஆயிரக்கணக்காக அச்சிட்டுப் பிரசுரம் செய்து வருகின்றார்கள். சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த லீலை, பிரகிருதியினுண்மையிற் பரமனைக் காணலாம், மிதுனம், நாமிருக்கும் வீடு, அத்வைத மதம், சிவாலயம் என்ற இப்படிப்பட்ட பலபல அரிய விஷயங்களடங்கிய பத்திரி

கைகள் வரப்பெற்றோம். மதத்தை முன்னிருந்த உன்னத நிலைக்குக் கொண்டுவருதற்குள்ள முக்கிய வழிகளில் இதுவும் சிறந்ததொன்றாகுமென்பதற் கையமில்லை. இது போலவே தஞ்சை, திருநெல்வேலி, திரிசிராப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள பிர்மஹ ஞானசங்கத்தாரும் துண்டு பத்திரிகைகளைப் பரப்புவது மிக்க உபகாரமாகும். அன்றி மேற்கூறிய பத்திரிகைகளை மிகுதியாக அச்சிடுவித்து வாங்கியளித்தலும் நன்மையானதே.

---

இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச தர்ப்பண கண்டண நியாய வச்சிர குடாரம் :—இஃது "இராமலிங்கபிள்ளை பாடல் ஆபாச தர்பணம்" என்னும் பெயர்கொண்டெழுந்த புத்தகத்தை நியாயவாயிலாகக் கண்டிப்பதோர் தமிழ் வசன நூல். இதனை யியற்றினார் ம. தி. பானுகவியென்பார். ஞானரஸப்பாக்களை யியற்றி உலகெல்லாம் பரவிய பெரும்புகழ் படைத்த நம்பிள்ளையவர்களைத் தூஷிப்பதற்கென்று எழுவார் யாரே! "குற்றமே தெரிவார் குறுமா முனி—சொற்ற பாவினு மோர்குறை சொல்வரால்" என்றபடி அழுக்காறு என்னும் பாவியாற் றூண்டப்பட்டு நம் வள்ளலார் பாற் குற்றங்காண வந்தாரை வாயடங்கும்படி இந் நூலையெழுதினார் திறமைபாராட்டத்தக்கதே; எனினும் இந்நூலால், பிள்ளையவர்கள் விஷயமான தூஷண நூல் ஒன்றிருக்கின்றதென்று கூட அறியார்க்கு அத்தகைய நூலை வாங்கும்படி ஏற்படுகின்றதேயென்று நாம் வருத்தம் பாராட்ட நேர்கின்றது.

---

செந்தமிழ் :—செந்தமிழின் ஆவணிமீ பகுதி வரப்பெற்றோம். 'பாண்டவர்காலம்' என்னும் விஷயத்தைப் பற்றி ஸ்ரீமத்-ஆ. முத்துத் தம்பிப் பிள்ளையவர்களும், ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களும் எழுதியிருக்கின்றார்கள். பிள்ளையவர்கள் "எமது வேத புராணேதிகாசங்களின் பழமை கண்டு ஆற்றொணுப் பெரும் பொறாமை கொண்டுழலும் ஐரோப்பிய பண்டிதர் சிலருடைய கொள்கையை மெய்யென மேற்கொண்டு நம்மவருள்ளுஞ் சிலர் சில விஷயங்களுக்குக் கால நிரூபணஞ்செய்யத் தலைப்பட்டனர்" என்று விஷயத்தை யாரம்பிப்பதும், "நமது தெய்

வப் புலவர்களுக்கும் உத்தமகவிகளுங் கூறிய காலங்களை நிராகரிக்கப் புகுதல் முறையா? தங்காலத்துள்ளார்க்கும் தமக்குப் பின்னுள்ள எதிர் காலத்துள்ளார்க்கும் நன்மை பயக்குமென் றெண்ணிக் கைமாறுகருதாது நூல்களை இயற்றிவைத்துப் போன உபகாரத்துக்கு நாம் செய்யுங் கைமாறு அவர்கூறிய காலங்களை நிராகரிப்பதோ?" என்றும், "நமது முன்னோர் வாக்கினும் ஐரோப்பியர் ஊகவுரை சிறந்ததாமோ", என்றும், "ஐரோப்பியர் பெரும்பாலாரும் உலகந் தோன்றி 6000, வருஷமெனக் கொள்பவராதலின் அவர்கள் நமது புராணேதிகாசங் கூறுங் காலங்களை ஒப்புக்கொள்ளார்கள். அக்கொள்கை அவர் மனத்தை விட்டு ஒரு சிறிதும் நீங்காது. அதனை மனத்திடை யிருத்திக்கொண்டே நமது காலங்களுக் கெல்லாம் ஊனங் கற்பிக்கின்றனர்" என்றும் நமது முன்னோர் பெருமையையும் பிறமதத்தாரது போலிக் கொள்கையோடு அன்னோர் துரபிமானித்தையும் இனிது விளக்குவதும், "நன்னீர் தேடி நச்சுப் பொய்கை கண்டாராயினர்" என்று நம்மவர் ஐரோப்பியராற் பெருஞ்சுட்டுப் பெறவேண்டி அனர்த்தப்படுதலையுணர்த்துவதும், "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்குப்—பொய்யா விளக்கே விளக்கு. என்னுந் திருக்குறளுக் கிலக்கியமானவர்களன்றோ நம்முன்னோர்கள். ஆதலால் அவர்கூறிய காலங்களைச் சித்த சமாதானத்தோடும் உண்மையெனக் கொள்ளல் வேண்டும். விளங்காமைகொண்டு ஒன்றைப் பொய்யெனத் தள்ளலாகாது. இப்போது விளங்காதன பின்னர் அறிவு விருத்தியாங்காலத்து விளக்கமாகும்" என்று விஷயத்தை முடிப்பதும் பாராட்டத்தக்கன.

ஐயங்காரவர்கள் 'பாண்டவர்காலம் 4500 வருஷங் கட்கு முற்பட்டதென்பது வெள்ளிடைமலையன்றோ' என்ற பிள்ளையவர்களின் கூற்றை நியாயவாயிலாக மறுக்கின்றார்கள். 'பாரதகாலம் 5000 ஆண்டு இல்லை யென்பார்கள் கூற்றை மறுத்துப் பிள்ளையவர்கள் நாட்டுவார்களாயின் எமக்கெல்லாம் உண்மையிற் பேருவப்பே' என்றெழுதுவதால் உண்மைக்குவக்கும் ஐயங்காரவர்களின் குணம் புகழத்தக்கதாம்.